நாட்டுப்புற வாழ்வியல்

டாக்டர்.
இரா.பாலசுப்ரமணியன்

நாட்டுப்புற வாழ்வியல்

டாக்டர் இரா. பாலசுப்பிரமணியன்
தமிழியற்புலம்
அழகப்பா பல்கலைக் கழகம்
காரைக்குடி – 623003

சத்யா வெளியீடு
44, சி.எஸ்.ஆர் நகர் அனெக்ஸ்,
திருநகர்
மதுரை—625006

BIBLIOGRAPHICAL DATA

Title of the book	:	Nattuppura Vazhvial
Author	:	Dr. R. BALASUBRAMANIAN M.A., M.Phil., Ph.D., D.G.T. Dept. of Tamil Alagappa University Karaikudi — 623003
Publisher	:	Sathya publications, 44, C.S.R Nagar Annex, Vishalakshi Road, Thirunagar, Madurai—625006
Language	:	Tamil
Edition	:	First
Date of Publication	:	1990
Paper Used	:	10.9 Kg. White Printing
Size of the book	:	12.5×18 c.m.
Printing types used	:	10 pt.
Number of Pages	:	161
Price	:	Rs. **20**
Printers	:	SRI YESES PRINT HOUSE 132, Jani John Khan Road, Royapettah, Madras—14
Subject	:	Folklore - Folklife



கலையன்னைக்குக் காணிக்கை

நிலையான கல்விபுகழ் காரைக் குடியில்
நிலைத்திட்ட அழகப்பா பல்கலைக் கழகம்
மலையாக உயர்ந்திடவும் மதிப்போர் தம்மை
மனதார உயர்த்திடவும் மன்னுங் கல்வி
கலைத்திறன்கள் கொண்டோர்க்கும் கருணை காட்டும்
கலைஞானத் துணைவேந்தாம் இராதா என்னும்
கலையன்னை தொண்டிற்கு இந்த நூலைக்
கருத்துடனே காணிக்கை ஆக்கி னேனே !

உ
சிவ சிவ

தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே.

அணிந்துரை

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

நாட்டுப் புறங்களில் சிறந்த நாகரிகம் கால்கொள்வது இயற்கை. அது போலவே, நாட்டுப்புற வாழ்வியல், முற் காலத்தில் சிறந்திருந்தது. நாட்டுப்புற வாழ்வியலின் தரம் நாளுக்கு நாள் இப்போது குறைந்து வருகிறது.

இனிய அன்பர் டாக்டர் இரா. பாலசுப்பிரமணியன் அவர்கள் எழுதிய ''நாட்டுப்புற வாழ்வியல்'' என்ற நூலைப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. நல்ல முயற்சி, வரவேற்கப் படவேண்டிய முயற்சி.

ஆசிரியர், நாட்டுப் புறத்தில் பாடப் பெற்ற பாடல்கள், வழங்கிய பழமொழிகள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு இந்த ஆய்வு நூலை எழுதியுள்ளார். அருமையும் பெருமையும் உடைய முயற்சி.

''ஆதிநல்ல கைலையிலே
ஆங்கே யார் யாரே வீற்றிவர
ஆதிபகவானும் பார்வதியும்
பச்சை மாலுடனே லட்சுமியும்
தேவர்களும் மூவர்களும்
தெய்வம் நல்ல கைலையிலே
இந்திரனும் சந்திரனும்
இமயவனும் சூரியனும்
மறையவனும் நான்முகனும்
....

என்ற பாடலைக் கருவாகக் கொண்டுள்ள விளக்கம், மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. மேலும், சிவத்தைச் சூரியனாகவும் சந்திரனை உமையாகவும் எண்ணி வழிபாடு செய்வதாக எழுதியுள்ள பகுதி கருதத் தக்கது. ஆம்! சிவனின் ஆற்றலை வாங்கி, உயிர்களின் ஆற்றலுக்கு ஏற்ற வாறு கூட்டுவதுதானே அம்மையின் பணி.

பதினெட்டாம்படிக் கருப்பர் வழிபாடு பற்றிய செய்திகள் அறிவுக்கு விருந்தாக அமைந்துள்ளன. அதாவது, திருக் கோயில்களில் திருவாபரணங்கள் பாதுகாப்பு நிர்வாக முறை எவ்வளவு நேர்த்தியாக அமைந்திருக்கிறது! அழகர் திருவாபரணங்கள் காவல் பொறுப்புடையவர் பதினெட் டாம் படிக் கருப்பர்.

சிறுதெய்வங்கள் வழிபாட்டைப் பற்றிய ஆய்வு பயனுடைய ஆய்வு. சிறுதெய்வ வழிபாடு தொடர்பாக நிலவும் கதைகளை மூன்றாகப் பகுப்பாய்வு செய்துள்ள முறை பாராட்டத்தக்கது. பழமரபுக் கதைகளில்—நாட்டுப் புறக் கதைகளில் புனைவுகள் இருப்பது அருமை. புராணக் கதைகளில் புனைவுகள் தவிர்க்க முடியாதவை. வரலாற்றுப் போக்கில் கொடுமை இழைக்கப்பட்ட மகளிர்கூடத் தெய்வமானது தெரிகிறது. ஆம்! ...... வீரச்சின்னம்மாளுக்கு நமது பிரார்த்தனை! இனிமேலும் வீரச்சின்னம்மாளைப்போன்ற தெய்வங்கள் உருவாகாது அருள்பாலிக்க வேண்டும்.

பழமொழிகளில் நிறம் என்ற கட்டுரை, மிகவும் நல்ல கட்டுரை. பழகிய வாழ்க்கையில் பழமொழிகள் தோன்றின. நிறம் பற்றிய பழமொழிகள் 160 என்று கண்டுள்ளார். இக் கட்டுரையில் நிறங்களின் தோற்றம், தன்மை, பயன் முதலியன விரிவாக எழுதப்பட்டுள்ளன. "தூய்மை, விருப்பம், கள்ளமில்லாச் சிந்தை ஆகிய இயல்புகள் வெள்ளையில் வெளிப்படுகிறது. பலகாலும் படித்து வாழ் வியலில் கடைப்பிடிக்க வேண்டிய பகுதி.

இப்புத்தகத்தில் நாட்டுப்புற விளையாட்டுக்கள் பற்றிய கட்டுரையும் உண்டு. கிராமப்புறங்களில் நிலவும் விளையாட்டுக்களை,

1. உடல்திறன் விளையாட்டுக்கள்
2. அறிவுத்திறன் விளையாட்டுக்கள்
3. வாய்ப்புநிலை விளையாட்டுக்கள்
4. மனமகிழ்ச்சி நிலை விளையாட்டுக்கள்

என்று நான்காக இனம்பிரித்துக் காட்டியுள்ளமை பாராட்டு தலுக்குரியது. பரணி விளையாட்டு - நல்ல முறையில் அமைந்துள்ள விளையாட்டு. இன்று பெருவழக்கில் இல்லை. மீண்டும் அறிமுகப்படுத்தினால் நல்லது.

நம்முடைய நாட்டுக் கிராமமக்களின் வாழ்வியலை விளக்கும் அற்புதமான ஒரு நூலைப் படிக்கும் பேறு கிடைத்ததில் மனநிறைவு; மகிழ்ச்சி! நூலாசிரியரின் ஆய்வுத் திறனும் எழுத்தும் என்றும் நினைவில் நிற்கக் கூடியவை. பலரும் படித்துப் பயன்பெற நமது அழைப்பு! இன்ப அன்பு!

குன்றக்குடி
29-5-1990

அடிகளார்

நன்றியுரை

நாட்டுப்புறத்தாரின் வாழ்வியலோடு தொடர்புடைய நம்பிக்கைகள், வழிபாடுகள், பழமொழி வழக்காற்றில் நிறம் பற்றிய எண்ணங்கள் போன்றவை இந்நூலில் ஆய்வு முதன்மைப் பொருள்களாக அமைந்துள்ளன. மானிடவியல், சமூகவியல் போன்ற பிற துறைகளின் கோட்பாட்டுச் சிந்தனைகளுடன் நாட்டுப்புற ஆய்வுத் தரவுகள் விளக்கம் பெறுகின்றன. தேவையான இடங்களில் இலக்கிய வழித் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. நாட்டுப்புற வாழ் வியல் தொடர்பான நூல்கள் வளரவேண்டிய சூழ்நிலையில் இந்நூல் வெளிவருவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

எங்கள் துணைவேந்தர் டாக்டர். இராதா தியாக ராஜன் அவர்கள் முயற்சிக்கும் திறமைக்கும் ஊக்கம் கொடுக்கும் பண்பாளர் ஆவார்கள். அவர்களின் அன்போடும் வாழ்த்துக்களோடும் தான் இந்நூல் வெளிவருகிறது.

அருள்தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் இந்நூலுக்கு நல்லதொரு அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள். அவர்களுக்கு என் பணிவான நன்றிகள்.

டாக்டர். ச.வே. சுப்பிரமணியன், அருள்தந்தை வி.மி. ஞானப்பிரகாசம் சே.ச., பேராசிரியர் கோ. சங்கர ராசுலு, டாக்டர். க.ப. அறவாணன் போன்றோர்கள் என் வளர்ச்சிக்கும் முயற்சிக்கும் ஆக்கமும் ஊக்கமும் கொடுப் பவர்கள். அவர்கள் அனைவருக்கும் அன்பான நன்றிகள். நூல் உருவாக்கத்திற்குப் பல வழிகளில் துணைநின்ற இராம சாமித் தமிழ்க்கல்லூரி முதல்வர் தெ. முருகசாமி அவர் களுக்கும் நன்றியினை உரித்தாக்குகிறேன். நூலைச் செம்மை யுற அச்சிட்டுத் தந்த நண்பர் நா. செல்வம் அவர்களுக்கும் என் நன்றி.

இவண்

இரா. பாலசுப்பிரமணியன்

உள்ளே

1. இயற்கை வழிபாடு

இன்றையச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கான பல காரணங்களுள் சமயமும் ஒன்று. சமயம் பல பரிணாம வளர்ச்சிகளைப் பெற்று (Evolution of Religion) வளர்ந்து வந்துள்ளது. உலக இயக்கங்களுக்குப் புறம்பின்றி அமையும் இயற்கைப் பொருட்களெல்லாம் வழிபடப்பட்டன. சூரியன், சந்திரன் போன்றவைகளை இங்குக் குறிப்பிடலாம். தீ, மழை, இடி போன்ற இயற்கைப் பொருட்களும் வழிபாட்டு முறையில் இடம்பெற்றன. அவ்வகையில் இயற்கை வழிபாடு (Natural Phenomena) தோற்றம் பெற்றதெனலாம்.

உயிரில்லாப் பொருட்களிலும் இயற்கை நிகழ்ச்சிகளிலும் உயிரியக்கம் இருப்பதாக நம்பினர். (inanimate beings as animate) அம்முறையில் ஆவியுலகக் கோட்பாடு இடம்பெறலாயிற்று. இந்நிலை வளர்ச்சி பெற்று அப் பொருட்களுக்கு ஆளுருவாக்கம் (personification) செய்யும் நிலை உருப்பெற்றது. அவ்வழியில் மனித இனத்தைச்-சாராதவைகள்கூட மனிதப் பண்புகளைப் பெற்றிருப்பதாக நம்பினர். இந்நம்பிக்கையே மன்னியல்புசார்த்தும் கொள்கையாகும் (Anththropomorphism) இந்நிலை வளர்ச்சிபெற்றபின்னரே தெய்வ உருவாக்கநிலை (Deitification) வலுப்பெற்றிருக்க முடியும். அந்நிலையில் வழிபாட்டு மரபுகள் சமயவளர்ச்சிக்கு வித்திட ஆரம்பித்தன.

மன்னியல்பு சார்த்தும் கொள்கையை இவ்விடம் தெளிவாக்கிக்கொண்டால் இயற்கை வழிபாட்டின் இயல்புகளை

யும் தெளிவாக உணர்ந்துகொள்ளஇயலும். 'Anthropos' என்ற சொல் மனிதனையும் 'Morphe' என்ற சொல் வடிவத்தினையும் குறிப்பதாகும். தெய்வத்திற்கு மனித வடிவங் கற்பித்தல் என்பது பொதுநிலைச் செய்தியாகும். புலமை சார்ந்த தத்துவ விசாரணைகளுக்குட்படாத மனிதன் தன் அனுபவங்களைக் கொண்டே தெய்வங்களையும் விளக்க நினைக்கிறான் என்பதை இங்குக் கருத்தில் கொள்ளுவது நல்லது. கிறித்தவர்களின் வேதத்தில் கடவுள், மனிதனைத் தமது சாயலாகப் படைத்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார் என்ற செய்தி குறிப்பிடப்படுகின்றது. மனிதனிடம் கடவுளின் சாயல் இருப்பதாக நம்புவதை இங்குக் காணலாம். அதுபோல தெய்வத்திடமும் மனிதனின் சாயல் இணைத்துப் பேசுவது மனிதனின் இயல்பாகத் தெரிகிறது. அத்தகு தெய்வமனிதர்கள் எல்லாச் சமயத்திலும் உண்டு. அவர்களைப் பற்றிய புராணக் கதைகளின் எண்ணிக்கையளவில் வேண்டுமானால் வேறுபாடுகள் இருக்கலாம். குறிப்பாகக் கிரேக்கர்களிடையே இவ்வகைக் கதைகள் மிகுதியென ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

மன்னியல்பு சார்த்தும் முறையில் மூன்று வகைகளை இனங்கண்டு குறிப்பிடுவர். தெய்வம் மனித வடிவில்தான் இருக்கிறது என்ற நம்பிக்கை முதல்படிநிலை எனலாம் (Physical Anthropomorphism). எந்தச் சமயமும் இப் படிநிலையைக் கடக்காமல் வளர்ந்திருக்க முடியாது. மனிதனிடம் உள்ள எண்ணங்கள், உணர்வுகள் ஆசைகள் போன்றவை தெய்வத்திடமும் இருப்பதாக நம்பினர். இந் நம்பிக்கை செம்மையாக்கம் பெற்று அறமதிப்புகள் வளர்ந்த நிலை ஒரு படிநிலையாகும் (Mental or Moral Anthropomorphism). மனித அனுபவங்கள் வளர்ச்சியடைந்த நிலையில் உள்ளுணர்வுகளையும் பெருக்கிக் கொள்ள ஆரம்பித்தான். அச்சூழ்நிலையில் முற்காட்டிய இருபடிநிலைகளும்

செல்வாக்கிழந்தன. சமயத்தில் பல தெய்வ வணக்கங்கள் (Polytheism) குறைந்து ஒருமைத் தெய்வ வணக்கங்கள் (Monotheism) உருவாக ஆரம்பித்தன. தெய்வம் பற்றிய சிந்தனைகளில் ஆன்மீக ஒழுங்குகள் (Spiritual values) புகுத்தப்பட்டன. உண்மையே கடவுளின் வடிவம் (Truth is God - God is Truth), அன்பே சிவம் போன்ற சிந்தனை களை எடுத்துக்காட்டு விளக்கங்களாகத் தரலாம். இதுவே மூன்றாவது நிலையாகும் (Spiritual Anthropomorphism).

ஆதிவாசிகளிடமும் நாட்டுப்புற மக்களிடமும் முதல் அல்லது இரண்டாவது நிலையே பெரும்பாலும் இடம் பெற்றிருக்கக் காணலாம். சமய மதிப்புகள் வளம் பெற்ற மக்களிடம் மூன்றாவது நிலை இடம்பெற்றிருக்கும்.

சூரியன், சந்திரன், தீ, மழை போன்ற இயற்கைப் பொருட்கள் வழிபாட்டு நிலைக்கு வளர்ந்த விதத்தின் முற்காட்டிய கோட்பாட்டுச் செய்திகளுடன் இணைத்து இனிவரும் பகுதிகளில் விளக்கமாகக் காணலாம். தொடக்கத்தில் அவை இயற்கை வழிபாட்டு நிலையிலேயே இருந்தன. உயிர் இல்லாத இந்த இயற்கைப் பொருட் களிலும் உயிர் இருப்பதாக நம்பத்தொடங்கினர் (Animism) காலப்போக்கில் இப்பொருட்களுக்கெல்லாம் மனிதவடிவங் கள் கற்பிக்கப்பட்டன, இவ்வழியில் மன்னியல் சார்புக் கொள்கையும் (Anthropomorphism) இடம்பெறலாயிற்று. தெய்வங்களுக்குரிய தனிப்பட்ட பண்புகள் உருவகித்த பின்னர் (personification) ஆற்றல் மிக்க தெய்வங்கள் உருவாக்கம் பெற்றன. பின் இந்தத் தெய்வநிலையில் (Deitification) உருவவழிபாடும் இணைந்தது எனலாம்.

வழிபாட்டுநிலையில் தெய்வம்என்ற உயர்ந்த பொருளை வணங்குவதிலும் பன்மைக் கொள்கையும் (Polytheism) ஒருமைக் கொள்கையும் (Monotheism) இடம்பெற்றன,

பல தெய்வங்களை வழிபடும் நிலையிலிருந்து தெய்வம் ஒன்றே எனக் கருதும் நிலை வளர்ந்ததாகக் கூறுவர். இவற்றிற்கிடைபட்ட நிலையில் ஒரு கடவுளர்க்கு ஏற்றம் தரப்பட்ட சூழ்நிலையும் (Henotheism) உண்டு. இயற்கை வழிபாட்டில் சூரியவழிபாடு மட்டும் தனித்ததொரு செல்வாக்கில் சௌரமதமாக வளர்ந்த நிலையினை இங்குக் குறிப்பிடலாம்.

இயற்கையின் ஆற்றலைக் கண்டு அச்சங்கொண்டிருந்த மனிதன் அவ்வியற்கையின் ஆற்றலை அனுசரித்து வாழப் பழகிக் கொண்டான். அம்முறையில் இயற்கைப் பொருட்களுக்கும் மீறிய சக்தி இருப்பதாக நினைத்துக் கொண்டான். அந்தச் சக்திக்குள் இயற்கைச் சக்திகளும் அடக்கமென்ற எண்ண வளர்ச்சியின்மையும் அதனைச் சார்ந்த சமய எண்ணங்களும் பெருக ஆரம்பித்தன. வளர்ச்சியென்பது புதியதையும் பழையதையும் இணைத்தே அமைகிறது. நாட்டுப்புற வழிபாடுகளிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட பெருநெறி வழிபாடுகளிலும் இயற்கை வழிபாட்டின் எச்சங்களை இனங்கண்டுகொள்ளுதல் கூடும். பெருநெறி வழிபாட்டில் ஒருமைத் தெய்வச் சிந்தனை இடம்பெற்றிருக்கும். அத்துடன் தத்துவம் சார்ந்த உட்பொருள் விளக்கங்கள் மூலம் இயற்கைவழிபாடுகள் ஒருமுகப்படுத்தப்பட்ட நிலையினையும் காணலாம். சிறு தெய்வ வழிபாட்டு நெறியில் பல கடவுளர் முறை பயன்பாட்டில் இருக்கக் காணலாம். இயற்கை வழிபாட்டுக் கூறுகள் இணைப்புச் செய்திகளைப் பெற இயலாமல் தனித்தே இயங்கிவருகின்றன.

இயற்கை வழிபாட்டுச் செய்திகளைக் கோட்பாட்டுப் பின்னணியில் மீட்டுருவாக்க நிலையில் சிந்தித்தால் நாட்டுப்புறச் சமுதாயத்தின் (folk religion) உண்மைநிலையினைத் தெளிவாக உணர்ந்துகொள்ள முடியும். உலகநாடுகளில் இவ்வழிபாடு பற்றிய எண்ணங்கள் எவ்வகையில் இடம்

பெற்றிருந்தன? அம்முறையில் இயற்கை வழிபாட்டின் தொன்மநிலையினை உணர்ந்துகொள்ளுதல் கூடும். மன்னியல் சார்புக்கொள்கை வளம்பெற்றபின் தெய்வங்களுக்கு மனிதவடிவங்கள் கிடைத்தன. இந்நிலையை வேதம், புராணம் போன்றவற்றின் மூலம் மேலும் அறியலாம். அவற்றின் பின்னணியில் தனிக்கடவுளர் நிலை, துணைக் கடவுளர் நிலை போன்றவைகளையும் அவற்றின் பின்னணிக்கான காரணங்களையும் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் இயற்கை வழிபாட்டுச் செய்திகள் இடம்பெற்றிருந்தனவா? இடம் பெற்றிருந்த விதமென்ன? இவை போன்ற செய்திகளும் ஆய்விற்குட்படுத்தப்படுகின்றன. நாட்டுப்புறத்தில் இயற்கை வழிபாட்டுச் செய்திகள் எவ்வகையில் இயங்கிவருகின்றன? அச்செய்திகளின் மரபுப் பின்னணி எவைகளாக இருக்கும்? என்பதுபோன்ற ஆய்வுச் சிந்தனைகளைக் கருத்தில்கொண்டு இனிவரும் ஆய்வுரைப் போக்கு நிரல்படுத்தப்படுகின்றது. சூரியன், சந்திரன், தீ, மழை போன்ற இயற்கைப் பொருட்களின் வழிபாட்டு மரபுகள் எவ்வெவ்வகையில் அமைந்திருந்தன என்பதை விளக்கமாகக் காணலாம்.

சூரியன் :

சூரியவழிபாடு ஒரு தொன்மையான வழிபாடாகும். பழங்கால எகிப்தியர்கள் ரா(Ra) அல்லது ஆடன் (Atun) என்ற பெயரில் சூரியனை வழிபட்டனர். எகிப்திலிருந்து கிரீஸ் முதலிய மேனாடுகளுக்கும் இவ்வணக்கம் பரவியதாகத் தெரிகிறது. பாரசீகரின் தர்மநூலான ஜெகத் அவெஸ்தாவிலும் சூரியன் தெய்வமாகக் குறிப்பிடப்படுகிறான். அப்பெல்லோ என்று கிரேக்கர்களும் ஹைபீரியன் என்று ரோமர்களும் சூரியனைப் பெயரிட்டு அழைக்கின்றனர். மெக்சிகோ பழங்குடிகளான மாயர்கள் (Mayars)சூரியனுக்கு நரபலிகொடுத்து ஆடிப்பாடி வணங்குகின்றனர்.

வேதங்களில் இயற்கை வழிபாட்டுக் குறிப்புக்கள் மிகுதியாக உண்டு. பிரபஞ்ச ஒழுங்குகளை 'ரித' (Rta) என்று கூறுவர். இச்சொல்லிற்கு நேர்பொருள், பொருள்கள் 'செல்நெறி ஆகும். 'ரித' என்ற சொல் சமய ஒழுக்க, ஒழுங்கு அமைப்புக்களையும் தொடக்க காலத்தில் உட்படுத்தியே கருதியிருக்கவேண்டும். ஆதித்ய தெய்வங்களும் அவற்றின் தலைவனாகிய வருணனும் விரிவாகக் கருதப்பெறும் 'ரித' என்னும் செல்நெறியின் ஆர்வம் மிகுந்த காப்புத் தெய்வங்களாக விளங்குகின்றனர். அவ்வழியில் சூரியன், சந்திரன், அக்னி, வருணன், இந்திரன் போன்ற வேதகாலத் தெய்வங்கள் 'ரித' வகைத் தெய்வங்களாகின்றனர். இத்தெய்வங்கள் பிரபஞ்ச ஒழுக்கத்திற்கு எதிரான செயல்களிலிருந்து மக்களைக் காக்கவல்லன என்பது வேதகால மக்களின் நம்பிக்கையெனத் தெரிகிறது.

ரிக் வேதத்தில் சூரியனைப் பற்றிய செய்திகள் மிகுதியாகக் கிடைக்கின்றன. அதிதியின் மக்கள் பன்னிருவராவர். அவர்களுள் சவித்துரு என்பவன் தங்க நிறத்தவன். ஒரே சக்கரமுள்ள தேரில் ஏழு குதிரைகளைச் செலுத்தி மக்களைத் தொழில்புரிய எழுப்புகிறான். விவஸ்தத் என்று அழைக்கப்படும் சூரியன் யமனின் தந்தை ஆவான். பவிஷ்யபுராணத்தில் பெரும்பகுதி அவனுக்காகவே ஒதுக்கப்பட்டிருக்கிறது. யாக்ஞவல்கியர்க்கு சுக்லயசூர் வேதத்தைச் சூரியன் உபதேசித்தபடியால் அவ்வேதங்கள் ஆதித்யங்கள் என அழைக்கப்படலாயிற்று. கீதையில் கண்ணன் ஆதித்யங்களில் நான் சூரியனாக இருக்கிறேன் என்கிறார். ஆதித்யர்களைப் பற்றிய ஆகமக் குறிப்புகளை விஷ்ணு தர்மோத்திரம், விஸ்கர்மசாத்திரம் போன்ற சிற்ப சாத்திரங்களும் கூறுகின்றன.

அரசர்கள் தங்களைச் சூரியகுலத்தவர்கள் என்று கூறிக்கொள்வதில் பெருமையடைந்தனர். இராமாயணத்தின்

இராமபிரான் சூரியவம்சத்தைச் சார்ந்தவன். தமிழகத்தில் சோழர்கள் தங்களைச் சூரியகுலத்தவர் என்று கூறிக் கொண்டனர். இளங்கோவடிகள் சோழனைக் குறிப்பிடும் போது 'திகழொளி ஞாயிற்றுச் சோழன்' என்று குறிப்பிடு கிறார். 'செங்கதிர்ச் செல்வன் திருக்குலம்' (பதிகம் (8 25) என்று மணிமேகலையாசிரியரும் குறிப்பிடுகிறார். மூன்றாம் குலோத்துங்கனுக்கு 'கதிரவன் குலமுடி சூடியவன்' என்னும் பெயர் இருந்ததாக மெய்க்கீர்த்திகள் குறிப்பிடுகின்றன. விசயாலயனுக்குப் பின்வந்த சோழர்கள் தங்கள் பெயர்களில் ஆதித்தன் என்ற சொல்லை இடம்பெறச் செய்தனர். முதல் ஆதித்த சோழன், கண்டராதித்த சோழன் போன்ற பெயர்களை இங்குக் குறிப்பிடலாம்.

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரிநாடன் திரகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலம் திரிதலான்

என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. கனாத்திறமுரைத்த காதை (10-13) சூரியனுக்காக இருந்த கோயிலை 'உச்சிக் கிழான் கோட்டம்' என்று அழைக்கப்பட்டதைத் தெரிவிக் கிறது.

ஒரிஸ்ஸாவில் கோனார்க் என்னுமிடத்தில் சூரியனுக் காகத் தனிப்பெருங் கோயில் உள்ளது. தமிழகத்தில் சோழர்கள் காலத்தில் சூரியவழிபாடு பெருவழக்காக இருந்த தற்குச் சான்றுகள் கிடைக்கின்றன. தமிழகத்தில் திருவிடை மருதூரில் சூரியனார் கோயில் இன்றளவும் சிறப்பாக இருந்து வருவதை இங்குக் குறிப்பிடலாம்.

ஆதிசங்கரர் வாழ்ந்த காலத்தில் (கி.பி. 7) சூரியவழி பாடு ஒழுங்குபடுத்தப்பட்டது. சூரியனைத் தனிப்பெருங் கடவுளாகக் கொண்டு சௌரமதம் எழுந்தது. இந்நிலை வரலாற்றில் நீடித்திருந்ததாகத் தெரியவில்லை, தற்போது

சூரியன் பெருந்தெய்வக் கோயில்களில் சிறுகடவுளர் நிலையில் பரிவார தேவதையாகத்தான் இடம்பெற்றிருக்கிறான். மேலும் நவகோள்களுடன் இணைப்புப்பெற்ற நிலையினையும் தான் பிற்காலத்தில் காணமுடிகிறது.

இவ்வாறு தொன்ம வழிபாட்டிலும், பழந்தமிழர் பண்பாட்டிலும் இடம்பெற்றிருந்த சூரியவழிபாடு நாட்டுப்புறப் பண்பாட்டிலும் இடம்பெற்றிருந்ததைக் காணலாம். நாட்டுப்புற மக்கள் இயற்கையோடு தொடர்புகொண்ட வாழ்க்கையை உடையவர்கள். அவர்களது தலைமைத் தொழில் விவசாயமாகும். விவசாயம் சிறக்க வான்மழை சிறக்கவேண்டும். வான்மழைக்கு சூரியன், சந்திரன் போன்ற இயற்கை சக்திகள்தான் காரணமென நாட்டுப்புற மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். அவ்வகை நம்பிக்கைகள் நாட்டுப்புறப் பாடல்களில் இடம்பெற்றிருப்பதைக் காணலாம்.

வச்சண்டா முதல்சாலு
வந்தேறும் இன்பரமாம்
மூரிவளைக்கும் போது
மொளச்சி வரும் சூரியனும்
சுத்திவந்து நிண்டலவோ
சூரியனை நமஸ்கரித்தேன்

பொன்னேர் பூட்டி உழத்துவங்கும்போது சூரியனை வணங்கியபின்தான் உழவைத் தொடங்குகிறான். இவ்வாறு சூரியனை உழவுத்தொழிலின் கடவுளாகவே நினைக்கிறான்.

தென்திருவாங்கூர் மலைப்பகுதியில் வாழும் பழங்குடி இனத்தவர்களில் காணிக்காரர்களும் ஒருவர். அவர்களுடைய வழிபாட்டுக் கடவுளர்களில் சூரியனும் ஒருவனாக இருப்பதைக் கீழ்க்கண்ட பாடல்வரிகள் தெரிவிக்கின்றன.

நின்னபூமி நமஸ்கரிச்சு
ஆதித்யனெ கைதொழுது

வேதத்திலும், புராணத்திலும் ஆதித்தன் என்ற சொல்லின் பயிற்சி மிகுந்திருக்கக் காணலாம். சூரியனின் மற்றொரு பெயரான ஆதித்தன் இப்பாடல் வரிகளில் பயின்றுவருவதைக் காணலாம்.

மழைவேண்டிப் பாடும் பாடல்களில் சூரியனைப் பற்றிய செய்திகளைக் காணலாம். சிறுகடவுளர்கள் பலரையும் அழைத்து உழவு சிறக்க மழை வேண்டிப் பாடுகின்றனர்.

சந்திரரே சூரியரே
சாமி பகவானே
இந்திரரே வாசுதேவா
இப்பமழை பெய்யவேணும்

மட்டமலை அய்யனாரே
மாவூத்து வேலவரே
மழையை இறக்கிவிடு
மானுடங்க கையெடுக்க

மலையாள பகவதியே
மனங்குளிந்த கூத்தனாச்சி
மழையை இறக்கிவிடு
மானுடங்க கையெடுக்க

தவம் செய்து பெற்ற குழந்தையைத் தெய்வங்கள் முறைவைத்துக் காப்புச் செய்கின்றார்கள். அந்தத் தெய்வங்களின் வரிசையில் சூரியனார்க்கும், சந்திரனார்க்கும், இடம் இருப்பதைக் காணலாம். நாட்டுப்புறப் பண்பாட்டுச் செய்திகளைப் பிரதிபலித்து நிற்கும் தாலாட்டுப் பாடல்களில் மேற்சுட்டிய நிலை இடம்பெறக் காணலாம்.

காலைத்துணை வருவார்
கணபதியும் வல்லபையும்

மாலைத் துணைவருவார்
மயிலோனும் வள்ளியரும்
அந்தித் துணை வருவார்
அரனாரும் ஈசுவரியும்
சாமத் துணை வருவார்
சந்திரரும் சூரியரும்

கண்ணேறுபட்டால் அதனை அழிக்கும் சக்தி சூரியக் கடவுளிடம் இருப்பதாக நாட்டுப்புறமக்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். இந்நம்பிக்கையினை இவர்களின் தாலாட்டுப் பாடல்களின்வழி அறியலாம்.

கண்ணாவான் கண்ணுக்குக் கண்ணேறு வாராமல்
வெண்ணீறிடுங்கள் விளக்கெடுங்கள் திட்டிசுத்த
சுண்ணாம்பும் மஞ்சளுமாய்ச் சுத்தியெறி சூரியனார்க்கு

கதைப்பாடல்களிலும் அவையடக்க மரபு, காப்பு வேண்டிப் பாடும் மரபு போன்றவைகள் இடம்பெற்றிருக்கக் காணலாம். கதையைத் தொடங்குவதற்கு முன் விநாயகரை வணங்கிப் பல கடவுளர்களைத் துணைக்கழைக்கும் மரபு வழக்கில் இடம்பெற்றுள்ளது. அம்மரபில் சூரியன், சந்திரன் போன்ற இயற்கைக் கடவுளர்க்கும் இடம் இருப்பதைக் கீழ்க் கண்ட பாடல்வரிகள் தெரிவிக்கின்றன. கதைப்பாடல்கள் சிறுதெய்வ வழிபாட்டுடன் தொடர்பு கொண்டவை. சிறுதெய்வங்களும் பெருந் தெய்வங்களும் இணைக்கப்படும் மரபை கதைப்பாடல்களின் வழி உணரலாம். ஒருமைத் தெய்வம்பற்றிய சிந்தனைகள் துவக்கநிலையாக இடம் பெற்றிருப்பதை இங்கு உணரலாம். தலைமைக் கடவுளான சிவபெருமான் கைலயங்கிரியில் இருக்கிறார். அவரைச் சுற்றி மற்றக் கடவுளர்கள் நிற்கிறார்கள்.

ஆதிநல்ல கைலையிலே
ஆங்கே யார்யாரோ வீற்றிவர

ஆதிபகவானும் பார்வதியும்
பச்சைமாலுடனே லட்சுமியும்
தேவர்களும் மூவர்களும்
தெய்வம் நல்ல கைலையிலே
இந்திரனும் சந்திரனும்
இமயவனும் சூரியனும்
மறையவனும் நான்முகனும்
……… …………

காளிகதை என்ற கதைப்பாடலில் காளியின் பிறப்பை அறிமுகப் படுத்துவதற்கு முன் சிவன் சுட்டப்படுவது இங்கு இயல்பாகிறது. காளியினுடைய பிறப்பிற்குச் சிவன்தான் காரணம் என்ற நிலையில் சிறு தெய்வமரபு பெருந்தெய்வ மரபுடன் இணைந்து வருவதை இங்குக் குறிப்பிடலாம்.

சிவனைச் சூரியனாகவும் பார்வதியைச் சந்திரனாகவும் கருதும் போக்கைக் கதைப்பாடல்கள்வழி அறியலாம். பகவானை நோக்கி, பார்வதிதேவி சொல்கிறாள். இந்த வுலகம் தோன்றிய நாள் முதலாக நாம் இருவருமே கைலயங்கிரி மலையில் அமர்ந்திருக்கிறோம். அதாவது,

சிவபெருமான் சூரியனாகவும்
பார்வதிதேவி சந்திரனாகவும்
இருவரும் இங்கு அமர்ந்திருக்கிறோம்
…………………………

இயற்கைக் கடவுளர்கள் ஆற்றல் மிக்க உயர்ந்த கடவுளர் களுடன் இணைப்பைப் பெறும்பொழுதுதான் ஒருமைத் தெய்வவணக்கம் சிறக்கமுடியும். இந்நிலையின் ஆரம்பக் கட்டத்தை மேற்சுட்டிய பாடல்கள் கொண்டுள்ளன. சூரியன் ஆண் தெய்வமாகவும் சந்திரன் பெண் தெய்வமாகவும் உருவ கிக்கப் படுவதை இங்குக் கருத்தில் கொள்ளலாம்.

பொதுவகையில் நோக்கும்போது கீழ்க்கண்ட செய்திகள் புலனாகின்றன. இயற்கை வழிபாட்டில் சூரியன் ஒரு

தொன்ம வழிபாடாகும். வேதங்களிலும் புராணங்களிலும் சிறப்பிக்கப்பெறும் சூரியன் தனிச்சமயத்தைத் (சௌரம்) தோற்றுவிக்கிற அளவிற்கு வழிபாட்டு மரபில் உயர்ந்து வளர்ந்திருக்கிறான். சூரியனுக்கென்று அமைந்த கோயில்கள் சூரியவழிபாடு செல்வாக்குப் பெற்றிருந்த நிலைக்குச் சான்றாக அமைகின்றன. அரசர்கள் தங்களைச் சூரியன் வழிவந்தவர்கள் என்று கூறிக் குலப்பெயரைச் சிறப்பிக்க முற்பட்டனர்.

சூரியவழிபாட்டைப் பற்றிய எண்ணங்கள் நாட்டுப்புறப் பண்பாட்டிலும் காணலாம். சூரியனை நாட்டுப்புறமக்கள் இயற்கைக் கடவுளர்கள் நிலையில் அமைத்துத் தனிக்கடவுள ராகவும் சிறப்பிக்கின்றனர். பெருந்தெய்வ வழிபாட்டுடன் இணைக்கும் முயற்சியின் துவக்கத்தினைக் கதைப்பாடல் களின் வழி அறியமுடிகிறது. உழவுத் தொழிலின் கடவுளாக வும், உழவுத் தொழிலைச் சிறப்பிக்கிற மழையைத் தருபவனாகவும் சூரியன் விளங்குவதை நாட்டுப்புறப் பாடல் களின் வழி அறியமுடிகிறது. கண்ணேறுபட்டால் அதனை அழிக்கும் ஆற்றல் சூரியனிடம் இருப்பதாக நாட்டுப்புற மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர்.

சந்திரன்

வேதகாலத்திலேயே சந்திரன் இரண்டாம் நிலைத் தெய்வமாகத்தான் இருக்கிறான் (ரிக் 64, 85). தர்மனின் மகன் அல்லது கடல்களின் அதிபதியான வருணனின் மகன் எனக் கூறப்படுகிறான். அமிர்தம் எடுப்பதற்காகப் பாற் கடலைக் கடையும்போது வெளிப்பட்டவன் என்று புராணங் கள் கூறுகின்றன. உலகில் பிற புராணங்களில் குறிக்கப் படுவது போலச் சந்திரன் நீருடனும் வளமையுடனும் தொடர்பு படுத்திப் பேசப்படுகிறான். அமிர்தத்தைத் தருபவன் அல்லது சோமன் சந்திரனுடன் இணைக்கப்பட்டு

விடுகிறான். அக்னி சூரியனுடன் இணைந்து சூரியாம்சத்தைப் பெறுவதுபோல, சோமன் சந்திரனுடன் சேர்ந்து சந்திராம் சத்தைப் பெறுகிறான்.

தட்சனின் இருபத்தியெழு புதல்வியர்களைச் சந்திரன் மணந்து கொள்கிறான். ரோகிணி என்பவளிடம் மட்டும் மிகுந்த காதல் கொள்ளுவதால் மற்றவர்கள் கோபித்துக் கொண்டு தட்சனிடம் சென்று முறையிடுகிறார்கள். தட்சனுக்கும் சந்திரனுக்கும் முரண்பாடு வலுக்கிறது. சந்திர கலையில் தேய்வு அடைவதற்கான சாபத்தினைப் பெறு கிறான். சகோதரி உறவு உள்ள இலட்சுமி பார்வதியிடம் கேட்டுக்கொண்டபடி சிவனின் அருள் சந்திரனுக்குக் கிடைக் கிறது. சிவனின் தலையில் பிறையாக இடம்பெறுகிறான். இப் புராணத்தின் வழிச் சந்திரனின் நிலையைத் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம். இரண்டாம் நிலைத் தெய்வமாக இருந்தவன் தனிக்கடவுளர் என்ற நிலையிலிருந்து மாறி சிவனுடன் இணைக்கப்பட்டுவிடுகிறான்.

தமிழிலக்கியங்களில் சந்திரனைப் பற்றியச் செய்திகள் மூவகையில் இடம்பெற்றுள்ளன. அவையாவன: 1. பொது நிலைச் செய்திகள், 2. வழிபாட்டுநிலைச் செய்திகள், 3. புராணச் செய்திகள். பின்னிரண்டு வகைகளும் ஆய்விற்கு உறுதுணையாக அமையும் எனலாம்.

> பிறைநுதல் வண்ணன் ஆகின்று அப்பிறை
> பதினெண் கணனும் ஏத்தவும்படுமே

புறநானூற்றுக்கடவுள் வாழ்த்துப்பாடல் இவ்வாறு அமைகிறது. கணங்கள் வணங்கியமாதிரி தேவர்களும் சிவன் தலைமுடியிலிருக்கும் பிறையை வணங்கியதாகச் சிலப்பதிகாரமும் குறிப்பிடுகின்றது.

குழவித்திங்கள் இமையவர் ஏத்த
அழகொடு முடித்த அருமைத்து ஆயினும்
(சிலம் 2:38-40)

சந்திரன் சிவனிடம் சேர்ந்த நிலையினையும் இவ் வரிகளின் வழி உய்த்துணர இயலும். இச்சந்திரனுக்குச் சிலப்பதிகார காலத்தில் கோயில் இருந்திருக்கிறது என்பதற்குக் கனாத்திறமுரைத்த காதையிலே (10-13) சான்று காணப்படுகின்றது. சந்திரனின் கோயில் நிலாக்கோட்டமென்று அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. மற்றைய வழிபாட்டுச் செய்திகளைப் மற்றிய குறிப்புக்கள் கிடைக்கவில்லை.

நல்ல கணவன் வாய்க்க வேண்டுமென்பதற்காகப் பெண்கள் பிறைவழிபாட்டில் ஈடுபட்டிருந்த செய்தியினை இலக்கியங்கள் உணர்த்திநிற்கின்றன.

ஒள்ளிழை மகளிர் உயர்பிறை
புல்லென் மாலை (அகம். 239)

சந்திரன் தொடர்பான செய்திகள் இலக்கியத்தில் எவ்வாறு இடம்பெற்றிருந்தன என்பதை மேலே காட்டிய எடுத்துக்காட்டுக்களின் வழி கண்டோம். நாட்டுப்புற வழிபாட்டில் சந்திரனைப் பற்றிய வழிபாட்டினைப் பற்றிய செய்திகள் எவ்வாறு இடம்பெற்றிருந்தன என்பதனை இனி வரும் பகுதியில் காணலாம். சந்திரன் ஆண் தெய்வமாகக் கருதப்பட்டாலும் கதைப்பாடல் மரபில் சிலவற்றில் பெண் தெய்வமாகவும் கருதப்படுகின்றது. முற்பகுதியில் சூரியனைப் பற்றிக் குறிப்பிடுமிடங்களில் சந்திரனைப் பற்றிக் குறிப்பிடும் போக்கினையும் பல எடுத்துக்காட்டுக்களின் வழி உணரப் பட்டது. உழவுத் தொழிலின் சிறப்பிற்குக் காரணமான மழையைத் தருபவனாகவும் சந்திரன் விளங்குகிறான். நடவுப் பாடலில் திரு அலகிட்டு சந்திரனை வேண்டிப் பாடும் பாடல் மரபினைக் காணலாம்.

இந்திரனை நோக்கி எடுத்தேன் திருஅலகு
சந்திரனை நோக்கி எடுத்தேன் திருஅலகு
நிறுத்தின திருஅலகு நின்று பயிர் ஏறவேணும்
நெல்லா விளைய வேணும்—நெடுங்களங்கள்
ஏறவேணும்
கதிரா விளையவேணும்—எங்கவளையா...

நாட்டுப்புறப் பண்பாட்டில் பிறை தொடர்பான வழி பாட்டுச் செய்திகளும் இடம் பெறுகின்றன. அமாவாசை முடிந்தபின் பிறைதெரியும் நாளிலிருந்து (மூன்றாம் பிறை அல்லது ஐந்தாம் பிறைத் தொடர்ச்சி) முழுநிலா வரைக்கும் ஏறத்தாழப் பத்து நாட்கள் நோன்பு இருக்கும் முறையைத் தமிழண்ணல் தம்முடைய பிறைதொழும் பெண்கள் என்ற நூலில் விரிவாக எடுத்துரைக்கிறார். இந்நோன்பிற்கு 'இராவண்டைப் போடுதல்' என்று பெயர். ஆடலும் பாடலும் இந்நோன்பில் இடம்பெற்றதிலிருந்து இந்நோன்பின் பழமை மதிப்பை உணருதல் இயலும்.

இந்நோன்பில் சந்திரன் 'ராவாத்தாள்' என்ற பெயரில் பெண் தெய்வமாக்கப்படுகிறான். காளியம்மன், மாரியம்மன், பிடாரியம்மன் மாதிரி சிறு தெய்வவழிபாட்டு மரபில் 'நிலாவம்மன்' என்று கூறப்படுவதாகக் கொள்ளலாம். கன்னித்தெய்வமாகக் கருதப்படும் நிலாவாத்தாள் மாசிப் பிறையில் அமர்ந்து வானவீதியில் உலா வருவதாக நம்புகின்றார்கள். இதனைக் கீழ்க்கண்ட பாடல்களின் வழி அறியலாம்.

வட்டவட்ட ராவிலேயும்
மாசிப் பிறையிலேயும்
திட்டமுள்ள ராவாத்தாள்
தெருவீதி வாரெளென்று
... ...
தேங்காய் உடைப்பாரும்
தெரிசனங்கள் பார்ப்பாரும்

பிறைதொடர்பான வழிபாட்டு நம்பிக்கை நாட்டுப்புறத்தாரிடம் பரவலாக இருப்பதைப்பிறிதொருஎடுத்துக்காட்டின் வழி உறுதிப்படுத்தலாம்.

மாசிப் பிறையோ நீ வைகாசி மாங்கனியோ
தேசப்பிறையோ நீ தெவிட்டாத மாங்கனியோ
எந்தன் குலம் மங்காமல் எதிர்குலத்தார் ஏசாமல்
தங்கமலி பொக்கிஷத்தைத் தாளாள வந்த...

மாசிப்பிறையின் அருமை இங்குச் சுட்டப்படுவதைக் காணலாம். பிறைக்கும் மழைவளத்திற்கும் தொடர்பு இருப்பதாக நாட்டுப்புற மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். 'ஆடிப்பிறையைத் தேடிப்பாரு' 'தைப்பிறையைத் தடவிப் பாரு', 'மாசிப்பிறையை மறைக்காமல் பாரு' போன்ற பழமொழி வழக்குகளையும் இங்கு இணைத்துப் பார்க்கலாம்.

சந்திரன் நீருடனும் வளத்துடனும் தொடர்புடையதாகக் கருதப்படுவது பொதுநிலைக் கூறாகத் தெரிகிறது. சந்திரன் தனிக்கடவுளர் நிலையை இழந்து சிவனுடன் சேர்ந்த புராணச் செய்தியைத் தமிழ் இலக்கியங்களிலும் காண முடிகிறது. இலக்கியங்களில் சுட்டப்பட்ட பிறைவழிபாட்டின் எச்சமாகத் தற்போதைய இராவண்டை நோன்பைக் குறிப்பிடலாம். நல்ல கணவரையும் மழையையும் வேண்டி இந்நோன்பு மேற்கொள்வதாகத் தெரிகிறது. நாட்டுப் புறப் பண்பாட்டில் சந்திரன் 'நிலாவம்மன்' என்று பெண்தெய்வமாகக் கருதப் படுகிறான். தாய்த்தெய்வ வழிபாடு செல்வாக்குப் பெற்றிருக்கும் நிலை இம்முறைக்குக் காரணமாகலாம். புராணச் செய்திகள் நாட்டுப்புற வழக்கில் பெருவழக்காக இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. காலத்தைக் கணக்கிட சந்திரனின் வளர்வும் தேய்வும் உதவியாயிருக்கிறது.

சூரியனையும் சந்திரனையும் ஒப்ப ஒளியுடைய பொருளாக இருப்பது தீ இடிவிழுந்து தீப்பற்றிய மரத்தி லிருந்தோ, மூங்கில்கள் உராய்வதால் காடுகள் தீப்பற்றி யெரிவதிலிருந்தோ மனிதன் தீயைப் பற்றி அறிந்து கொண் டிருக்கலாம். இயற்கையில் உண்டாகும் தீயின் ஆற்றலை அறிந்து கொண்டவன் வழிபாட்டு நிலையில் தீயினை இணைத்துக்கொண்டான்.

விவிலியமறையின் பழைய ஏற்பாட்டில் நிம்ருட் என்னும் அரசன் பாலஸ்தீன நாட்டில் தீவழிபாட்டை ஆரம்பித்து வைத்தான் என்று கூறப்படுகிறது. இவ்வழிபாடு இன்றும் பாரசீகரிடையே செபிராஸ்ரிய மதக் கொள்கை யாகவும் இடம்பெற்றிருக்கிறது. பிரமீதியஸ் (Prometheus) என்ற வீரன் சுவர்க்கத்திலிருந்து தீயைத் திருடிக்கொண்டு வந்ததாகக் கூறுகிறார்கள். சுவர்க்கத்திலிருந்து வந்த செம்பூதன் என்றும் குறிப்பிடுவார்கள்.

வேதத்தில் தீக்கடவுளாக அக்னி சுட்டப்படுகிறான். வேதங்களுக்குள் தேவதாஸ்தோத்ர ரூபமாயிருப்பது ரிக்வேதம். அதில் உபக்ரமம் (ஆரம்பம்) உபயசம்ஹாரம் (முடிவு) இரண்டிலும் அக்னி சொல்லப்படுவதால் அக்னி உபாசனைதான் (fire worship) வேததாத்பரியம் என்றும் குறிப்பிடுவார்கள். வேதங்கள் அக்னியைத் தெய்வங்களுக் கான தூதுவன் எனக் கருதின. வேள்வியில் அல்லது யக்ஞத்தில் அக்னியின் பங்கு மிகுதியாக இருந்திருக்கிறது. வேள்வித் தீயில் இடப்படும் உணவுகள் தேவர்களைச் சென்றடையும் என்ற கருத்தும் நிலவியுள்ளது.

அக்னிக்கடவுளின் வழிபாடு காலப்போக்கில் வழிபாட்டு நெறிகளுடன் மிகுதியாகத் தொடர்பு கொண்ட நிலையைத் தான் காணமுடிகிறது. சமயம் சார்ந்த மெய்ப்பொருள் வளர்ந்த நிலையில் சிறுநெறி மரபினையும் பெருநெறி

மரபினையும் இனங்கண்டுகொள்ள முடிகிறது. அவ்வகை யில் இரண்டாம் வகையில் ஒருமைத் தெய்வத்துடன் தீயும் இணைந்துகொண்ட நிலையினையும் உணரமுடிகிறது. வேள்விகளின் பயன்பாடும் குறைந்தநிலையில் அக்னிக் கடவுளின் தனிமதிப்பும் குறைவதாயிற்று.

பண்டைத் தமிழ்நூல்களில் வேள்வி வேட்டலைப் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன.

> அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும்
> அரும்பெறல் மரபிற் கரும்பிவண் தந்தும் (புறம். 99)

அரசர்கள் தேவர்களைப் போற்றி வழிபட்டும் அவர் களுக்கு வேள்விக்கண் ஆவுதியை அருத்துவித்தும் ஆகிய செயல்களைச் செய்திருக்கிறார்கள். வேள்வித் தீயினில் இடப்பட்ட உணவினைத் தேவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையிருந்ததையும் உணரலாம். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் வீரரைக் கொண்டு களவேள்வியினையும் நான்மறை முதல்வரைக் கொண்டு தீ வேள்வியினையும் செய்தான். மேலும் முத்தீ (புறம் 367, 251), செந்தீ பற்றிய குறிப்புக் களையும் சங்க நூல்களில் காணலாம். அரசர்கள் தங்கள் பெயர்களில்கூட வேள்விவேட்டலைக் குறித்து நின்றனர். பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, இராசசூய யாகம் வேட்ட பெருநற்கிள்ளி போன்ற பெயர்களை இங்குக் குறிப்பிடலாம்.

சிலப்பதிகாரம் தீக்கடவுளுக்கென்று ஒரு வடிவினையும் குறிப்பிட்டுச் செல்கிறது. எனினும் கோயில் கொண்டிருந்த திருக்கோலமா? என்பதில் தெளிவான செய்திகள் கிடைக்க வில்லை.

> நில நிறத்துத் திரிசெக்கர் வார்சடைப்
> பால்புரை வெள்ளெயிற்றுப் பார்ப்பகை கோலத்து
> மாலை எரியங்கி வானவன் (சிலம் : 17-49)

இவ்வாறு தீக்கடவுளைப் பார்ப்பனக் கோலத்தில் படைத்தற்கு அவர்கள் முத்தீ வளர்ப்பவர்களாகக் கூறப் படுவது காரணமாயிருக்கலாமென்று அறிஞர்கள் கூறுவர். பத்தினிக்கடவுளின் ஏவலுக்குக் கட்டுப்படும் நிலையில் தீக்கடவுள் இங்கு ஒடுங்கிவிடுவதைக் காணலாம்.

தனிப்பட்ட கோயில்கள் தீக்கடவுளுக்கு (அக்னிக்கு) இருந்ததாகத் தெரியவில்லை. பெருநெறிக்கோயில்களின் பரிவார தேவதைகளின் இருப்பிடத்தில் இடம் கிடைக்கத் தான் செய்கிறது. காவிரியாற்றிலிருந்து குடமுருட்டியாறு பிர்ந்து செல்லும் இடத்தில் திருக்காட்டுப்பள்ளியென்றும் ஊரில் அக்னீசுவரர் கோயில் உள்ளது. ஈசுவரனுடன் அக்னி இணைக்கப்பட்ட நிலையைத்தான் இங்குக் காணமுடிகிறது.

தீ-கடவுளர் நிலையில் வழிபடுவது ஒரு நிலை. அது போல வழிபாட்டு மரபில் இடம்பெறுவது மற்றொரு நிலை. முதல் நிலை தொடக்கக் காலத்தில் இடம்பெற்றிருந்தாலும் பிற்காலத்தில் செல்வாக்குப் பெற்று வளரவில்லை.

நாட்டுப்புறப் பண்பாட்டில் தீக்கடவுள் தனிக்கடவுளர் மதிப்பில் வளம்பெறவில்லை. ஆனால் வழிபாட்டு மரபின் முறையில் தீக்குக் குறிப்பிடத் தகுந்த இடம் இருப்பதைப் பல செய்திகள் உணர்த்தி நிற்கின்றன. அம்மன் கோயில் களில் அக்னிச்சட்டி எடுப்பது வழக்கம். மண்சட்டியில் வேப்பம் குழைகளை வைத்து, உமியை நிரப்பி, அதன்மேல் சுள்ளிகளை அடுக்கிவைப்பர். பின் தீக்கனலையிட்டுத் தீ வளர்ப்பார்கள். எரிகின்ற அக்னிச்சட்டியைக் கையில் ஏந்திக்கொண்டு நையாண்டி மேளத்திற்குத் தக ஆடுவார் கள். இது விரதமிருந்து நேர்த்திக்கடனாகச் செய்யும் வழிபாட்டு முறையாகும். அக்கினிச் சட்டி எடுப்பவர் களுக்கு எரிகின்ற 'தீ' சுடுவதில்லை. அம்மனின் புனிதம் (மேன்மை அல்லது ஆற்றல்) தீச்சட்டி சுடாததிலிருந்து அறிந்துகொள்ளலாம். அக்னிச் சட்டியை எடுப்பதற்கு

மாரியம்மனிடம் வரம் கேட்பதாக அமையும் பாடல் பின் வருமாறு அமையக் காணலாம்.

வரங்கொடம்மா வரங்கொடம்மா
மாரியம்மன் தாயே
சாம்பிராணித் தூபங்கொண்டு
சரணஞ்செய்ய வாரோம்
அக்னிச் சட்டியால் கரகங்கள்
அம்(ன்)போடு எடுத்துச் செம்புடனே செலுத்தி
......

சிறுதெய்வ மரபில் மாலைத் தெய்வங்கள் என்ற வகை யுண்டு. அவ்வகைத் தெய்வங்கள் தீக்குழி வளர்த்து அதில் பாய்ந்து தெய்வத்தின் அங்கிகாரம் (அருள்) பெற்றுத் தெய்வமானவர்களே. கன்னித் தெய்வங்கள் பெரும் பாலும் இவ்வகையில் தெய்வமானவர்களே. வேறுபட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் பெண்கேட்டால் இவர்களுக்குப் பெண்ணைக் கொடுக்கமுடியாத சமுதாயக் கட்டமைப்பு. பின் அப்பெண் தீ வளர்த்து இறந்துவிடுவாள். உறவு டைய குடும்பங்களில் அப்பெண் தெய்வமாக வணங்கப் படுகிறாள். முத்துப் பட்டன் கதைப்பாடலில் இடம்பெறும் கதைச் செய்தியினைக் கொண்டு முற்சுட்டிய கருத்தினை மேலும் விளக்கலாம். முத்துப் பட்டன் (அந்தண இளைஞன்) பகடைப் பெண்களை மணந்து அவர்களுக்காகப் போரிட்டு மடிகிறான். அவன் மனைவியர் தீப்பாய்ந்து இறக்கின்றனர். இறைவன் அருளால் மூவரும் தெய்வமாகி விடுகிறார்கள். இந்நிகழ்ச்சி தொடர்பாக பாவநாசம் (திருநெல்வேலி மாவட்டம்) ஊரிலுள்ள சொரி முத்தையன் கோயிலில் குறிப்புகள் உள்ளன. கோயில் விழாவில் இடம் பெறும் தீக்குளிப்பு நிகழ்ச்சிகளும் இதற்குச் சான்றாக அமைகின்றன.

அம்மன்வழிபாட்டு முறையில் பூக்குழியிறங்கும் வழக்க மும் இடம் பெறுகிறது. மிகுந்த பக்தியுள்ளவர்களுக்கு

நெருப்புச் சுடாமல் பூப்போலக் குளிர்ச்சியைத் தரும் என்ற பொருளில் பூக்குழியென்ற சொல்லாட்சி அமைகிறது. கோயிலுக்கு முன் ஆழமான பள்ளங்களைத் தோண்டி விறகு களை அடுக்கி அதில் தீயினை உண்டாக்குவார்கள். அங்கு உண்டாகும் தீப்பிழம்பில் நடந்துசெல்லுதல் வழிபாட்டு மரபின் ஒரு முறையாக அமைகிறது. பக்தியுள்ளவர்களின் புனிதத்தையும் தெய்வத்தின் புனிதத்தையும் தீயென்ற இயற்கைச் சக்தியின் வழியாக வெளிப்படுத்துவதை இங்குக் காணலாம். இந்நிகழ்ச்சி பெரும்பாலும் பெண்தெய்வ வழிபாட்டிலேயே மிகுதியாக இடம்பெறுகிறது.

தீ வழிபாட்டின் மற்றொரு வகையாக விளக்கு வழிபாட்டினையும் குறிப்பிடலாம். இருநெறி மரபிலும் (பெருநெறி-சிறுநெறி) இவ்வழிபாட்டிற்குச் சிறப்பான இடம் உண்டு. திருவண்ணாமலையில் கார்த்திகை மாதத் தில் கார்த்திகை நட்சத்திரத்தில் சிவன் சோதியாகக் காட்சி யளிக்கிறான். (கார்த்திகை தீபம்) மலைமீது செப்புக் கொப்புரையில் நெய், கற்பூரம், துணி முதலியவற்றைப் பெய்து தீபத்தை ஏற்றுவார்கள். நாட்டுப்புறத்திலும் விளக்கு வழிபாட்டின் முறை இடம்பெறக் காணலாம்.

அந்தித்திரு விளக்கே
அலங்கார நாயகியே
வந்தித்து நான்றேன்
வாடியம்மா சீதேவி

இதுபோன்ற பாடல்கள் வழிபாட்டின்போது இடம் பெறும். திருவிளக்கு வழிபாட்டில் பெண்களுக்குத்தான் சிறப்பிடம். விளக்கு திருமகளுடனும் சீதேவியுடனும் இணைத்துப் பேசப்படும் மரபினையும் காணலாம். எனவே, வளமையின் குறியீட்டினைப் பெறுவதாக இவ்வழிபாடு அமைகிறது.

'தீ' தொடர்பான வழிபாட்டுச் செய்திகளைத் தொகுத்துப் பார்த்ததில் கீழ்க்கண்ட செய்திகள் புலனாகின்றன. தனிநிலைக் கடவுளாக தீக்கடவுள் (அக்னி) இருந்திருக்கிறான். அமரர் தூதுவன் என்ற முறையில் வேள்வியில் அக்னிதேவனின் பங்கு மிகுதியாக இருந்திருக்கிறது. காலப்போக்கில் தீயின் பங்கு வழிபாட்டு மரபில் மட்டுமே இடம்பெறலாயிற்று. பண்டைத் தமிழரிடம் வேள்வி பற்றிய எண்ணங்கள் இருந்திருக்கின்றன.

சிலப்பதிகாரத்தில் வரும் அக்னிக் கடவுளுக்கும் கோயில் கொண்டுள்ள கோலமாக இருந்ததற்குச் சான்றுகள் இல்லை. சமய எண்ணங்கள் வளர்ந்த நிலையில் ஒருமைத் தெய்வத்துடன் அக்னிதேவன் இணைந்ததால் பரிவார தேவதைகளின் இருப்பிடத்தில் இடம்பெற ஆரம்பித்தான்.

நாட்டுப்புறப் பண்பாட்டில் 'தீ' தனிக்கடவுளர் மதிப்பில் இருந்ததாகத் தெரியவில்லை. சிறுதெய்வங்களின் உருவாக்கத்திற்கு 'தீ' ஏதாவது ஒரு வகையில் காரணமாக இருப்பதை ஆய்வின் வழியே உணர முடிகிறது. புனிதத்தை அறியவும் புனிதத்தை வெளிப்படுத்தவும் தீ வழிபாட்டு மரபில் இடம்பெற்று நிற்கிறது. பக்தியுடன் அக்னிச்சட்டி எடுத்தாலோ பூக்குழி இறங்கினாலோ தீ சுடாது என்பது பரவலான நம்பிக்கையாக இருக்கிறது. இயற்கைத் தீ-பக்திக்குப் பணியும் என்ற உட்பொருள் இதன்வழியே வெளிப்படுத்துவதாகக் கொள்ளலாம். தீ வழிபாட்டின் ஒரு வகையாக விளக்கு வழிபாடும் விளங்குகிறது.

மழை

நீர்வளத்திற்கும் நிலவளத்திற்கும் மழையே மூலகாரணமாகயிருக்கின்றது. கால்நடை வளர்ப்புச் சமுதாயக் காலத்திலேயே நீரின் தேவையைத் தெளிவாக மக்கள் உணர்ந்திருந்தார்கள். விவசாயம் போன்ற தொழில்களைச் செய்து நிலைத்து வாழத் தொடங்கிய காலத்தில் நீரின்

பயன்பாடு மேலும் உணரப்பட்டது. அவ்வகையில் மழையை வழிபாட்டு நிலையில் வைத்துச் சிந்திக்கத் தலைப்பட்டனர்.

வேதத்தில் வருணன் கடலுக்கும் மழைக்கும் தலைவனாகக் கருதப்படுகிறான். வருணன் என்றால் எங்கும் பரவியிருப்பவன் என்று பொருள் (ரிக்-89:5-3). வருணனைத் துதி செய்யும் செய்யுட்களின் எண்ணிக்கை வேதத்தில் மிகச் சிலவே உள்ளன. எனினும் அவை வேதத்தில் மிகச் சிறந்தவையென்று கருதப்படுகின்றன. புராண காலத்திலே வருணன் சிறுகடவுளர் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள நிலையினைக் காணலாம். மேற்குத்திசைக்குக் காவலனாகவும் பன்னிரண்டு ஆதித்யருள் ஒருவனாகவும் கருதப்படுகிறான்.

வருணன்மேய பெருமணல் உலகம் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. வேதத்தில் சுட்டப்படும் வருணனுக்கும் தமிழர் வழக்கில் இடம் பெற்றிருந்த வருணனுக்கும் தொடர்பு இல்லை என்பது அறிஞர் சிலரின் கருத்தாக இருக்கிறது. திராவிட வருணனும் ஆரியவருணனும் என்ற தலைப்பில் மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள் சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

வருணனுடைய அடையாளமாகத் தமிழர் சுறாமீனின் கொம்பைக் கொண்டிருந்தார்கள் என்று பட்டினப்பாலை குறிப்பிடுகிறது.

> சினைச் சுறவின் கொடு நட்டு
> மனைச் சேர்த்திய வல்லணங்கினான (86-87)

மேற்குறிப்பிட்ட வரிகளில் வழிபாட்டு மரபைப் பற்றி அறிய முடிகிறது. எனினும் கோயில்கட்டி வழிபட்ட முறைமைக்குச் சான்றுகள் கிடைக்கவில்லை. இலங்கையில் தேவனுரா என்னும் துறைமுகப்பட்டினத்தில் வருணனுக்காகக் கோயில் இருந்திருக்கிறது. பிற்காலத்தில் அந்த வருணன் விஷ்ணுவாக மாற்றப்பட்டு உட்புல வண்ணன்

எனவும் அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. அவ்வூர்ப் பெயர் பிற்காலத்தில் தேவுந்தரா என்றும் தெளவரா என்றும் திரிந்து ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தொண்ட்ரா (Dondra) என்றாகிவிட்டது. தற்போது சிங்களத்தில் இத் தெய்வம் உதகபாலன் என்றும் அழைக்கப்படுகிறான். இச் சொல்லிற்கு நீர்த்தெய்வம் என்ற பொருள் உண்டு.

இளங்கோவடிகள் இயற்கையைப் பொதுப்படச் சிறக்க வைக்கும் நிலையில் மாமழை போற்றதும் மாமழை போற்றுதும் என்று மங்கலவாழ்த்துப் பாடலில் குறிப்பிடு கின்றார். வள்ளுவர் கடவுள் வாழ்த்திற்கு அடுத்தபடியாக வான்சிறப்பை அமைக்கிறார். பிற்காலப் பக்தி இலக்கியங் களில் மழையைக் கடவுளின் வடிவங்களுள் ஒன்றாகக் கூறும் நிலையையும் காணமுடிகிறது. அத்வைதத்தில் நாட்டம் கொண்ட நம்மாழ்வார் 'நன்று பெய்யும் மழைகளில் நாரணன் வந்தான்' என்று திருவாய் மொழியில் குறிப்பிடு கிறார். அறத்திற்கும் மழைக்கும் தொடர்புபடுத்திப் பேசப் படும் முறையினை இலக்கியங்களின் வழி உணரமுடிகிறது. அரசனின் செங்கோல் சிறப்பாக இருந்தாலும் சான்றோர்கள் பலர் வாழ்ந்தாலும் மழை தப்பாது பெய்யுமென்பது புலவர் களின் கருத்தாகவும் இருந்திருக்கிறது. மேலும் மழைபெய்து வளம் சிறக்க பாவைநோன்பு மேற்கொண்ட நிலையினையும் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

அத்தகு நம்பிக்கை நாட்டுப்புறப் பண்பாட்டிலும் இடம் பெற்றிருக்கக் காணலாம். மாதம் மும்மாரி பொழிய அறம் காரணமென்று நம்பிக்கை கொண்டு உள்ளனர். நாட்டுப் புறத்தில் விவசாயத் தொழில் சிறக்க மழையினையே நம்பி யிருக்கின்றனர். இந்நிலையில் மழைத்தொடர்பான சடங்கு கள், நம்பிக்கைகள் பரவலாக இடம்பெற்றிருக்கக் காணலாம். பழமொழி, நாட்டுப்புறப்பாடல் போன்ற எழுதாத இலக்கியங்களிலும் மழைபற்றிய செய்திகள் இடம்பெற்றிருக் கின்றன.

சூரியன், சந்திரன் போன்ற இயற்கைத் தெய்வங்களுக்கு மழையைத் தரும் ஆற்றலுண்டு என எண்ணியிருந்தனர்.

சந்திரரே சூரியரே
சாமி பகவானே
இந்திரரே வாசுதேவா
இப்பமழை பெய்யவேணும்

மழை வேண்டிப்பாடும் வேறு சில பாடல்களில் வருணனும் சுட்டப்படுகிறான். நாட்டுப்புறத்தின் பெரும் பான்மையான விளைநிலங்கள் வானம்பார்த்த பூமியாகவே இருக்கின்றன. மழையை நம்பி விதைத்தாகி விட்டது. ஆனால் மழையோ வந்து, ஏமாற்றிச் செல்கிறது. இச்சூழ் நிலையை விவரிப்பதாய் அமையும் பாடல் வருமாறு.

இந்த மழையை நம்பி
இருங்குச்சோளம் நான் விதைச்சேன்
வந்தமழை போகுதில்லோ
வருணபகவானே
வந்தமழை போகுதில்லோ
மந்தையாத்தாள் காண்பாள்
அடுத்தமழை போகுதில்லோ
அய்யனாரே காண்பார்
கண்டமழை போகுதில்லோ
காணியாளர் காண்பார்
சொன்னமழை போகுதில்லோ
சோணையாவே காண்பார்.

இங்கு வருணனுடன் மந்தையாத்தாள், அய்யனார், சோணையா போன்ற நாட்டுப்புறத் தெய்வங்களும் சுட்டப் படுகின்றனர். இவற்றில் வருணனைத் தவிர மற்றைய தெய்வங்களுக்கு வழிபாட்டுமரபு உண்டு, மழை தொடர்ந்து பெய்யவில்லை. அதனால் எத்தகு துன்பங்கள் ஏற்படு கின்றன? இதனைச் சிந்தித்துப்பார்த்து வருணனை வேண்டித்

கொள்கிறார்கள். மழைவேண்டிச் செய்யும் மழைச் சடங்குகளில் இவ்வகைப் பாடல்கள் இடம்பெறுகின்றன.

மானத்தை நம்பியல்லோ
ஐயோ வருணதேவா!
மக்களும் பொறந்துவிட்டோம்
ஐயோ தருணதேவா!
மானஞ்செழிக்கவில்லை
ஐயோ வருணதேவா!
மக்கள் வயிறு வாடுதே
ஐயோ வருணதேவா!
கலியாண வாசலிலே
கையலம்பத் தண்ணியில்லே
பிள்ளைப்பெத்த வாசலிலே
பிள்ளையலம்பத் தண்ணியில்லே

ஊர்ப் பொதுக்கோயில்களிலும் அம்மன் கோயில்களிலும் நடக்கமுடியாமல் போன பொங்கல் விழாக்களை நடத்தியும் மழைக்கஞ்சி காய்ச்சியும் மழையை வேண்டிக்கொள்வர். வருணனைத் திருப்திப்படுத்தும் ஜோகுமார என்ற சடங்கினை ஆந்திரக்குடிகள் கொண்டாடுவர். நாட்டுப்புறத்திலுள்ள மழைக்கஞ்சி காய்ச்சும் சடங்கினைப் போன்றது. பெண் தவளையைப் பிடித்து முறத்தில் கட்டி வேப்பிலைகளை வைத்து ஊர்வலம் வருதலும் உண்டு. மழைக்காக யாகம் செய்வதைப் பெருநெறிக் கோயில்களின் வழிபாட்டு முறையிலும் இடம்பெறக் காணலாம்.

வருணன் மழைக்கும், நீருக்கும் அதிபதியான கடவுளாக இருந்திருக்கிறான். எனினும் வேதகால வருணனுக்குப் புராண காலத்திலேயே சிறுகடவுளர் நிலைதான் கிட்டுகிறது. தமிழ் இலக்கியங்களில் சுட்டப்படும் வருணன் தனிமரபாகலாம். நாட்டுப்புறமக்களின் பண்பாட்டில் பாடல்களில் மட்டுமே வருணன் மழைக்கான தெய்வமாகக் கருதப்

படுகிறான். வழிபாட்டு நம்பிக்கையில் கிராமியத் தெய்வங்களே மழைக்குக் காரணமானவர்கள் எனக் கருதப்படுகின்றனர். மேலும் சூரியன், சந்திரன் போன்ற இயற்கைக் கடவுளர்க்கும் மழைக்கும் தொடர்பு படுத்துகின்றனர். வருணனுக்கு இலங்கையில் கோயில் இருந்து காலப்போக்கில் திருமால் கோயிலாக மாறிய நிலை மேலும் ஆய்விற்குரியது. வருணனின் வழிபாட்டு மரபு செல்வாக்குப் பெற்ற காலம், சூழல் இவைகளைக் கருத்தில் கொண்டு ஆய்வுகள் நிகழ்த்தப்பட வேண்டும்.

பொதுவாக மேற்கண்ட ஆய்வின்வழிக் கீழ்க்கண்ட முடிவுகளைப் பெறலாம்.

சமயம் பற்றிய ஆய்விற்கு இயற்கை வழிபாட்டுச் செய்திகள் மிகுந்த அளவில் உதவுகின்றன. தெய்வம் மனிதவடிவில் இருக்கிறது. (Physical anthropomorphism) என்ற நம்பிக்கை வளர்ந்த பின்னர் அவைகளுக்கு மனித உணர்வுகளும் கற்பிக்கப்பட்டன. இந்நிலையினை நாட்டுப்புற மக்களிடம் காணலாம். நாட்டுப்புறமக்களிடம் இந்நிலையில் பலதெய்வ வணக்க முறையினையும் (Polytheism) இனங் காணலாம்.

சூரியவழிபாடு தொன்ம வழிபாடாகும். தனிவழிபாட்டு மரபு அளவிற்கு (சௌரமதம்) சூரிய வழிபாடு உயர்ந்திருக்கிறது. நாட்டுப்புறத்தில் சூரியக் கடவுள் உழவுத்தொழிலின் கடவுளாகவும் மழையைத் தரும் கடவுளாகவும் கருதப்படுகிறான். கண்ணேறுபட்டால் அதனை அழிக்கும் சக்தியும் அவனுக்கு இருப்பதை உணரமுடிகிறது. பாடல்களிலும், கதைப்பாடல்களிலும் இக்குறிப்புகள் கிடைக்கின்றன, வழிபாட்டு மரபில் பயன்பாட்டுநிலை இல்லை என்பதையும் இங்கு உணர முடிகிறது.

சந்திரன் தனிக்கடவுளர் நிலையை இழந்து சிவனுடன் இணைந்த புராணச் செய்தியைத் தமிழ் இலக்கியங்கள் சுட்டி

நிற்கின்றன. இலக்கியங்களில் சுட்டப்பட்ட பிறைவழி பாட்டின் எச்சமாக இராவண்டைப் போடுதலைக் குறிப்பிட லாம். சந்திரன் நிலாவம்மன் என அழைக்கப்படும் மரபு தாய்த் தெய்வவழிபாட்டின் செல்வாக்கையே குறித்து நிற்கிறது. புராணச் செய்திகள் நாட்டுப்புறப்பண்பாட்டில் அகநிலையில் பெருவழக்காக இடம்பெறவில்லை.

தீக்கடவுள் (அக்னி) அமரர் தூதுவனாகக் கருதப் பட்டிருக்கிறான், தனிக்கடவுள் வழிபாட்டு மரபைவிட வழி பாட்டு மரபில் தீயின் பங்கு மிகுதியாக உள்ளது.

நாட்டுப்புறப் பண்பாட்டில் 'தீ' தனிக்கடவுளர் நிலைக்கு உயர்த்தப் பட்டதாகத் தெரியவில்லை. சிறு தெய்வங்களின் உருவாக்கத்திற்கு 'தீ' காரணமாக இருப்பதைப் பல தரவு களின் வழி உணரமுடிகிறது. அக்னிச் சட்டி எடுத்தாலோ பூக்குழி இறங்கினாலோ பக்தியுள்ளவர்களைத் தீச் சுடாது என்பது பரவலான நம்பிக்கையாக அமைகிறது. தீ வழி பாட்டின் ஒருவகையாக விளக்கு வழிபாடும் விளங்குகிறது.

தமிழ் இலக்கியங்களில் சுட்டப்படும் வருண மரபு தனித்த மரபாகலாம். நாட்டுப்புறப் பண்பாட்டில் பாடல் களில் மட்டுமே வருணனைப் பற்றிய செய்திகள் கிடைக் கின்றன. அச்செய்திகள் வருணனை மழையுடன் இணைத்தே கூறுகின்றன. எனினும் வழிபாட்டு மரபில் கிராமியத் தெய்வங்களே (Viliage deities) மழைக்குக் காரணமாக இருக்கிறார்கள்.

நாட்டுப்புறப் பண்பாட்டில் இடம்பெறும் இயற்கை வழி பாட்டுச் செய்திகள் தனித்தன்மை கொண்டன எனப் பொது வாக மதிப்பிடலாம்.

பார்வை நூல்கள்:

1. அருணாசலம், ப., சிலப்பதிகாரச் சிந்தனை, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1971.

2. அருணாசலம், மு., தாலாட்டு இலக்கியம், தமிழ் நூலகம், திருச்சிற்றம்பலம், 1958.
3. அன்னாக்காமு, செ., ஏட்டில் எழுதாக்கவிதைகள், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1966.
4. இராமசாமி, துளசி, நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 119, 1985.
5. கைலாசபதி, க., பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும் மக்கள் வெளியீடு, சென்னை, 1978.
6. சண்முகசுந்தரம், சு., தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1985.
7. சுப்பிரமணியன், ச.வே., (ப.ஆ)., நாட்டுப்புற இயல் ஆய்வுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 1979.
8. சேதுப்பிள்ளை, ரா.பி., தமிழகம் ஊரும் பேரும், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-5.
9. தமிழண்ணல், பிறைதொழும் பெண்கள், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1975.
10. தரபத சௌத்ரி, ''வேதங்கள்'' கீழைமேலை நாடு களில் மெய்ப்பொருள் வரலாறு, அண்ணாமலைப் பல்கலக் கழகம், 1970.
11. பாலசுப்பிரமணியன், இரா., கணியான்கூத்து, சத்யா வெளியீடு, பாளையங்கோட்டை, 1986.
12. பாலசுப்பிரமணியன், இரா., இயற்கை வழிபாட்டில் சந்திரன், அ.இ.ப.த.ம. ஆய்வுக்கோவை, ச.வெ. சண்முகம் முதலியார், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1989.
13. பாலசுப்பிரமணியன், இரா., தீ வழிபாடு, தமிழ் இலக்கிய ஆய்வுக் கோவை, தொகுதி-2, அனைத் திந்தியத் தமிழ் இலக்கியக் கழகம், தஞ்சாவூர், 1989.

14. பாலசுப்பிரமணியன், இரா., கதிர்க்கடவுள், தினமணி, 14.1.89.

15. லூர்து, தே. (ப.ஆ), நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள், பாரிவேள் பதிப்பகம், திருநெல்வேலி, 1981.

16. ...., பரிசுத்த வேதாகமம், விவிலிய மறைக் கல்வித் திருவழிபாட்டு நடுநிலையம், திண்டிவனம், 1980

17. ஆங்கிலம்:
Maxmuller, F., Anthropological Religion, Asian Educational Services, New Delhi, 1986.

18. Veronica Ions, Indian Mythology, Newness Books The Hamlyn Publishing Group Ltd. England, 1983

கலைக்களஞ்சியம்:

..............., கலைக்களஞ்சியம், தொகுதி 6, 9, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1956.

...., The Encyclopedia Britannica Vol.2, The Encyclopedia Britannica Company Ltd., London.

2. குலமரபுச் சின்னம்

பழங்குடி மக்களிடம் இடம்பெறும் சில பண்பாடுகள் அல்லது பழக்க வழக்கங்கள் பொருள் உள்ளவைகளாக இருக்கின்றன. அத்தகு பண்பாடுகள் போன்றவை நாகரிக மக்களிடம் இடம்பெற்றும் அவைகளுக்குப் பொருளுள்ள பயன்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. மானிடவியல் அறிஞர்கள் (Anthropologists) இத்தகு, பண்பாட்டு எச்சங்கள் (Cultural relics) குறித்துக் கவனம் செலுத்தி வருகின்றனர். அவ்வகையில் குலமரபுச் சின்னம் (Totemism) என்ற முறைமையும் ஒன்றாகும்.

இனக்குழு மக்கள் விலங்குநிலை வாழ்க்கையிலிருந்து விடுபட்டு உயர்ந்த சமுதாய நிலை வாழ்க்கையை (Socialization) அடைவதற்கு, இத்தகு குலமரபுச் சின்னம் போன்றவை உதவியுள்ளன. சமயத்தின் தோற்றம் பற்றியும் (orgin of religion) மணஉறவு பற்றிய பாரம்பரிய வளர்ச்சி நிலைகளை மீட்டுருவாக்கம் (reconstruction) செய்ய விரும்புவோரும் குலமரபுச் சின்னம் பற்றிய ஆய்வினையும் அதன் கோட்பாடு வளர்ச்சியினையும் (Totemistic theory) ஒதுக்கித்தள்ள இயலாது.

ஆங்கிலத்தில் 'Totem' என்ற சொல் கி.பி. 1071-இல் வந்ததாகக் கூறுவர். பீட்டர் ஜோன்ஸ் (Peter Jones) வடஅமெரிக்காவில் அல்கோன்கியான் (Algonkian Indian)

என்ற பழங்குடி இன மக்களிடம் ஆய்வு நடத்தியவர். அம்மக்களின் வழக்கு மொழியில் 'Ototeman' என்ற சொல் உண்டு. இதன் பொருள் சகோதர சகோதரி உறவினைக் குறிக்கும் (His brother Sister Kin) என்று எடுத்துக்காட்டுகிறார். நாளடைவில் இச்சொல்லினை மானிடவியலாளர் ஆங்கிலத்தில் 'Totem' என்ற, கலைச் சொல்லாக அமைத்துக் கொண்டனர் (Ototeman>totem.)

பழங்குடி மக்கள் தங்களை ஒரு குடும்பத்தவர் என்று கூற முற்பட்டனர். ஒரு விலங்கையாவது அல்லது தாவர இனத்தையாவது தங்கள் குடும்பத்தின் அடையாளச் சின்னமாக்கிக் (Symbol or emblem) கொண்டனர். சின்னமாகத் தேர்ந்தெடுத்த விலங்கின் மண்டையோடு அல்லது தோலைத் தங்களின் குடும்ப அடையாளமாக அணியும் பழக்கத்தையும் மேற்கொண்டிருந்தனர். தங்கள் வீட்டின் நுழைவாயில் பகுதியில் அச்சின்னத்தை இடம்பெறச் செய்தனர். இச்சின்னம் குலமரபுச் சின்னம் (Totem) என்று அழைக்கப்படுவதாயிற்று. குலமரபுச் சின்ன முறைமையில் சுட்டப்படும் 'குடும்பம்' விரிந்த ஆழமான பொருளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

இக்குலமரபுச் சின்னத்தின் வழி உருவாக்கப்பட்ட குடும்ப அமைப்பு நிலைபெற சில விதிமுறைகளும் அவைகளைச் சார்ந்து விலக்குகளும் (Taboos) எழுந்தன. சிக்மண்ட் ஃபிராய்டு (Sigmund Freud) என்பவர் குலமரபுச் சின்னமும் விலக்கும் (Totem and Taboo) என்ற ஆய்வுத் தலைப்பில் விரிவாக (நான்கு தொகுதிகளில்) நூல் எழுதியுள்ளார். 1913-இல் இந்நூல் வெளியிடப்பட்டது. தொடக்கத்தில் ஜெர்மன் மொழியிலிருந்த இந்நூல் 1965-இல் ஆங்கில மொழியாக்கம் பெற்றது. இது மானிடவியல் கல்வியில் உளவியல் பகுப்பாய்வைச் செயல்முறைப்படுத்தி வெளிவந்துள்ள நூலாகும்.

ஒரே குலமரபுச்சின்னம் அல்லது குடும்பத்தாரிடையே திருமண உறவு கூடாதென்பது புறமணக்கொள்கை (Exogamy) எனப்படும்.

இவ்வாறு தங்களுக்கென குலமரபுச் சின்னத்தை வகுத்துக்கொண்டதால் இனக்குழு மக்களிடையே போர் எழுந்த நேரத்தில் தங்கள் குழுவை இனங்கண்டு கொள்ள வாய்ப்பாக இருந்தது, இடம் பெயர்ந்து செல்லுகையில் (Migration) ஒன்று கூடுமிடங்களில் தங்கள் குழுவினர் அல்லது குடும்பத்தினர் என அறிந்து கொள்ளவும் குலமரபுச் சின்னம் உதவியாக அமைந்தது.

ஒரே குலமரபுச் சின்னத்தை உடையவர்கள் ஒரு குடியிருப்பில் கூடி வாழத் தலைப்பட்டனர். அவர்கள் குடியிருப்பின் நுழைவாயிலில் தங்கள் குலமரபுச்சின்னத்தைப் பெரிதாக வைத்துக்கொண்டனர். இவர்கள் இன்னொரு குலமரபுச் சின்னம் உடையவர்களிடமிருந்து பெண் எடுத்துக் கொண்டார்கள். இந்நிலையில் ஒரு குலமரபுச் சின்ன முடையவர்கள் வாழ்ந்த இடத்தில் பல குலமரபுச் சின்னம் உடையவர்கள் வாழவேண்டிய நிலை உருவாயிற்று. அடுத்து வரும் சந்ததியினருக்கு குலமரபுச்சின்னம் என்னவென்பது சிக்கலாக அமைந்தது. ஏற்கனவேயிருந்த குலமரபுச் சின்னம் முதன்மைச் சின்னமாகவும் (Major totem) புகுந்த குலமரபுச் சின்னம் துணைநிலைச் சின்னமாகவும் (Minor totem or phrat) மானிடவியலார்கள் குறிப்பிட்டார்கள். முதன்மைச் சின்னம் தந்தை வழியிலும் துணைச் சின்னம் தாயின் வழியிலும் பின்பற்றப்பட்டன. தந்தை வழியில் புறமண உறவினைக் கடைப்பிடித்தல், தாயின் வழியில் புறமண உறவினைக் கடைப்பிடித்தல் என இருவழக்கங்கள் உருவாக ஆரம்பித்தன. ஒன்றின் வளர்ச்சியும் தேய்வும் பயன்பாட்டுச் சூழ்நிலையைப் பொறுத்து அமைவதாயிற்று. இக்கருத்து மேலும் ஆய்விற்கும் சிந்தனைக்கு முரியது.

குலமரபுச்சின்னத்தின் பொதுப்பண்புகள்

விலங்கு அல்லது தாவரப் பொருள்கள் சின்னங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. மனிதனில் அந்த சக்தியுடையவர் களையும் குலமரபுச் சின்னங்களாகக் கொள்ளும் பழக்கமும் தோன்றியது இந்நிலையில் மூதாதையர் வழிபாடு (Ancestor worship) குலமரபுச் சின்னத்துடன் தொடர்பு கொள்ளும் நிலை ஏற்பட்டது எனலாம்.

சின்னமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் புனிதமாகவோ அல்லது மரியாதைக்குரியவை களாகவோ கருதப்பட்டன என்று பொதுநிலையில் மதிப்பிட இயலாது. சில சின்னங்கள் பயம் பற்றிய எண்ணமாகவும் இருக்கலாம் என்று உளவியலார் குறிப்பிடுவர்.

குலமரபுச் சின்னத்தில் இடம்பெறும் நம்பிக்கைகள், சடங்குமுறைகள் மூதாதையர் வழிபாட்டுடன் உள்ள தொடர்பு, ஆவிபற்றிய எண்ணம் (animism) போன்ற கூறுகள் (religious element) சமயத்தில் இணைத்துச் சிந்தித்துப் பார்க்கத் தக்கவை.

வேட்டை சார்ந்த பழங்குடிகளிடமும், விவசாயத் தொழிலில் ஈடுபட்டவர்களிடமும் இப்பழக்கம் இன்றளவும் இருக்கிறது.

சின்னங்களைத் தங்கள் குழுவுடன் தொடர்புபடுத்திப் பல புராணக் கதைகளும் உருவாயின. இவ்வகைக் கதை புனிதமாகக் கருதும் இயல்பும் ஏற்பட்டது. எனினும் காரணகாரிய இயல்புகளை இவ்வகைக் கதையில் எதிர் பார்க்க வாய்ப்பில்லை. குறியீட்டுப் பொருள் கதைகளின் வழித் தெரிவிக்கப்படுகிறதா என்பது குறித்து ஆராய்தல் வேண்டும். களஆய்வுச் செய்திகள் இவ்வகை முற்கோளுக்கு உதவலாம். கதைகளில் விலங்கு மூதாதையர்கள் சுட்டப் படலாம். மனிதனும் விலங்கும் இணைந்த நிலையில் மூதாதையர்கள் குறிப்பிடப்படலாம்.

குலமரபுச் சின்னம் — கோட்பாட்டு வரலாறு (Totemistic theory)

இனக்குழு ஆய்வாளர் (Ethnoligist) ஜான் பெர்கிசன் லெனன் (John fergusonlennan) என்பவர் இக்கோட்பாட்டின்சிந்தனை வளர்ச்சிக்கு உதவியவர் ஆவார். 'விலங்கு மற்றும் தாவரங்கள்வழிபாடு' (The worship of animals and plants) என்ற இவரது நூல் 1870-இல் வெளிவந்தது. பொதுவாக மனித இனவளர்ச்சி இவ்வகைக் குலமரபுச்சின்ன முறைமையைக் (Totemistic stage) கடந்துதான் வளர்ந்திருக்க முடியும் என்ற கருத்துடையவர்.

இ. பி. டெய்லர் (E. B. Tylor) என்பவர் ஆங்கிலேய நாட்டு மானிடவியலறிஞர் ஆவார். முற்சுட்டிய கோட்பாட்டின் சில கருத்துகளை மறுக்கிறார், குலமரபுச் சின்ன முறைமையில் விலங்குவழிபாட்டையும் தாவர வழிபாட்டையும் இணைத்துப் பார்ப்பது தெளிவற்ற ஆய்வுப்போக்கு என்று குறிப்பிடுகிறார். மனிதனுக்கும் குறியீட்டுச் சின்னமாகவுள்ள விலங்கு மற்றும் தாவரப் பொருள்களுக்குமுள்ள உறவு நிலையில் (Animal and clan) வழிபாடு இடம்பெறவில்லை என்பார்.

ஸ்காார்ட்டிஷ் அறிஞர் ஆண்டர்வ் லாங்க் (Andrew lang) இருபதுக்களின் தொடக்கத்தில் இருந்தவர். குலமரபுச் சின்னங்களின் வகைப்பாடுகளையும் உட்பிரிவுகளையும் குறித்து ஆய்வு நடத்தியவர். ஒரு குடும்பத்தாரால் குலமரபுச் சின்னம் மறக்கப்படாமல் இருக்க வேண்டுமென்பதற்காகப் புனிதம் வாய்ந்த புராணக் கதைகள் தோற்றம் பெறலாயின எனக் குறிப்பிடுவார்.

குலமரபுச் சின்னமும் புறமணமும் (Totem and exogomy) என்ற, தலைப்பில் ஜேம்ஸ் ஜார்ஜ் ஃபிரேசர் (Sir James George Frazer) 1910-இல் அரிய நூல்களை வெளிக்கொணர்ந்தார். உலகின் பல பகுதிகளிலும் வாழும்

பழங்குடிகளையும் அவர்தம் குலமரபுச்சின்னம், சமயம் போன்றவைகளைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

அலெக்சாண்டர் கோல்டன்வீசர் (Alexander Golden weiser) இக்கோட்பாடு குறித்து ஆராய்ந்துள்ளார். ஜெர்மன் நாட்டு இனமரபு ஆய்வாளரான ரிச்சர்டு தர்ணவால்டு (1910) குலமரபுச் சின்ன முறைமையில் இடம் பெறும் சமுதாய விலக்குகள் (Taboos) குறித்து ஆராய்ந்துள்ளார். சில ஒழுங்கு முறைகள், பெரியோர்களிடம் மரியாதை காட்டுதல் போன்ற வழக்கங்கள் உருவாவதை எடுத்துக் காட்டுகிறார். முன்னோர் வழிபாடு (ancestor worship) ஆவியுலகக் கோட்பாடு (animism) பலியிடுதல் போன்றவை களோடு குலமரபுச் சின்னத்தைத் தொடர்பு ஏற்படுத்த வாய்ப்பில்லை. தனித்த நிலையில் சிந்திக்கப்பட வேண்டும் என்பார் (1917—1918).

பிரெஞ்சு நாட்டினைச் சார்ந்த எமிலிடர்கிம் (Emile-Durkheim) என்ற ஆய்வாளர் சமூகவியலில் ஈடுபாடுள்ளவர். குலமரபுச் சின்னத்தைச் சமூகவியல் பார்வையிலும் (Sociological point of view) மெய்ம்மையியல் பார்வையி லும் (Theological point of view) ஆராய வேண்டுமென்பார். சமயத்தின் தோற்றம் இக்குலச் சின்ன முறைமை என்பார்.

வியன்னா பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பிரிட்ஸ் கிரேப்னர் (Fritz Gracbnar) இனமரபு ஆய்வாளர் ஆவார். இயற்கைப் பொருள்களுடன் மனிதக்குழு தொடர்பு (Fetishim) கொண்டுள்ள நிலையினையும் அதன் இயல்பினை யும் சமயவளர்ச்சியுடன் தொடர்புபடுத்தி விளக்குவார்.

இவ்வாறு வெவ்வேறு துறையைச் சார்ந்தவர்கள் இக் குலமரபுச் சின்னம் குறித்துச் சிந்தித்துக் கோட்பாடுகளை உருவாக்கிக் கொடுத்து வந்திருக்கின்றனர்.

எடுத்துக்காட்டு விளக்கங்கள்

குலமரபுச் சின்னத்தைக் குறியீட்டுப் பொருளாக அமைத்துக்கொள்ளும் நிலைபழங்காலத்தில் இடம்பெற்றிருக்

கிறது. இனக்குழு மக்கள் வளர்ச்சி பெற்ற அரசுகள் அமைந்த காலத்திலும் குறியீட்டுச் சின்னத்தின் பயன்பாடு இருந்திருக்கிறது. பழங்குடி மக்களிடம் இடம்பெற்றிருக்கும் இவ்வியல்பு தற்கால மக்களிடம் எச்சப்பண்பாட்டு நிலை யிலும் காணலாம்.

'கோத்திரம்' என்று குறிப்பிடும் முறைக்கும் குலமரபுச் சின்னத்திற்கும் தொடர்பு உண்டு. அசேலமுனி யானையி லிருந்தும் கேசபிங்களமுனி கோட்டானிலிருந்தும் அகத்திய முனி அகத்தியமலரிலிருந்தும் கௌசிகமுனி தர்ப்பைப் புல்லி லிருந்தும் கபிலமுனிவர் குரங்கினின்றும் உதித்தனரென்றும் கூறுகின்றனர். இத்தகு குலச்சின்னம்பெற்றவர்கள் குலச் சின்னமாகவுள்ள விலங்குகளிடத்தோ அல்லது தாவரத்தி னிடத்திலோ பக்திசெலுத்த வேண்டும். அவ்விலங்குகளைக் கொல்லவோ அல்லது புசிக்கவோ கூடாது. புறமணத்தின் போது சின்னம் கோத்திரமாகக் கருதப்படுகிறது. சில கோத்திரப் பெயர்கள் ரிஷிகளின் பெயரைப் பெற்றும் அமைவதுண்டு. பிராமண வகுப்பைச் சார்ந்தவர்களிடம் இம்முறை இடம்பெறுகிறது. இந்த முறைமையைத் தனித்தவொரு நிலையில் ஆராயவேண்டும்.

சோழர்கள் புலியினையும், பாண்டியர்கள் மீனையும் தங்கள் குலமரபுச் சின்னமாகக் கொண்டிருந்தனர், இவை குலமரபிலிருந்து கொடி மரபிற்கு மாறிய வளர்ச்சிநிலை நன்கு சிந்திக்கப்பட வேண்டிய இடைவெளியாகும். முத்திரை மோதிரத்தில் சின்னம் இடம் பெறுவதையும் அவ்வக்கால நாணயங்களில் இடம்பெறுவதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. சின்னங்களும் அவற்றின் பயன் பாடும் மாறி மாறியமைவதைக் காண முடிகிறது.

அக்கால அரசர்கள் வழக்கத்தில் காவல் மரம் இடம் பெற்றிருந்தது. இக்காவல் மரத்தினையே பழந்தமிழ் இலக்கியத்தில் கடிமரம் எனச் சுட்டும் போக்கும் காணப்

படுகிறது. சேரன் செங்குட்டுவன் கடம்பரின் காவல் மரத்தை வீழ்த்திய செய்தியினை இங்கு இணைத்துப் பார்க்கலாம்.

''வயவர் வீழ வாளரில் மயக்கி
இடங்கவர் கடும்பின் அரசுதலைபணிப்பப்
கடப்புமுதல் தடிந்த கடுஞ்சின வேந்தே.
(பதிற்.12: 1-3)

பகைவரின் அடையாளப் பொருள்களுக்குத் (Totem) தீங்கு விளைவிப்பதன் வாயிலாகப் பகைவருக்குத் தீங்கு விளைவிப்பதாகக் கருதியநிலை உள்ளீடாக இருக்கக் காணலாம். காவல் மரத்தின் அனைத்துப் பகுதிகளும் புனிதமாக நினைக்கும் போக்கும் இருந்திருக்க வேண்டும். நன்னன் மாமரத்தினைக் காவல் மரமாகக் கொண்டிருந்த செய்தியினைக் குறுந்தொகைப் பாடல் (252 : 1-4) தெரிவிக் கின்றது. அம்மரத்தின் காயினை, நீராடச்சென்ற பெண் எடுத்துத் தின்றதற்காகக் கொலைத் தண்டனை விதிக்கப் பெற்றாள். காவல் மரத்தின் பகுதிகளைப் பயன்படுத்தக் கூடாது என்ற விலக்கு (Taboo) இங்கு மீறப்பட்டதாகக் கொள்ளலாம்.

அதிகமான் அஞ்சி ஏழரசர்களை வென்றான்.இவர்களின் குலக்குறிகளைச் சேர்த்து இலாஞ்சினையாக அமைத்துக் கொண்டான். (புறம். 99) கேழல் (பன்றி), மேழி (கலப்பை) கலை (மான்), ஆளி (சிங்கம்) வீணை,சிலை (வில்),கெண்டை (மீன்) ஆகிய அவ்வேழு அரசர்களின் பொறிகளையும் தன் இலாஞ்சினையில் அமைத்துக்கொண்டான்,

நாட்டுப்புற மக்களின் பழக்க வழக்கங்களில், பழங்கதை களில் குலமரபுச் சின்ன முறைமை குறித்துப் பல செய்திகள் கிடைக்கலாம். எடுத்துக்காட்டு விளக்கமாக ஒரு கதையை இங்குக் குறிப்பிடலாம். காளிகதை என்ற அம்மன் பாட்டு நாட்டுப்புற மக்களிடம் செல்வாக்குப் பெற்று விளங்கும்

கதையாகும். இக்கதை, கதைப்பாடல் வடிவிலும் கூத்துக் கதையிலும் விரிவாக இடம்பெறுகிறது. காளியானவள் எருமைத் தலைகொண்ட மகிடாசுரனை அதம் செய்து கொன்றாள் என்பது கதை. எருமையைக் குலமரபுச் சின்னமாகக் கொண்ட இனக்குழு மக்களின் தலைவன் மகிடாசுரன் எனக் கருத இடமுண்டு. இக்கதையில் காளி, நாகத்தைக் குலமரபுச் சின்னமாகவுள்ள நாகர் இனத்தவரிடையே தோன்றுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது போன்ற செய்திகளைக் குலமரபுச் சின்னத்துடன் இணைத்து மேலும் ஆய்வு நிகழ்த்த வாய்ப்புண்டு.

குலக்குறி நாளடைவில் மனித உருப்பெற்று வழி பாட்டிற்குரியதாயிற்று. சான்றாக வள்ளி கதையை இங்குக் குறிப்பிடலாம். குறிஞ்சி நிலத்தினருக்கு வள்ளிக் கிழங்கு உணவுப் பொருளாகும். இதனை அகழ்ந் தெடுத்து வேகவைத்தும் சுட்டும் உண்ணுகிறார்கள். இந் நிலையில் வள்ளிக்கிழங்கு செழிப்பின் அறிகுறியாகக் குலக்குறியாக (Symbol) மாறுகிறது. காலப்போக்கில் வள்ளித்தெய்வமாகவும் இக்குலக்குறி வளர்ச்சி பெறுகிறது. வள்ளிக்கிழங்கைத் தோண்டிய குழியில் வள்ளி பிறந்தாள் என்ற புனைகதை இங்குக் கருதத்தக்கது. இவ்வகையில் புராணக்கதைகளை மேலும் ஆய்விற்குட்படுத்தினால் பல செய்திகள் புதிதாகக் கிடைக்கக்கூடும்.

பழங்குடி மக்களிடம் இம்முறை இன்றளவும் வழக்கத்தில் இடம்பெற்று வருகிறது. இதனைக் களஆய்வின்வழி உறுதிப் படுத்த வாய்ப்புண்டு. தண்டப்புலையர் என்ற இனத்தவர் தென் மலையாளத்தில் வாழும் புலையரில் ஒரு பிரிவினர். இவர்கள் தண்டக்கொடியினை அறுத்து, அவைகளின் மூலம் செய்த ஆடையினையே அணிவர். தெலுங்கு, கன்னட நாடு களிலிருந்து வந்த சக்கிலியர் ஆவரஞ்செடியை மிகப் புனித

மாகக் கருதி வருகின்றனர். விசாகப்பட்டினத்தருகில் மலைப் பகுதிகளில் வாழும் குர்னியர், தொரியர் எனப்படுவோர், பாம்புகள் உறையும் எறும்புப் புற்றினை வணங்குவர். பாம்பின் தலை போன்ற அணிகலன்களை அணிவதும் இவர் களிடையே வழக்கமாக உள்ளது. கோயம்புத்தூர் பகுதி களிலுள்ள காட்டுக்குடியிருப்புகளில் இருளர்கள் எனும் பழங் குடியினர் வாழ்ந்து வருகின்றனர். இவர்களிடம் 'கரட்டிக' என்னும் குலம் காணப்படுகிறது. இக்குலத்தைச் சார்ந்தவர் கள் தங்கள் முன்னோர்கள் கரடியிலிருந்து வந்ததாக நம்பு கின்றனர். கரடி இவர்களின் குலமரபுச் சின்னமாக இருந் திருக்கலாம். இவ்வாறு பழங்குடி மக்களிடம் குலச்சின்ன முறைமை வழக்கில் இடம்பெற்று வருகிறது.

முடிவுரை:

இனக்குழு மக்கள் உயர்ந்த சமூக வளர்ச்சியினைப் பெறு வதற்குக் குலமரபுச்சின்ன முறைமை பலவழிகளில் உதவி யிருக்கிறது. சமயத்தின் தோற்றம், புறமணக் கொள்கை போன்றவற்றில் ஆய்வு செய்கிறவர்களுக்குக் குலமரபுச் சின்னம் பற்றிய கோட்பாடுகள் மிகுந்த நிலையில் உதவியாக இருக்கும். குலக்குறி அமைப்புத் தலைமாறி எதிர் குணத் துடன் சாதியாக மாறியுள்ளதை லெவிஸ்ட்ராசு குறிப்பிடு கிறார். இந்நிலையைக் கருத்தில் கொண்டு மேலும் ஆய்வுகள் நிகழ்த்த வாய்ப்புண்டு. இலக்கியத்தின் வழிப் பழங்காலத் திலிருந்த குலமரபுச் சின்னம் பற்றிய எண்ணங்களை அறிந்து கொள்ளலாம். நாட்டுப்புறமக்களின் புராணக்கதைகளையும் கதைப் பாடல்களையும் சில நம்பிக்கைகளையும் ஆய்விற்குட் படுத்தினால் குலமரபுச் சின்னம் பற்றிய செய்திகள் பல கிடைக்கலாம். நாட்டுப்புறப் பண்பாட்டில் குலமரபுச் சின்ன முறைமை எச்சநிலையில் இருக்கப் பழங்குடி மக்க ளிடம் வழக்கில் இடம் பெற்றிருக்கும் நிலையை உணர முடிகிறது.

பார்வை நூல்கள்

தமிழ்.

1. கந்தையா பிள்ளை, பி.இ., தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் ஆசிரியர் நூற்பதிப்புக்கழகம், சென்னை 1958.
2. காந்தி, க. தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாய்ச்சி நிறுவனம், சென்னை, 1980.
3. செங்கோ, வனாந்தரப்பூக்கள், நியுசெஞ்சுரி புக் கவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1979.
4. பாலசுப்பிரமணியன், இரா. கணியான்கூத்து சத்யா வெளியீடு, பாளையங்கோட்டை, 1986.

ஆங்கிலம்

5. Max Muller, F., **Anthropological Religion**, Asian Educational Services, New Delhi, 1986.
6. Sigmund Freud, **The orgins of Religion** Penguin Book Ltd., Harmonds Worth, Middle Sex

கலைக்களஞ்சியம்

தமிழ்

…………………, தமிழ்க்கலைக்களஞ்சியம் (தொகுதி-4) தமிழ்வளர்ச்சிக்கழகம், சென்னை, 1956.

ஆங்கிலம்

……………… **Encyclopeida of Britannica** William, Bentam Publishers, The University of Chicago, 1972.

3. சிறுதெய்வ வழிபாடு

வழிபாட்டு மரபில் சிறு தெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு என்ற இருமுறைகள் இடம்பெறுகின்றன. சிறு தெய்வவழிபாடு கிராமப்புறப் பண்பாட்டில் காணக்கூடிய தாகும். சிறுதெய்வங்களைக் கிராமப்புறத் தெய்வங்க ளென்றும் நாட்டுப்புறத் தெய்வங்களென்றும் வேறு பெயர் களால் வழங்குவதுமுண்டு. கிராம தேவதைகள் என்று குறிப்பிடும் போக்கினையும் ஆய்வுலகில் இடம்பெறக் காணலாம். தேவதையென்ற சொல் குறிப்பாகப் பெண் தெய்வத்தை மட்டுமே குறித்து நிற்கிறது. மேலும் அச் சொல்வழக்குக் கிராமப்புற வழக்கில் பரவலாக இல்லை. எனவே இச்சொல் பயன்பாடு பொருத்தமில்லையெனத் துணியலாம்.

சிறுதெய்வம், பெருந்தெய்வம் என்ற பாகுபாட்டில் சிறுமை, பெருமையென்ற பொருள்களுக்கு இடம் இல்லை யென்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். சமய வளர்ச் சியில் சிறுதெய்வ வழிபாடு ஒரு படிநிலையாகும். இதன் வளர்ச்சிகள் காலப்போக்கில் பெருந்தெய்வமரபுடன் இணைந்து வருவதை நடைமுறைச் சமுதாயத்தில் காணலாம். நாட்டுப்புறச் சமயத்தைப் (Folk Religion) புரிந்துகொள்வதற்குச் சிறுதெய்வ மரபுபற்றிய கல்வி நன்கு பயன்படும்.

தொடக்ககாலத்தில் வாழ்க்கையை நிலைப்படுத்தி வாழ முயன்றவர்கள் கெடுதல் செய்யும் சில சக்திகள் இருப்பதாக நம்பினர். இந்நம்பிக்கையிலிருந்து விடுபட அல்லது தப்பிக்கத் தெய்வத்தன்மையுடைய சிறு தெய்வங்களை உருவாக்கினார்கள். இவ்வகைத் தெய்வங்கள் நோய்களிலிருந்தும் பிற ஆபத்துகளிலிருந்தும் தங்களைக் காப்பாற்றுவதுடன் அந்தக் கிராமத்தையும் ஆட்சி செய்கிறார்கள் என்று நம்பினர். காட்டாக, அம்மை நோய் பரவியிருந்தால் நோய்க்குரிய காரணத்தினை நம்பிக்கையடிப்படையில்தான் அணுகுவார்கள். தெய்வக் குற்றம் அல்லது தீயசக்திகளின் காரணமாக இந்நோய் பரவியுள்ளது என்று நம்புவார்கள். இந்நோய் நீக்கத்திற்காக மாரியம்மனை வழிபடுவர்.

ஆக்கல், அழித்தல், காத்தல் போன்ற நிலையில் பெருந் தெய்வ வழிபாட்டுத் தெய்வங்கள் பாகுபடுத்தப்படுகின்றன. இந்நிலைக்குப் புராணமரபுகளும், பிற செய்திகளும் உதவியாகவே இருக்கின்றன, குறிப்பாக மதக் கோட்பாடுகள் வளர்ச்சிபெற்ற நிலையினைப் பெருந்தெய்வ வழிபாட்டில் காணலாம். சிறு தெய்வ வழிபாட்டில் சமயக் கோட்பாடுகளைக் காண்பதே அரிது. சில நம்பிக்கைகள்தான் நாட்டுப்புறச் சமயத்தை வழிநடத்திச் செல்கின்றன. இந்நம்பிக்கை மரபுகள் வாய்மொழி மரபிலேயே வளர்ந்து வருகின்றன. சமயத்தின் பரிணாம வளர்ச்சியில் இத்தகு நம்பிக்கைகள் ஒரு படிநிலையென மதிப்பிடுவர். கிராமியத்தெய்வங்களுக்கு மனிதனைப் போன்றே கோபங்கள், எண்ணங்கள், ஆசைகள் இருக்கக்கூடுமென்று நம்புவது மன்னியல்பு சார்புக் கொள்கையின் ஒருபடி நிலையாகும் (Mental or Moral Anthropomorphism) கிராமிய தெய்வங்களுக்கு விழா எடுக்காவிட்டால் தெய்வக் குற்றங்கள் ஏற்பட்டு சீற்றங்கள் ஏற்படும். எனவே. நோய், மழையின்மை ஏற்படக்கூடும் என்பதை இங்கு நினைவுகூரலாம். சிறுதெய்வங்கள் மனிதனைப் போல விரும்பி உண்ணும் இயல்பினைக் கொண்டவை என

நினைத்துப் படையல்கள் படைக்கின்றார்கள். கருப்ப சாமிக்கு சுருட்டு, கள் போன்ற படையல்களைப் படைப்பது முண்டு.

சிறுதெய்வங்களுக்கான கோயில்கள் மரத்தின் கீழும், நீர் நிலையுடனும் தொடர்பு கொண்டிருக்கும். பெரும் பான்மையான ஐயனார் கோயில்கள் ஊருக்குப் புறம்பான சோலைகளில் இருப்பதை இன்றும் காணலாம். மேலும் ஊரிலுள்ள பொது இடங்களிலும் மந்தைவெளிகளிலும் சிறு தெய்வங்களுக்கான கோயில்களைக் காணலாம். பண்டைக் காலத்தில் ஊர்களில் அமைந்துள்ள சதுக்கம், சந்தி, மன்று, பொதியில்களில் தெய்வங்கள் போற்றப்பட்டதற்குச் சான்றுகள் கிடைக்கின்றன. இவற்றில் சதுக்கம் என்பது நாற்சந்தி. சந்தி என்பது முச்சந்தி, ஐஞ்சந்திகளைக்குறிக்கு மென்பர். பொதியில் என்பது ஊர்ப் பொதுவாக உள்ள மந்தைவெளியாகும். இதனை அம்பலமென்றும் இலக் கியங்கள் குறிப்பிடும். அந்த அம்பலத்தில் உள்ள சுவர்களில் சித்திரம் தீட்டப்பட்டிருப்பதை எழுது எழில் அம்பலம் (பரி. 18:28) எனக் குறித்ததாகத் தெரிகிறது. இத்தகு சுவர்த்தெய்வங்களை கிராமத்திலுள்ள பொதுச்சாவடி களில் காணும் சுவர்த் தெய்வங்களுடன் இணைத்துப் பார்க் கலாம்.

கோயில்கள் பெரும்பாலும் மண்ணாலோ அல்லது செங்கல்லாலோ கட்டப்பட்டு வீடு போன்றிருக்கும். அல்லது கூரைகள் கொண்ட கூடுபோலவும் இருக்கும். சில இடங்களில் மேடைபோன்ற அமைப்பை மட்டுமே காணலாம். கோயிலி லுள்ள சிலைகளும் சிற்பசாத்திரங்களிலிருந்து விலகியே இருக்கும். சிலைகள் மண்ணாலும் கல்லாலும் அமைந்திருக் கலாம். பெருந்தெய்வக் கோயில்களில் கோயில்களும், சிலைகளும் சிற்பசாஸ்திர நுணுக்கம் கொண்டவை. கலை யழகுத் திறனுடன் செய்யப்பட்டவையாகும்.

சிறுதெய்வ வழிபாட்டு மரபில் வேதமரபுகள், ஆகம மரபுகள் பற்றிய அடிப்படைகள் இல்லை. பூசைசெய்கிற வர்களும் பல இனத்தவர்களாகவே இருக்கின்றனர். அறுவடைக்குப் பின் உள்ள பொங்கல் வழிபாடே சிறப் பானது. நாள்வழிபாட்டுச் சிந்தனைகள் பெரும்பாலும் இல்லை. பூசை மரபில் பலிமுறைக்குச் சிறப்பிடமிருப்பதை உணரலாம். பெருந்தெய்வவழிபாடு வைதீக அடிப்படை பெற்றவை. நாள் வழிபாடு சிறப்பு வழிபாடு போன்றவை இடம்பெற்றிருக்கும். குறிப்பாக சைவபூசை வைதீக நெறியினரால் நிகழ்த்தப்பெறும். அம்முறையில் பழமைமரபு சிறுதெய்வ வழிபாட்டில் எச்சமாக இருப்பதை உணரலாம்.

கிராமிய தெய்வங்களின் வழிபாட்டு மரபில் இடம் பெறும் கலைநிகழ்ச்சிகள் பண்பாட்டுச் சிறப்புப்பெற்றவை. வில்லுப்பாட்டு, கணியான்கூத்து, தெருக்கூத்து. கரகாட்டம் போன்றவைகளை அவ்வகை மரபின் வழி இணைத்துப் பார்க்கலாம். கலைநிகழ்ச்சியில் இடம்பெறும் பாடல்களில் சிறு தெய்வங்களைப் பற்றிய பழமரபுக் கதைகளைக் (Legend) காணலாம். தெருக்கூத்தில் புராணக்கதைகளின் செல்வாக்கு மிகுதியாக உள்ளன. கதைகளை மக்களுக்குக் கடத்தும் செய்திமார்க்கமாகவே (Communication) கலை நிகழ்ச்சிகள் விளங்கிவந்துள்ளன.

எனவே, சிறுதெய்வவழிபாடு கிராமத்தை அடிப்படை அலகாகக் கொண்டது. சமயக் கோட்பாடுகள் விரவாமல் நம்பிக்கையின் அடிப்படையில் இயங்குகின்ற நாட்டுப்புறச் சமயத்தைச் சிறுதெய்வ வழிபாட்டில் காணலாம். கோயில் சிலை முறை போன்றவற்றில் சாத்திரங்கள் பின்பற்றப் படுவதில்லை. வழிபாட்டு மரபு, கலை நிகழ்ச்சி போன்ற பல நிலைகளில் பெருந்தெய்வ வழிபாட்டுடன் வேறுபடுகின்றன. பண்டைத் தமிழ் மரபுகள் பல சிறுதெய்வ வழிபாட்டின் எச்சமாக உள்ளன.

வகைப்பாடு :

வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு சிறுதெய்வ வழிபாட்டைக் கீழ்க்கண்டவாறு பகுக்கலாம். 1. வீரவழிபாடு 2. முன்னோர் வழிபாடு.

வீரவழிபாடு :

பெருவீரர்களுக்குக் கல்நட்டு வழிபடுவது பண்டைத் தமிழ் மரபில் காணக்கூடியதாகும். வீரக் கல்லில் வீரர்தம் பெயர்களும் அவர்தம் சிறப்புக்களும் பொறிக்கப்பட்ட நிலையில் எழுத்துடை நடுகல் இருந்ததை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. (ஐங்.352).

விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்
எழுத்துடை நடுகலென்ன விழுப்பினார்

வீரத்தைப் போற்றும் பண்பு இருந்தாலும் ஆவி பற்றிய நம்பிக்கையே நடுகல்வழிபாட்டின் அடிப்படையெனக் கூறலாம். சமுதாயத்தில் நல்மதிப்புப் பெற்றவர்களுக்கும் காலப்போக்கில் நடுகல் பழக்கம் உண்டாயிற்று. தமக்கு மாறாக எழுந்த புதல்வர்களுக்குத் தன்நாட்டையும் அரச செல்வத்தையும் அளித்துவிட்டு வடக்கிருந்து உயிர்நீத்த கோப்பெருஞ்சோழனுக்கு நடுகல் நடப்பட்டதாகப் புறநானூறு குறிப்பிடுகிறது.


சிறுதெய்வ வழிபாட்டிலும் முற்சுட்டிய மரபுகளைக் காணுதல் இயலும். ஆண்கடவுளர்கள் பலர் வீரத்திற்காக வாழ்ந்து போரிட்டவர்கள் என்பதைக் கதைப் பாடல்கள் தெளிவுறுத்துகின்றன. மக்கள் மத்தியில் நன்மைக்காகப் போராடிய தலைவர்கள் பிற்காலத்தில் சிறுதெய்வநிலைக்கு உயர்த்தப்பட்ட நிலையினையும் காணலாம்.

முன்னோர் வழிபாடு :

இறந்தவர்களின் நற்செயல்களாலும் பயத்தாலும் அவர்களைத் தெய்வமாக்கி வழிபடும் மரபும் பண்பாட்டில் இடம் பெறத் தொடங்கியது. ஒரு குடும்பத்தாரால் வழிபடும்

நிலையில் இம்முறை பெருவழக்காக இருக்கிறது. பழந் தமிழர் இலக்கியங்களில் குறிக்கப்படும் தென்புலத்தார்களை இவ்விடத்தில் இணைத்துப் பார்க்கலாம். இவர்களைப் பிதிரர் என்றும் குறிப்பிடுவர். இவர்களுக்குரிய சடங்கு பிதிர்க்கடன் எனப்படும். இச்சடங்கின் வளர்ச்சி நிலையாக முன்னோர் வழிபாட்டைக் கொள்ளலாம். நடுகல் வரலாற்றிலிருந்து முன்னோர் வழிபாடு வேறுபட்டது. இரண்டிலும் இடம்பெறும் ஆவி பற்றிய நம்பிக்கை பொதுவானதாகும். நடுகல் வழிபாட்டில் வழிபட்டோர் அனைவரும் உதவி பெறுவதாக நம்பிக்கை. முன்னோர் வழிபாட்டில் குடும்பம், உறவு, இனம் சார்ந்தவர்களே வழிபாட்டில் ஈடுபடுவர். முன்னோர் வழிபாட்டில் பெண் களுக்கும் இடமுண்டு. பெரும்பான்மையான வீட்டுத் தெய்வங்களும் குலதெய்வங்களும் பெண் தெய்வங்களாகவே இருக்கின்றனர்.

சிறுதெய்வ வழிபாட்டின் வகைப்படுத்தலில் கீழ்க்கண்ட முறை இவ்வாய்வில் பயன்படுத்தப்படுகிறது. இயற்கையை யும் சமுதாயத்தையும் அடிப்படையாகக் கொண்டு இப் பாகுபாடு அமைகிறது.



இயற்கைத் தொடர்பான வழிபாட்டுச் சிந்தனைகள் இயற்கைவழிபாடு என்ற பகுதியில் விரிவாக விளக்கப்

பட்டுள்ளன. இயற்கை வழிபாட்டுக் கூறுகள் நாட்டுப்புறப் பண்பாட்டில் இன்றும் காணக்கூடியதாகும். இரண்டாம் வகைப் பிரிவுத் தெய்வங்களை இனிவரும் பகுதிகளில் விளக்கமாகக் காணலாம்.

வீட்டுத்தெய்வம் :

முன்னோர் வழிபாட்டின் தொடர்புகொண்டவை. கன்னி கழியாமல் அகால மரணமடைந்தவர்களும், நோய் வாய்பட்டு (அம்மை) இறந்தவர்களும் தெய்வமாக்கப் படுகின்றனர். பண்டைத் தமிழ் நூல்கள் குறிப்பிடும் இல்லுறைத் தெய்வத்தை வீட்டுத் தெய்வத்துடன் தொடர்புபடுத்தவியலுமா? என்பது விரிவாகச் சிந்திக்கப் பட வேண்டிய ஆய்வாகும்.

> நெல்லும் மலரும் தூஉய்க் கைதொழுது
> மல்ல லாணையலமயைரா
>
> (நெடுநல்வாடை : 42-44)

இல்லில் அமைந்த தெய்வத்தை மாலைக்காலத்தில் பெண்டிர்கள் விளக்கேற்றி நெல்லும் மலரும் தூவி வழிபட்டமை தெரியவருகிறது. மலர்ப்பலி அக்காலத்தில் வழக்கில் இருந்ததையும் இதன் வழியுணரலாம். இல்லங்களில் மகளிர் வழிபடும் தெய்வங்களுள் ஒன்று பாவையாகும். சுவரில் ஓவியமாகத் தீட்டி வழிபட்ட நிலையினையும் உணர முடிகிறது.

குலதெய்வம் :

வீட்டுத் தெய்வங்கள் குடும்பத்தை அடிப்படையாகக் கொண்டவை. இத்தெய்வங்களின் வளர்ச்சியே காலப் போக்கில் குலதெய்வமாக மாறுகிறது. குலதெய்வத்திலும் முன்னோர் வழிபாட்டின் எச்சத்தை உணரலாம். ஒரு குடும்பம் பல குடும்பங்களாகப் பிரிந்து வாழத் தொடங்குவது காலத்தின் விளைவாகும். அக்குடும்பங்கள் ஒரே உறவு முறையாகும்போது குலம் ஆகிறது. வடமொழியில்

இதனை 'கோத்திரம்' என்ற சொல்லால் குறிக்கின்றனர். இந்தக் குலத்திற்குப் பொதுவான தெய்வம் குலதெய்வ மாகும்.

குலதெய்வ வணக்கமுறையினால் சமுதாயப்பயன்பாடு கிடைக்கிறதெனலாம். ஒரு கோயிலை அல்லது தெய்வத் தினை வணங்கும் முறையிலிருந்து ஓர் இனத்தை அடையாளங் காணலாம். இவர்கள் தங்களுக்குள் பங்காளி உறவு முறையினராக இருப்பார்கள். அவர்களுக்குள் மண உறவுத் தடையும் உண்டு. இவ்வொழுங்கு சமுதாய ஒழுங்கிற்கும், வளர்ச்சிக்கும் உதவி செய்யக்கூடியது என மதிப்பிடலாம். எனவே, வேறு தெய்வத்தைக் குலதெய்வ மாகக் கொண்டவர்களிடம்தான் அவர்கள் திருமண உறவு கொள்ளுதல் இயலும்.

ஒவ்வொரு குலதெய்வத்திற்கும் பழங்கதையின் தொடர்பு இருக்கும். பழங்கதையோடு நேரடித்தொடர்பு பெற்ற இடத்தில் உள்ள கோயில் மூலக்கோயிலாகும். வேறு இடங்களுக்குச் செல்லும்போது பிடிமண் எடுத்துக் கோயில் கட்டிக் கொள்வார்கள்.

குலதெய்வம் — இனத்தெய்வம் என்ற பாகுபாடு பெருத்த வேறுபாடுகளைக் கொண்டதில்லை. இவ்வகைத் தெய்வங்களின் தோற்றம் பற்றிய கதைகள் ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டியவை.

பிள்ளை இனத்தார்களுக்கு சேலைக்காரியம்மன் குலதெய்வமாகும். சமீன் பரம்பரையில் வந்த நாய்க்கர் ஒருவர் பிள்ளைமார் இனத்துப் பெண்ணை மணம் செய்ய முற்படுகிறார். இதனைத் தடுக்கும் முகத்தான் அலங்கரிக்கப் பட்ட அப்பெண் பூமிக்கடியில் குழிதோண்டிப் புதைக்கப் படுகிறாள். (சில இடங்களில் கதை வேறுபாடு — உயிரோடு எரிக்கப்படுகிறாள். சேலைமட்டும் வேகவில்லை). எனவே, அப்பெண் தெய்வமாக்கப்பட்டு வணங்கப்படுகிறாள்.

ரெட்டிமக்களின் குலதெய்வம் முத்தியால் அம்மனாகும். மக்கள் இடம்விட்டு இடம்பெயர்ந்தால்கூட அத்தெய்வம் கூட வந்து காப்பாற்றியதாகக் கதை அமைகிறது. முத்தியாலம்மனுக்குப் பிடித்தது செடல் திருவிழா. மணமாகாத இளைஞரின் முதுகிலும் இடுப்பிலும் குதிங்கால்களிலும் கொக்கிகள் போட்டு அதனைச் சங்கிலியால் பிணைத்துத் தேவி ஆலயத்தின் கொடிக்கம்பத்தின் மீது மாட்டிவிடுவார்கள். கம்பத்தைச் சுற்றி அந்த இளைஞன் பறந்து வருவான்.

இந்தத் திருவிழாவைப் பார்க்க மன்னன் சுல்தானும் வந்திருந்தார். விழாக்கும்பலில் இருந்த ரெட்டி குலப் பெண்ணைப் பார்த்து, அவளை அடைய முயற்சி செய்கிறார். பெண் அழைப்புச் சம்பிரதாயத்தின்போது சொறிநாயை அலங்கரித்து அனுப்பிவிட்டு அவ்விடத்தை விட்டு வெளிக்கிளம்புகிறார்கள். ஆறு குறுக்கிடுகிறது. தெய்வத்தின் அருளால் ஆறு வழிவிடுகிறது. ஆற்றைக் கடந்து சுல்தானிடமிருந்து தப்பிக்கிறார்கள். இங்கு வந்ததும் தங்கள் குலதெய்வ வழிபாட்டைத் தொடர்கிறார்கள்.

ஸ்ரீ சௌடாம்பிகை அம்மன் தேவாங்கர்களால் வழிபடப்படும் குலதெய்வமாகும். மகாராஷ்டிரத்தில் மட்டும் இந்த அம்மன் வனசங்கரியென்ற பெயருடன் சேர்ந்து காணப்படுகிறது. சாகாம்பரி என்ற மற்றொரு பெயரும் உண்டு. தேவாங்க முனிவனை அசுரர்களிடமிருந்து காப்பாற்றியவள் சௌடாம்பிகை. சிங்கவாகனத்தை உடையவள் அவள். அவள் அசுரர்களை வென்றது அமாவாசை இரவாகும். ஆகவே அமாவாசைதோறும் குலத்தொழிலாகிய நெசவைச் செய்யாமல் அம்மையைத் தொழுகின்றனர்.

இதுபோன்று ஒவ்வொருவரின் குலதெய்வத்திற்கும் கதைகள் வழங்குகிற மரபு உண்டு. இதனைச் சேகரித்துத் தனித்த விரிவான நிலையில் ஆய்வுகள் நிகழ்த்த வாய்ப்

புண்டு. இக்கதைகள் மிகச்சமீப காலத்தில் நிகழ்ந்தவையாக சில அமையலாம். இங்கு கூறப்பட்ட கதைகளில் முன்னிரண்டும் அவ்வகையில் அடக்கலாம். புராண மரபேற்று அமையும் கதைகள் சில. இறுதியாகக் குறிப்பிடப் பட்ட கதை இவ்வகைக்குள் அடங்கிவிடும். இவ்வகைக் கதைகள் பற்றிய காலம் மிகப் பழமையாக இருக்கலாம். முன்னிரண்டு கதைகளிலும் பெண்கேட்டல் — மறுத்தல் என்ற செய்கை சாதி அடிப்படையில் எழுந்து, அதிகார அடிப்படையில் முயற்சிசெய்து மீறப்படல் செய்கை இடம் பெறும் நிலைகளைக் காணலாம்.

பொதுத்தெய்வங்கள் :

கிராமத்தைக் காத்துவரும் தெய்வங்கள் பொதுத் தெய்வங்களாகும். பலவிதமான தீயசக்திகளிடமிருந்து இத் தெய்வங்கள் மக்களைக் காத்துவருகின்றன. விவசாயம் செழிக்க மழைவேண்டும். மழைக்குக் காரணமானவர்கள் கிராமியத் தெய்வங்களே என்பது பொதுநம்பிக்கை. கால் நடைச் செல்வங்கள் நோயின்றிப் பெருகக் காரணமாக இருப்பவர்கள் இத்தெய்வங்களே. நோய், எதிரிகள் பயம் போன்றவற்றிலிருந்து மக்களைத் தப்புவிக்கிறவர்களும் கிராமியத் தெய்வங்கள்தான். இத்தெய்வங்களின் தோற்றம் பற்றிய ஆய்விலும் முன்னோர் வழிபாட்டின் இயல்புகளை உணர்ந்துகொள்ளலாம். எந்த ஊர்ப் பொதுத் தெய்வத் திற்கு மிகுதியான விழாக்கள் எடுக்கப்படுகின்றனவோ அந்தத் தெய்வம் சக்தி வாய்ந்த தெய்வமாகக் கருதப் படுவதுண்டு. கிராமத்திலுள்ள எல்லாச் சாதியினரும் பொதுத்தெய்வ வழிபாட்டில் கலந்து கொள்வதுண்டு. விழா வழிபாட்டிற்கான செலவுகளைத் தங்களுக்குள் பகிர்ந்து கொள்வர்.

அய்யனார் :

எல்லாக் கிராமங்களிலும் இருக்கும் காவல் தெய்வம். பெரும்பாலும் ஊருக்கு வெளியே இத்தெய்வத்திற்கான

கோயில் அமைந்திருக்கக் காணலாம். ஐயனாருக்குச் சாத்தன், சாதவாகன், கோழிக்கொடியோன் போன்ற பெயர்கள் இருப்பதாக திவாகரநிகண்டு குறிப்பிடும். சாத்தன் என்பது பழமையான பெயர். சிலப்பதிகாரத்தில் பாசண்ட சாத்தன் என்ற பெயர் குறிப்பிடப்படுகிறது. பச்சை நிறக் குதிரையை ஊர்தியாக உடைய காரணத்தினால் பரியூர்தியென்றும், பச்சைப் பரியுள்ளோன் என்றும் இலக்கியங்கள் சுட்டுகின்றன. வெள்ளையானை வாகனன் என்று பிங்கலம் குறிப்பிடும். சிலப்பதிகாரத்தில் புறம்பணையான் கோட்டம் சாத்தனுடன் தொடர்புடையதாகக் குறிப்பிடும்.

கிராமத்தில் உள்ள ஐயனாருக்கும் குதிரைவாகனம் உண்டு. குதிரைக்குப் பக்கத்தில் நாய், வீரர்கள் ஆகியோரின் சிலைகளும் இருக்கக் காணலாம். பெரும்பாலும் மண்சிலைகளும் சிறுபான்மை கற்சிலைகளும் உண்டு. பொய், திருடு போன்றவைகளைக் கண்டிக்கிற தெய்வமாகவும் அய்யனார் கருதப்படுகிறார். இவர்க்குரிய பூசையும் சைவபூசையாகவே இருக்கும். திருமால் மோகினி அவதாரம் எடுத்த காலத்தில் - சிவனுக்கும் திருமாலுக்கும் இடையில் பிறந்தவர் என்ற புராணக் கதையும் இணைத்துப் பேசப்படுவதுண்டு. கேரளாவில் உள்ள சாஸ்தா வழிபாட்டை ஐயனார் வழிபாட்டுள் இணைத்துப் பார்க்கலாம் என்று கூறுவாரும் உளர்.

கறுப்பசாமி:

இவர் அய்யனாரின் துணைத்தெய்வமாக விளங்குகிறார். பெரிய கறுப்பசாமிக்குத் துணையாக சின்னக்கறுப்பு, மந்தைக் கறுப்பு, நொண்டிக் கறுப்பு, சங்கிலிக் கறுப்பு, சன்னாசி போன்றதெய்வங்களையும் மதுரைவட்டாரத்தில்காணலாம். பேய், பிசாசு போன்ற தீயசக்திகளிடமிருந்து மக்களைக் காக்கும் தெய்வமாக இவர் கருதப்படுகிறார். சில இடங்களில் இவரை வேட்டைத் தெய்வமாக்கியும் வணங்குவர்.

மதுரைக்கருகில் அழகர்மலைக் கோயிலில் உள்ள பதினெட்டாம்படிக் கறுப்பிற்குத் தனிமதிப்பு நாட்டுப் புறத்தார்களிடம் உண்டு. கறுப்புத் தெய்வங்களுக்கெல்லாம் இத் தெய்வம் பிரதான தெய்வமாகக் கருதப்படுவதுண்டு. திருடு, பொய் தொடர்பாக சத்தியம் செய்கிறவர்களுக்கு இக் கோயிலின் சந்நிதி திறக்கப்படும். பொய்ச்சத்தியம் செய் கிறவர்களைப் பதினெட்டாம்படிக் கறுப்புத் தண்டித்துவிடும் என்பது நம்பிக்கையாகத் தெரிகிறது. அழகர் சித்திரை மாதத்தில் மீனாட்சி கல்யாணத்திற்காகப் புறப்படும்போது அவர் மீதுள்ள நகைகளின் விவரம் பதினெட்டாம்படிக் கறுப்பனிடம் காட்டவேண்டும். அழகர் திரும்பிவரும்போது அந்தப் பட்டியலைப் படித்துச் சரிபார்ப்பார்கள். கோயில் பண்டாரத்தின் சாவி தினந்தோறும் இந்தத் தெய்வத்தின் முன்னிலையில் வைப்பார்கள். ஆந்திரத்தில் போத்திராசு என வழங்கப்படும் காவல்தெய்வத்தைக் கறுப்பசாமியுடன் இணைத்துப் பார்க்கலாம்.

சுடலை மாடன்

திருநெல்வேலி மாவட்டத்தில் பரவலாகக் காணக் கூடிய தெய்வம் சுடலைமாடனாகும். தனிப்பட்ட சிறு கோயில் களிலும் பெருந்தெய்வக் கோயில்களில் துணைத்தெய்வமா கவும் இடம்பெற்றிருக்கக் காணலாம். இத்தெய்வம் பெருந் தெய்வத்துடன் புராணமரபில் இணைக்கப்பட்டிருப்பதைக் கதைப்பாடல் செய்திகள் புலப்படுத்துகின்றன.

பிறப்பும் இறப்பும் இல்லாத பரமேஸ்வரனை நினைத்துத் தக்கன் பன்னிரண்டு வருடங்கள் தவம் செய் கிறான். சகல உலகமும் அவனை வணங்க வேண்டுமென வரம் கேட்கிறான். பார்வதி தேவியை மகளாகத் தந்து பருவகாலத்தில் மணமுடித்து மருமகனாகக் காட்சிதரும்படி வேண்டுகிறான், அந்த வரமும் கிடைக்கிறது.

பிரம்மதேவனை வைத்துத் தக்காபுரம் என்ற பட்டணத்தை உருவாக்கி வேதவல்லியென்பாளை மணந்து வாழ்கிறான். கற்பமுற்று ஒரே சூலில் நூறு பிள்ளைகளைப் பெறுகிறான். அவர்களை வீரபட்டம் பெற்று வரும்படித் தவத்திற்கனுப்புகிறான். அவர்கள் தவத்தை நாரதர் கெடுத்துவிடுகிறார். ஆண்பிள்ளையினால் பலன் இல்லை யெனத்தெளிந்து பர்வதாதேவியை மகளாக வேண்டுகிறான். பார்வதியைக் குழவியாக்கித் தக்கன் யாகம் செய்யும் சாலைக்கருகில் தாமரைத் தடாகத்தில் தாமரைப் பூவில் இருத்துகிறார். தக்கன் எடுத்து வளர்த்து வருகிறான். பன்னிரெண்டு வயது வந்தவுடன் தக்கனுக்குத் தெரியாமல் பார்வதிதேவியை அழைத்துச் சென்றுவிடுகிறார். தம்மை மதியாமல் சென்ற பரமனை மதியாமல் ஒரு யாகம் செய்ய நினைக்கிறான்.

முத்துக்கனலென்ற வேள்வியினைச் செய்கிறான். மற்றக் கடவுளர்களும் தேவர்களும் வரவழைக்கப்படுகிறார்கள். பரமன் நந்திதேவரை அனுப்பிப் புத்திமதி சொல்லவைத்தும் பலனில்லை. பார்வதி சமாதானத்திற்குச் சென்றும் தக்கன் கேட்கவில்லை, பரமன் சினக்கிறார். அந்தக் கோபாக்னியில் வீரபத்திரதேவர் பதினெட்டுக்கையுடன் பிறந்து பூதப்படை களுடன் சென்று தக்கனை வதைக்கிறார். தலையைத் திருகி அக்னியில் போடுகிறார். பார்வதி உயிர்ப்பிக்க வேண்டு கிறாள். தலையிழந்த தக்கனின் உடலில் ஆட்டுத் தலையைப் பொருத்தி அனுப்பிவிடுகின்றனர்,

பின் தக்கன் செய்த முத்துக்கனல் வேள்வி குருதவசி ஐயாவால் மீண்டும் தொடர்கிறது. அந்த வேள்வியிலிருந்து பிரம்மசக்தி பிறக்கிறாள். பின்னர் கீழ்க்கண்டவர்களும் பிறக்கிறார்கள், சுடலைமாடன், சுடலை, முண்டன், கல்லெறிமாடன், கவுதலைமாடன், வண்ணாரமாடன்,

கலுங்கடிமாடன், ஆலடிமாடன், ஆற்றடிமாடன், அருதகுல மாடன், உச்சிப்புலிமாடன், புலைமாடன். இருளகற்றி மாடன், திருக்குழிமாடன், பள்ளிமாடன், குழிதோண்டி மாடன், இடுகாட்டுமாடன், சுடுகாட்டுமாடன், ஆத்திமாடன் உத்திரமாடன், கழுமாடன், மாடி முதலியோராகும்.

இவர்களுக்கெல்லாம் பரமன் கைலையில் ஊட்டு கொடுக்கிறார். பூலோகத்தில் வாழும் கணியான் நாக்குவெட்டிப் பூசை கொடுத்தால்தான் பூலோகத்திற்குப் போவேன் எனக் கூறிவிடுகிறான் சுடலைமாடன். பின் பூசையுண்டு பூலோகம் வருகின்றனர். மந்திரவாதியான காளிப்புலையனின் மகள் மாவியக்கியைப் பூசையுண்ணுகின்றனர். சம்போடைசென்று சூரியச்சாம்பான் மகளையும் வதைத்துப் பூசை கொள்ளுகின்றனர். பொன்னிட்டங்காயம் வந்து மீன்பிடித்துவந்த நாடார்களிடம் பூசையுண்ணுகின்றனர். கொடிமரம் வெட்ட வந்த தபதியர்களிடம் பூசையுண்டு ஆறுமுகமங்கலத்தில் ஐகோர்ட்டு ராஜாவாகச் சிறப்புப் பெறுகின்றனர். பின் திருச்செந்தூர் சென்று பூசைபெற்றுக் காவல் தெய்வமாகின்றார் சுடலைமாடன்.

புராணக்கதைகளில் மூலக்கதையோடு அவ்வக்காலத்தில் இணைப்புக் கதைகளும் சேர்க்கப்படுவதுண்டு. அவ்வகைக் கதைகளையெல்லாம் அமைப்பியல் ஆய்விற்குட்படுத்தியும் அதேமாதிரியான கதைகளைச் சேர்த்து வகைப்படுத்தியும் ஆராய்ந்தால் மூலப்பகுதி எது? இணைந்த பகுதி எது? என ஆராயலாம். புராண தெய்வங்கள் உயர்வாகக் கருதப்பட்ட நிலையில் சிறு தெய்வங்களுடன் புராணமரபும் சேர்த்துக் கூறுவது ஒரு முறையாகிவிட்டதெனலாம். அவ்வகையில் சுடலைமாடன் கதையினையும் சிந்தித்துப் பார்க்கலாம்.

இங்குத் தக்கன் வேள்வி தொடர்பான கதைகள் புராண மரபிற்குள் அடங்குவதாகும். குருதவசி ஐயா தொடர்ந்து வேள்வி செய்து மாடர்களைப் பிறப்பித்த செய்தி இணைப்புக்

கதையாகும். சிவனே மாடனின் பிறப்பிற்கும் பூலோகத்திற்கு வருவதற்கும் உதவியாக இருக்கிறான். மாடன் கேட்கும் வரங்களையெல்லாம் தந்துஅனுப்புகிறான். மாடன் வரும்போது மீனாட்சி, கன்யாகுமரியம்மன் திருச்செந்தூர் முருகன் போன்ற பெருந்தெய்வங்களுக்கு அடங்கியவனாக இருந்தே தன் கோரத்தை வெளிப்படுத்துகிறான். இவர்களிடம் விரும்பிக் கேட்டுப் பலி (ஊட்டு) பெறுகிறான். இவனுடைய கொடூரத்தைப் பெரிதுபடுத்துவதற்காக வதை படலம் செய்திகளும் இடம்பெறுகின்றன. இவன் கொடூரத்தைப் பார்த்துப் பயந்துதான் மக்கள் தங்கள் வணக்கத்தைச் செய்கிறார்கள்.

மாரியம்மன்:

மாரியென்றால் மழையென்ற பொருளும் உண்டு. மழை பெய்யாமலிருந்தால் வெப்பநோய்கள் ஏற்படும். மழை பெய்யச் செய்து அவைகளை நீக்குபவள் மாரியாவாள். அம்மைநோய் வந்தால் நீங்குவதற்காக 'மாரியம்மன் தாலாட்டு' படிப்பார்கள். அப்பாட்டின்வழி வெளிப்படும் மாரியம்மன் பெருமைகளை இனி வரும் பகுதிகளில் காணலாம்.

மாரி, மகமாயி, மணிமந்திரி சேகரி, உமையவள், ஆதிசிவன்தேவியர், மாயன்சகோதரி, ஆயன்சகோதரி, துரந்தரி, சங்கரி, நாரணார் தங்கை, நாககன்னித்தாயாரே எனப் பலவாறு பல பெயர்களில் மாரியம்மாள் அழைக்கப்படுகிறாள். மாரியம்மாள் உமையாளின் அம்சமாகவும் ஆதிசிவனின் மனைவியாகவும். திருமாலின் சகோதரியாகவும் குறிப்பிடப்படுவது பெருந்தெய்வத்துடன் சிறுதெய்வத்தை இணைத்துப்பார்க்கும் முறையெனலாம். உயர்நிலைத் தெய்வத்துடன் இணைக்கும் மனநிலைவெளிப்பாட்டையுணரலாம். இது தெய்வநிலை மேல்நிலையாக்கமாகும்.

மாரியம்மனைப் பலவாறாக இரங்கியழைக்கும் பகுதி பின்வருமாறு :

ஆயிரங் கண்ணுடையவளே வாருமம்மா
பதினாராயிரங் கண்ணுடையவளே வாருமம்மா
மலையாள தேசமெல்லாம் விளையாடப் பெண்
பிறந்தாயே
மலையாள தேசம் விட்டு வாருமம்மா
சமைந்தாய் சமயபுரம் சாதித்தாய் கன்னபுரம்
இருந்தாய் விலாடபுரம்
சமயபுரத்தைவிட்டு வாருமம்மா
ஊத்துக்காட்டமர்ந்தவளே உதிரபலிகொண்டவளே
படவேட்டம் அமர்ந்தவளே பரசுராமனைப்
பெற்றவளே
படவேட்டம் விட்டு வாருமம்மா

இப்பாடல் வரிகளில் பரசுராமனைப் பெற்றவள் என்ற குறிப்பு வருவதைக் காணலாம். இது தொடர்பாகவரும் புராணக்கதையொன்றினைஇங்குக்காணலாம். சப்தரிஷிகளில் ஜமதக்னியும் ஒருவர். ரைவதனின் மகள் ரேணுகாவை மணக்கிறார். இவர்களுக்குத் தன்னுவன், அனுவன், விச்வாவசு, ராமன் என்ற நான்கு புதல்வர்கள். கடைசி குமாரன் பரசுராமன் என்றும் அழைக்கப்படுவான். ரேணுகா வழக்கம்போலத் தண்ணீர்கொண்டுவர நதிக்குச் செல் கிறாள், கந்தர்வன் ஒருவனின் நிழலை நீரில் கண்டு மனம் சலனப்பட்டதால் தானாக வளையும் குடம் அமையாமல் போகிறது. ஜமதக்னி கோபங்கொண்டு பரசுராமனிடம் சிரக்சேதம் செய்யச் சொல்லுகிறார். சிரச்சேதம் செய்த இடம் வெட்டுவாணம்' என்று கூறப்படுகிறது. வேலூர் - திருப்பத்தூர் மார்க்கத்தில் இந்த இடம் இருப்பதாகக் கூறுவர். பரசுராமன் தந்தையிடம் வரம்பெற்று அன்னையை உயிர்ப்பிக்கும்போது தவறுதலாக அன்னையின்தலையையும் அருகில் வெட்டப்பட்டுக் கிடந்த பெண்ணின் உடலையும்

சேர்ந்து உயிர்கொடுத்து விடுகிறார். கார்த்தவீரியனால் ஜமதக்கினி கொல்லப்பட்ட செய்திகேட்டு ரேணுகா உடன்கட்டையேறுகிறாள். வருணன் மழைபெய்விக்கவே நெருப்பு அணைகின்றது. ரேணுகையின் உடலில் கொப்புளங்கள் ஏற்பட்டு விடுகின்றன. அப்போது மும்மூர்த்திக்கும் காட்சிதந்து இரேணுகைக் கேற்பட்ட கொப்புளங்கள் போன்ற நோயை மக்களுக்குத் தரு பவளாக தெய்வமாவாய் என்றனர். அவர்கள் உன்னை வழிபட்டு பானகம், கூழ் முதலியவற்றால் உன்னைத் திருப்தி செய்து உன் அருள் பெறுவார்கள் என்றனர். சிவனிடமிருந்து சூலத்தையும் விஷ்ணுவிடமிருந்து சக்கரமும் பிரம்மனிட மிருந்து வேதங்களும் யமனிடமிருந்து பாசமும் பெற்று அந்நிய உடலைப் பூமியில் புதைத்துத் தன்முகத்தை மட்டும் காட்டிக்கொண்டு கிராமிய தெய்வமாகிறாள்.

மாரியம்மனிடம் உள்ள பொருள்களின் சிறப்பைக் காணலாம். அவளது கரகம் பிறந்தது கண்ணனூர் மேடையில்; வேம்புபிறந்தது விசய நகர்ப்பட்டணம்; சூலம் பிறந்தது துலங்குமணி மண்டபத்தில்; சிலம்பு பிறந்தது சிவாலிங்கப் பாறையில்; அலகு பிறந்தது அயோத்திநகர்ப் பட்டணத்தில்; பிறம்பு பிறந்தது பிச்சாண்டி சந்நிதியில்; உடுக்கைப் பிறந்தது உருத்திராக்ஷபூமியில்: பம்பை பிறந்தது பளிங்கு மண்டபத்தில் எனச் சிறப்பிக்கப்படுகிறாள்.

இவள் வல்பிணிகளையெல்லாம் நீக்குபவள் என்பதைக் கீழ்க்கண்ட வரிகள் உணர்த்துகின்றன.

குத்தல் குடைச்சலோடு குலைமாரிடி நோவு
மண்டைக் குலைச்சலோடு மாரடைப்புத் தலைநோவு
வயிற்றுவலி வயிற்றெரிச்சல் வாந்தியுடன் கண்ணெரிச்சல்
வாதபித்த சீதசுரம் வல்பிணியை வாங்குமம்மா
எல்லாவியாதிகளையும் ஈஸ்வரியே தீருமம்மா
இடுப்புக்குலைச்சலைத்தான் ஈஸ்வரியே தீருமம்மா

பித்தயெரிவுகளை பெற்றவளே வாங்குமம்மா
கழுத்துவலியதனை கட்டழகியே வாங்குமம்மா

நெருப்பின் அம்சமாக மாரியம்மாள் கருதப்படுகிறாள். அவளின் கொடூரத்தன்மையை மிகுதிப்படுத்துவதற்காக இப்படிக் கூறப்படுவதாகக் கொள்ளலாம். பாம்பு அச்சந்தரக் கூடியதாகும். அது மாரியம்மனிடம் பணிவிடை செய்வதாகக் கூறி மாரியம்மனின் சக்தி உயர்த்திக் கூறப் படுகிறது.

நெருப்பா உன் சுரூபம் நிஷ்டூரக்காரியே
அலைம்மா உன் சுரூபம் ஆஸ்தான மாரிமுத்தே
தலைம்மா உன் சுரூபம் தரிக்கமுடி போகாது
அண்டா நெருப்பேயம்மா ஆதிபரமேஸ்வரியே
தீண்டா நெருப்பே தேவி கண்ணனூ ராளே.

நாகங்குடைப் பிடிக்க
நல்லபாப்பு தாலாட்ட
தாலாட்ட தாலாட்ட தாயார் மனமிரங்கி
சேஷன் குடைகவிய
செந்நாகம் வட்டமிட
மார்மேலே நாகம் மடிமேல் புரண்டாட
கோபாலன் தங்கையரே தோத்தரித்தோம்

மாரியம்மன் கொடூரமானவள். ஆகையால் பலிகேட் பதிலும் தன் கொடூரத்தைக் காட்டுகிறாள். இதனைப் பின் வரும் வரிகள் உணர்த்துகின்றன.

சத்தியமாய் நீ அமர்ந்து தனிக்குட்டி காவுகொண்டாய்
எல்லையிலே நீ அமர்ந்து எருமைக்கிடா காவுகொண்டாய்
உன்னைப்போல் தெய்வமெங்குமில்லை.

மாரியம்மாள் மிகுந்த சக்தியுடையவள். பெருந்தெய்வங் களுடன் சரிக்குச்சரி நின்று வாதாடுகிற துணிவு படைத்தவள்,

சிவனுடன் வாதாடுகின்ற சித்தாந்த மாரிமுத்தே
அரனுடன் வாதாடுகின்ற ஆஸ்தான மாரிமுத்தே
பிரம்மனுடன் வாதாடுகின்ற பெற்றவளே மாரிமுத்தே
விஷ்ணுவுடன் வாதாடுகின்ற வேதாந்த மாரிமுத்தே
இயமனுடன் வாதாடுகின்ற எக்காலதேவியரே
தேவருடன் வாதாடுகின்ற தேவிகண்ணனூ ராளே.

அம்மை நோய் வந்தவர்களுக்குப் பாடும் தாலாட்டுப் பாடலில் ஒரு பகுதிக் கீழே தரப்படுகிறது. அம்மையை அம்மை என்று சொல்லாமல் (Taboo) முத்து என்றே குறிப்பிடுவர்.

சிரசினில் முத்தையம்மா தற்காத்து நீயிறக்கும்
முகத்தினில் முத்தையம்மா நீயிறக்கும்
கழுத்தினில் முத்தையம்மா கட்டழகி நீயிறக்கும்
தோளினில் முத்தையம்மா துரந்தரியே நீயிறக்கும்
மார்பினில் முத்தையம்மா மாதாவே நீயிறக்கும்
வயிற்றினில் முத்தையம்மா மகேஸ்வரியே நீயிறக்கும்
துடையினில் முத்தையம்மா தேவியே நீயிறக்கும்
முழங்காலில் முத்தையம்மா மீனாட்சி நீயிறக்கும்
கணுக்காலில் முத்தையம்மா காமாட்சி நீயிறக்கும்
பாதத்தில் முத்தையம்மா பாரிலிறக்கிவிடும்
பூமியில் இறக்கிவிடு பெற்றவளே காருமம்மா
பெற்றவளே என்தாயே பேரழகியே காருமம்மா.

அம்மை தொடர்பான நம்பிக்கைகள் கிராமத்தில் மிகுதியாக உள்ளன. அம்மைநோய் வந்ததாகக் கூறக்கூடாது. அம்மன் விளையாடியிருக்கிறாள் என்றுதான் சொல்லுதல் வேண்டும். அம்மைநோய் போய்விட்டது என்று கூறமாட்டார்கள். அம்மன் வந்து குளிர்ந்துவிட்டாள் என்றுதான் குறிப்பிடுவார்கள். இதுபோல இருக்கும் நம்பிக்கைகளையும் விலக்குகளையும் (Taboo) ஆய்விற்குட்படுத்தினால் பல புதுச் செய்திகளைப் பெறலாம்.

மாரியம்மனுக்குகந்ததாக வேப்பிலை கூறப்படும். அம்மை வார்த்தவர்களுக்கு இதனையும் மஞ்சளையும் அரைத்துப் பூசும் வழக்கமுண்டு. மகாமாரியின் கலசங்கள் அமைக்குமிடத்திலும், மகாமாரியை எண்ணி சத்ருநாசத்தின் பொருட்டுச் செய்யும் ஓமத்தில் விறகாகவும் வேப்பம் குச்சி பயன்படும். ஆகமங்களிலும் ஆக்னேய புராணத்திலும் இச் செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறுவர்.

காளியம்மன் :

சங்கநூல்களில் கொற்றவை வழிபாடு கூறப்படுகிறது. பாலைத்திணை மக்களின் தெய்வம் காடுகிழாள், காடுகிழவோள், காடுகாள் என்றும் குறிப்பிடப்படுவதுண்டு. கொற்றவையைக் கானமர்ச் செல்வியென்று குறிப்பிட்டதாகவும் குறிப்புக் கிடைக்கிறது (அகம்.345-4) கொற்றவைக்குப் பேய்கள் பணிபுரிந்த செய்தியினையும் இலக்கியங்கள் உணர்த்துகின்றன. பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய் கதை சொல்வதாகக் கலித்தொகைச் செய்தி கூறுகிறது. கொற்றவையை முருகனுடைய தாய் என்று குறிப்பிடும் போக்குப் பிற்காலத்தில் ஏற்பட்டதாகலாம்.

வடநாட்டிலே விக்கிரமாதித்தனது தலைநகரான உச்சைனியிலிருந்து காளிவந்து தென்னாட்டில் பரவியதாகத் தெரிகிறது. அக்காளி வழக்கில் உச்சினிக்காளி என்றழைக்கப்படுவதைக் காணலாம். இப்பரவலின் செல்வாக்கைக் குறித்து விரிந்தநிலையில் ஆய்வுநடத்த வாய்ப்புண்டு. தஞ்சாவூரில் குயவர் தெருவில் பெண் தெய்வத்தின் கற்சிலையொன்று கிடைத்துள்ளது. விசயாலயன் தன் புதிய தலைநகரில் நிசும்பசூதனி என்ற துர்க்கைக்கோயிலை அமைத்ததாகத் திருவாலங்காட்டுச் செப்பேடுகளின்வழி அறியமுடிகிறது. தற்போது இத்தெய்வம் உக்கிரமாகாளி என்று அழைக்கப்படுகிறது. பீடத்தின்மேல் அமர்ந்ததாக அமைக்கப்பட்ட இச்சிலையின் வலக்கால் மடங்கி ஆசனத்தின்

மீது அமர்ந்திருக்க இடக்கால் தொங்கியவண்ணமாக உள்ளது. கையில் கத்தியும் கேடயமும் உள்ளன. மேல் பாகத்திலுள்ள வலக்கையில் ஏந்திய சூலத்தைக்கொண்டு காலடியில் இருக்கும் அரக்கனைக் குத்தித் தள்ளுவது போலமைந்துள்ளது இச்சிலை.

கண்ணகி வழிபாட்டில் கண்ணகியையும் பிற்காலத்தில் காளி அம்சமாகக் கருதியதாகத் தெரிகிறது. கோவலன் கதையில் கண்ணகி முதலில் திருவொற்றியூருக்கு வந்து வட்டபுரியம்மன் என்ற பெயருடன் ஆராதிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. திருவொற்றியூர்ச் சிவாலயத்தின் உட் கோயில் வடக்குப் பிரகாரத்தில் தனியே கோயில் கொண் டுள்ள துர்க்காதேவியைக் கண்ணகியாகவே கொண்டு வழி பாடு செய்வதை மு. இராகவய்யங்கார் தம்முடைய ஆராய்ச்சித் தொகுதியில் குறிப்பிடுகிறார்.

கொற்றவை, துர்க்கை, கண்ணகி வழிபாடுகளின் பரந்து பட்ட வழக்குக் காளி வழிபாட்டில் சங்கமித்துவிட்டதை உணரமுடிகிறது. கொற்றவை வழிபாட்டில் பலி இருந்ததை இலக்கியச் சான்றுகளும் குறிப்பிடுகின்றன. பதினான்காம் நூற்றாண்டில் தோன்றிய கலிங்கத்துப்பரணியில் இவ் வழக்குக் குறிப்பிடப்படுகிறது. வீரர்கள் வரம்வேண்டித் தங்கள் உடலில் இருந்து தலைதவிர வேறு உறுப்புக்கள் அரிந்து இரத்தகாணிக்கை (நவகாண்டம்) கொடுத்தனர். இந்த வழக்கத்தைக் குறிக்கும் பல்லவகாலத்துச் சிற்பங்களும் கல்வெட்டுச் சாசனங்களும் கிடைத்துள்ளன.

காளியைப்பற்றிய புராணச் செய்திகளைக் காணலாம். தாருகன் என்னும் அரசன் பெண்ணாலன்றி வேறு எவராலும் அழிக்க முடியாத வரம்பெற்றவன். தேவர்கள் சிவனிடம் அவனுடைய கொடுமைகளை முறையிடுகின்றனர். சிவபெருமான் அருளால் தேவியின் ஒரு கலை சிவபெருமா னுடைய கழுத்தில் உள்ள நச்சுக்கறை படிந்து நெருப்புக்

கண்ணின் வழியாக வெளிப்பட்டது. அவ்வுருவம் காள மாகிய நஞ்சுபடிந்ததால் காளியென்ற பெயரை அடைந்தது. காளி தன்னுடைய சினத் தீயினால் தாருகனை அழிக்கிறாள். மகிடாசுரனை அழிப்பதற்காக சிவபெருமானின் சிற்றத்திலிருந்து வெளிப்பட்டதே காளியின் உருவம் என்ற செய்தியும் கூறப்படுகிறது. தக்கன் வேள்வியை அழிப்பதற்காகத் தேவியின் சினத்தீயில் தோன்றியவள் காளியென்ற மற்றொரு புராணக்கதையும் உண்டு. இவள் வீரபத்திரனை மணந்தாள். பொதுவாக காளி சினத்தீயிலிருந்து வெளிப்பட்டவள் என்ற கருத்தினைப் பெறலாம். உக்கிரமாகவே இருப்பாள் என்பதும் புலனாகிறது.

நாட்டுப்புறத்தில் காளிகதை என்ற அம்மன்பாட்டு கணியான் கூத்தில் இடம்பெறுகிறது. அதில் அவள் நாக முடிராசனுக்குப் பிறப்பதாகச் செய்தி வருகிறது. மகிடாசுரனை அழிப்பதற்காக வருகிறாள். பின் இறைவனிடம் வரம் கேட்கிறாள். நீங்கள் சொன்னபடி பூலோகம் செல்கிறேன். ஆனால் 'முத்துச் சிந்திவிளையாட முக்கண்ணனே வரம் வேண்டும்' பகவானும் வருவது அறியாமல் வரம் கொடுத்து விடுகிறார். கொடுக்க முத்தைச் சோதிக்கவேண்டுமென்று காளிகாதேவி நினைக்கிறாள். கொடுத்தவரம் வரமாக இருந்தால் ஆண்டவர் மேல் போட்டுச் சோதிக்க நினைத்துப் போடுகிறாள். அப்போது இடம்பெறும் பாடலாவது.

முத்துப்பட்ட முந்தா நாளே
முக்கண்ணனார் பெருமகனுக்கு
முக்குளிர விரயக்காய்ச்சல்
காய்ச்சல் அடித்த மூன்றாம் நாளாகக்
கண்டிடுமாம் கிச்சிலுப்பை
உச்சியிலே விழுந்தமுத்து
உச்சிப்பிழையாகிவிடுமாம்
நெற்றியிலே விழுந்தமுத்து

நெற்றிச் சுட்டியாக மாறிடுமாம்
மூக்காதியிலே விழுந்தமுத்து - அந்த
முக்கண்ணன் பகவானுக்கு
மூக்கடைப்பானாகி விடுமாம்
அரையிலே விழுந்த முத்து
அரைக்காப்பாக மாறிடுமாம்
பாதத்திலே விழுந்தமுத்து
பாதச்சக்கரம் போலாகி விடுமாம்

போட்ட முத்தின் கொடுமையை நீக்குவதற்கு கோபாலன் வருகிறார். காளிகாதேவியின் கையில் வேப்பங்குழையைக் கொடுத்து முத்துக்களை இறக்குகிறார். பின் முத்துக்களைக் கபடமாக வறுத்து காளிகாதேவியிடம் கொடுத்துவிடுகிறார். இக்கதையிலிருந்து அம்மை நோய்க்கும் காளி காரணமாக இருக்கிறாள் என்ற செய்தி பெறப்படுகிறது. இக்கதை திருநெல்வேலி வட்டாரங்களில் பரவலாகக் காணக்கூடிய தாகும்.

காளி, மாரி போன்ற சொற்கள் வழக்கில் சில சமயங் களில் வாந்திபேதி, வைசூரி போன்ற நோய்களைக் குறிப்பது முண்டு. உனக்குக் காளிவர, மாரிவர என்று கூறப்படும் வசைமொழிகளை இங்குக் குறிப்பிடலாம். கிராமத்தில் வடக்கே இவளுக்கான கோயில் இருக்கும். பெரும்பாலும் பயங்கள், வடக்கிருந்து வருவதாக மக்கள் நம்பியிருக் கின்றனர். கிராம வழிபாட்டில் இடம்பெறும் ஏழு சகோதரி களில் காளியும் ஒருவளாகக் கருதப்படுகிறாள். காளி வழி பாட்டில் இடம்பெறும் கும்மிப்பாடல் கீழே தரப்படுகிறது.

(காளி-மாரி கும்மி)

காளியம்மன் கோவிலிலே
கனத்தமரம் இச்சி—மேலே
பறக்குது பார் பச்சி—காளி
வகுந்திருப்பா உச்சி

கழுத்திலிடும் தாவடமும்
கனக்குதிம்பா பிச்சி
மாரியம்மா காதிலே—ஓர்
வைரக்கல்லாம் ஓலை—அவளுக்கு
மல்லிகைப் பூமாலை
மஞ்சப்பட்டாம் சேலை
மாலை கனக்குதின்னு
மகிழ்ந்திட்டாளாம் மாரி.

முத்தாலம்மன்

அன்றே பிறந்து அன்றே அழிபவள் முத்தாலம்மன். இவ்வம்மன் வழிபாடு ஆண்டுக்கொருமுறை என்ற முறை யில்லை. கிராமத்திலுள்ள அனைத்துச் சாதியினரும் ஒற்றுமையோடு இவ்வழிபாட்டில் ஈடுபடவேண்டும். ஊர் கலகம் வந்து இரண்டுபட்டால் வழிபாடு நடக்காமலிருக்கும். தொடர்ந்து வறட்சியும், பஞ்சமும் ஏற்படும்போது தங்கள் தவறுகளை உணர்ந்து வழிபாட்டினை மேற்கொள்வர். வழி பாட்டுநாளன்று வீட்டில் முத்தலாலம்மன் ஓவியம் வரையும் முறையும் உண்டு.

முத்தலாலம்மன் கும்மி பின்வருமாறு :

கும்மியடிக்கிற பெண்டுகளே—நீங்க
கோணாமே வாருங்க கன்னியரே
வளைஞ்சு கும்மியை நாமடிச்சா—நீங்க
வரங்கள் கொடுப்பாளே முத்தாலம்மா
மூங்கில் முளையிலே பச்சரிசி—நல்ல
முப்பது தேங்காயாம் சக்கரையாம்
வச்சுப்படைக்கிற முத்தாளுக்கு
வணங்கிக் கும்மி யடியுங்கடி

ஏழு சகோதரிகள்

ஏழு சகோதரிகள் மரபும் நாட்டுப்புறத்தில் காணக் கூடியதாகும். கர்நாடகத்தில் இம்மரபு இடம்பெற்றிருப்பதை

வொய்ட்ஹெட் தம் நூலில் குறிப்பிடுகிறார். மாரியம்மன், காளியம்மன், பத்ரகாளியம்மன், அரியநாச்சியம்மன், மாந்தாரியம்மன், வண்டிமலைச்சியம்மன், உமையம்மாள் போன்ற தெய்வங்களையே நாட்டுப் புறத்தில் ஏழு சகோதரி களாக்கிக் குறிப்பிடுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதில் பிடாரி என்ற தெய்வம் இடம்பெறவில்லை. இந்தப் பிடாரி சப்தமாதர்களில் மிக இளையவள் என்ற கருத்து 'அறுவர்க்கு இளையநங்கை' என்ற சிலப்பதிகாரத் தொடரின் வழி உணரலாம். தமிழகத்தில் இந்தச் சப்தமாதர்களுக்கும் கோயில்கள் அமைக்கப்பட்டன என்பதற்கு ஆலம்பாக்கத்தி லுள்ள செல்லியம்மன் கோயிலும் திருவக்கரையிலுள்ள வக்கிரக் காளிகோயிலிலும், வேளைச்சேரியில் உள்ள செல்லி யம்மன் கோயில்களிலும் சான்றுகள் இருப்பதை அறிஞர்கள் எடுத்துக் கூறுகின்றனர். எனவே, ஏழுசகோதரிகள் தொடர் பான மரபு விரிந்த ஆய்விற்குரியதாகும்.

வழிபாட்டு நிலை

சிறுதெய்வ வழிபாட்டில் வழிபாட்டு முறைகள் முறை யான நியதிகளுக்குள் இயங்கிவருவதாகக் கூறமுடியாது. வீட்டில் எந்தச் சிறப்பு நிகழ்ச்சிகள் நிகழ்ந்தாலும் வீட்டுத் தெய்வத்தை வணங்கிச் செய்வது வழக்கமாகும். பங்காளி களுக்குள் திருமணம், காதுகுத்தல் போன்ற நிகழ்ச்சிகள் நடக்கும்போது குலதெய்வத்தின் அனுமதி பெறுவர். பங்காளிகள் வருடத்திற்கொருமுறை என்று சேர்ந்து குலதெய்வ வழிபாட்டை நடத்துவதும் உண்டு.

பொதுத் தெய்வங்கள் தொடர்பான வழிபாடு சிறப்பாக ஆண்டுக்கொருமுறை நடத்தப்படும். இதனைக் கொடை, கும்பிடு, பொங்கல் என்று வெவ்வேறு பெயர்களில் வழங்கு வர். இந்த மாதத்தில்தான் வணங்கவேண்டுமென்ற வரன் முறைகள் ஏதுமில்லை. பெரும்பாலும் அறுவடைக்குப் பின் தான் அமைத்துக் கொள்வார்கள். அப்பொழுதுதான்

காலமும் வேலைதவிர்த்த ஓய்வுக்காலமாக இருக்கும். பணப் புழக்கமும் நல்லமுறையில் இருக்கும். வெள்ளி, செவ்வாய் போன்ற நாட்களில் பெண் தெய்வங்களுக்குரிய வழிபாடு அமைந்திருக்கும். ஆண் தெய்வங்களுக்கு இது மாதிரி வரையறைகள் இல்லை.

மழையின்மை, நோய்பரவல் இவைகள் நிகழ்ந்தால் தெய்வக் குற்றம் நிகழ்ந்திருப்பதாகக் கருதி வழிபாட்டினை மேற்கொள்வர். பொங்கல் நடத்துவதற்குத் தெய்வத்தின் அனுமதியைப் பெறவேண்டும். அனுமதி பெற விரும்பிய கோயிலில் சென்று 'திருவலம்' கேட்பார்கள். குறிப்பிட்ட திசையிலிருந்து கௌளியின் (பல்லியின்) ஒலி வந்தால் அனுமதி கிடைத்திருப்பதாகப் பொருள். சில இடங்களில் பூக்கட்டிப் பார்க்கும் முறையும் உண்டு. வெள்ளைப் பூ வந்தால் விழா நடக்க உத்தரவு கிடைத்துவிட்டதாகவும் சிவப்புப் பூ வந்தால் தெய்வத்தின் உத்தரவு கிடைக்கவில்லை யென்றும் கூறுவார்கள்.

அனுமதிகிடைத்தவுடன் நாள் குறித்துக் கொள்வர். அந்த நாளை ஊர்மக்களுக்குச் 'சாட்டுதல்' மூலம் தெரியப் படுத்துவார்கள். பின் 'காப்புக் கட்டுதல்' நிகழும். விழாவிற் காக ஆகும் செலவுகளை வரிவசூல் மூலம் சரிக்கட்டுவார்கள். ஊர்ப்பெரியவர்களாகக் கருதப்படுகிறவர்கள் இச்செயலை முன்னின்று நடத்துவார்கள். குடும்பம் ஒவ்வொன்றிற்கும் போடப்படும் வரி 'தலைக்கட்டு வரி' எனப்படும். சில சமயங் களில் ஏருக்கு இவ்வளவு வரி என்ற கணக்கும் உண்டு. ஒவ் வொரு சாதியினர் வாழும் இடங்களில் அவர்களுக்கென சாவடி இருக்கும். எனவே 'சாவடிக்கு' இவ்வளவு பணம் என்றும் வசூல் செய்துவிடுவர்.

தெய்வ உருவங்களை வேளார் செட்டியார்தான் செய்து தருவார். பழைய உருவாரங்களைக் கோயிலுக்குப் பக்கத்தி லும் வைத்திருப்பர். கோயில் முன் பந்தல் போடுதல்,

அவங்கரித்தல், சுத்தம் செய்தல் போன்ற பணிகளைப் பகிர்ந்துகொண்டு செயல்படுவர்.

பொங்கலன்று உருவாரங்களுக்குக் கண் திறக்கப்படும். ஊர்ப் பெரியவர் இதனை நிகழ்த்துவர். அன்றிரவு பொங்கல் விமரிசையாக இருக்கும். வழிபாட்டில் பொங்கல், பலியிடல், முளைப்பாரி, கரகம், பிற நேர்த்திக்கடன்கள் யோன்றவை இடம்பெறும். தீச்சட்டி எடுத்தல். பூக்குழியிறங்குதல் போன்ற நேர்த்திக்கடன்களையும் செலுத்துவர். முத்தாலம்மன் போன்ற தெய்வங்களின் உருவாரங்கள் மறு நாள் ஆற்றில் கரைக்கப்படும். பலியிடும் முறையினையும் முளைப்பாரியினையும் இனிவரும் பகுதிகளில் விளக்கமாகக் காணலாம்.

பலி

பண்டைத் தமிழ்மரபில் கொற்றவை வழிபாட்டிலும் முருகன் வழிபாட்டிலும் பலி இடம்பெற்றுள்ளதைக் காணலாம். கொற்றவைக்கு வீரர்கள் தலைப்பலி கொடுக்கும் வழக்கம் பல்லவர் காலச் சிற்பங்களாலும் அறியப்படுகிறது.

மனிதர்களைப் பலியிடும் முறையும் இருந்து காலப் போக்கில் பலியாக விலங்குப்பலி வளர்ந்ததாகக் கருதலாம். ஒரு உயிர்க்கொலை மற்றொரு உயிரின் வாழ்க்கைக்கு நன்மையளிக்குமென்பது பொது நம்பிக்கையாகும். பலியிடுவதன்மூலம் தெய்வத்திற்குத் திருப்தி செய்தால் பதிலுக்குத் தெய்வமும் நன்மை செய்யுமென்று நம்பினர். பலியிடப்படும் பொருளைப் புனிதமாகக் கருதும் போக்கு உண்டு. சிறு தெய்வ வழிபாட்டில் பலியிடும் முறை பொதுமைக் கூறாக இருந்தாலும் வட்டாரத்திற்கு வட்டாரம் சிற்சில வேறுபாடுகள் உண்டு. எருமை, ஆடு, சேவல் போன்றவை பலிப்பொருள்களாகும்.

சென்னைத் தாம்பரம் அருகே மெப்பேடு என்ற கிராமத்தில் நரிக்குறவர் குடியிருப்பு உள்ளது. இவர்களின் குல

தெய்வமான பெருமாள், பருவட்டம்மனுக்கு வருடத்திற் கொருமுறை விழா நடத்துவர். இரண்டுநாள் விழாவில் முதல்நாள் தீப ஆராதனையும் படையலும் உண்டு. அன்று ஆடுகளைப் பலியிடுவர். ஆட்டின் ஈரலைச் சாமிக்குப் படைத்துவிட்டுக் கறியினைப் பங்குவைத்துக்கொள்வர். இரண்டாம்நாள் – பருவட்டம்மனின் உருவம் களிமண்ணால் செய்யப்பெறும். அன்றுதான் எருமைகள் பலியிடப்படும். எருமை இரத்தத்தைத் தங்கள் புலிநகங்களில் தடவிக் கொள்வார்கள், எருமையின் குடலை மாலையாகவும் அணிந்து கொள்வார்கள் (தினமலர் - வாரமலர்) இந் நிகழ்ச்சி தற்போதும் இடம்பெறுவதை நடைமுறை வழக்கத்தில் காணக்கூடியதாகிறது.

பலியிடப்போகும் ஆடு எந்த ஆடாக இருக்கவேண்டு மென்பதனைத் தெய்வமே கனவில் சொல்வதாக நம்பிக்கை' திண்டுக்கல் வத்தலக்குண்டுக்கருகே கட்டகாமன்பட்டியில் இடமலை மகாலிங்கம் கோயில் உள்ளது. அங்கு இடமலை யான் தெய்வம் பூசாரியின் கனவில் வந்து சொல்லிவிடுவதாக மக்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். ஆண்டுதோறும் ஆடி மாதக் கடைசி வெள்ளியன்று பொங்கல் கொண்டாடப்படும். அன்று இரவு ஒரு மணியளவில் பூசாரியின் மேல் தெய்வ அருள் இரங்கிவிடும். நேர்த்திக்கடனுக்காக வெட்டப்பட்ட ஆடுகளின் இரத்தத்தையெல்லாம் பூசாரி குடித்துக் கொண்டே இருப்பார். பூசாரியின் வழியாகப் பலியிடப்படும் ஆடுகளின் இரத்தத்தைத் தெய்வம் ஏற்றுக்கொள்கிறது என்று மக்கள் நினைக்கின்றனர் (தினமலர் 13-8-89).

பலியிடப்படும் ஆடுகள் தலைஆடாக இருந்தால் நல்லது மேலும் உடல் ஒச்சமில்லாமல் (குறை) இருத்தல் வேண்டும். ஒரே நிறமுடையதாகவும் இருக்கவேண்டும். குறிப்பாகக் கறுப்பு ஆடுகளைப் பலியாக்கினால் நினைத்த காரியம் நடக்கும் என்பது பரவலான நம்பிக்கையாகும்.

முத்தாலம்மன் வழிபாட்டில் பொங்கலன்று ஆடுகள் வெட்டப்பெறும். வெட்டப்பட்ட தலையினை ஒருவர் (மரபாக) தன் பற்களால் கடித்துக்கொண்டு கோயிலை மும்முறை வலமாக வருவார். அவரிடம் அம்மன் அருள் இரங்கியிருப்பதால் மிகுந்த வலிமை இருக்கும் என்ற நம்பிக்கையில் அவரைப் பலர் பிடித்திருப்பர். சமயத்தில் கயிறுகளால் கட்டியும் அவர் அழைத்து வரப்படுவதுண்டு. அவர் உடல் முழுவதும் கரும்புள்ளி, செம்புள்ளி குத்தப்பட்டிருக்கும். கோயில் வலமாக வந்து அருகில் உள்ள கிணற்றில் அத்தலையினைப் போட்டுவிடுவார்.

இவ்வாறு பலியிடப்படும் நிகழ்வில் ஆங்காங்கே சிற்சில வேறுபாடுகள் இடம்பெறக் காணலாம்.

முளைப்பாரி

முளைப்பாலிகையை வழக்கில் முளைப்பாரியென்று குறிப்பிடுகின்றனர். நல்ல மழை பொழிந்து விளைவு பெருக வேண்டுமென்ற நோக்கத்தில் இச்செயல் மேற்கொள்ளப்படுவதாகக் கொள்ளலாம். குறிப்பாகப் பெண் தெய்வ வழிபாட்டில் மட்டுமே இந்நிகழ்ச்சி இடம்பெறும். பெண்கள் இதற்கான விரதத்தை மேற்கொள்வர்.

நவதானியங்களைப் பானையில் விதைத்துச் சூரிய ஒளி படாமல் வளர்த்து வருவர். பொங்கலன்று அதனை அலங்கரித்து ஊர்வலமாக எடுத்துவந்து கோயிலில் வைத்துக் கும்மியடிப்பர். பத்தாம் நாளில் அதனை ஆற்றில் கரைத்து விடுவர். தைப்பிறைக்கு முளைப்பாரி எடுக்கும் வழக்கத்தை, தமிழண்ணல் பிறைதொழும் பெண்கள் என்ற நூலில் விரிவாக எடுத்துக்கூறுகிறார்.

முளைப்பாரிப் பாட்டுப் பின்வருமாறு :

குசவனுட சூளையிலே
குடமெடுத்து ஓடுடைச்சு
வட்டவட்ட ஓடுடைச்சு

திட்டமுள்ள முளைபரப்பி
ஆட்டான் கொழுத்திறந்து
ஆட்டெருவைக் கொண்டுவந்து
மாட்டான் தொழுத்திறந்து
மாட்டெருவைக் கொண்டுவந்து
சம்சாரி படப்பையிலே
சம்பா வைக்க ரெண்டெடுத்து
முதலாளி படப்பையிலே
முத்துவைக்க ரெண்டெடுத்து
கடுகு சிறுபயறு
காரா மணிப்பயறு
எள்ளும் சிறுபயறு
எங்கும் படியளப்பா
கன்னி முளைதெளிச்சா
கல்யாணம் கூடுமம்மா
இருசி முளைதெளிச்சா
இந்திரனைப் பெற்றெடுப்பாள்
மலடி முளைதெளிச்சா
மன்னவனைப் பெத்தெடுப்பா
ஒண்ணாங் கிழமன்னைக்கு
இரண்டிலையால் முளைப்பாரி
இரண்டாம் கிழமன்னைக்கு
இரண்டிலையால் முளைப்பாரி
மூணாம் கிழமன்னைக்கு
முத்தும் பயிராயிருக்கும்
நாலாம் கிழமன்னைக்கு
நாலிலையாம் முளைப்பாரி
அஞ்சாம் கிழமன்னைக்கு
மஞ்சமுளை கொண்டிருக்கும்
ஆறாம் கிழமன்னைக்கு
ஆறிலையாம் முளைப்பாரி

ஏழாம் கிழமன்னைக்கு
எடுத்திடுவா முளைப்பாரி
எட்டாம் கிழமன்னைக்கு
எட்டெடலைக்கும் காப்புக்கட்டி
ஒன்பதாம் கிழமன்னைக்கு
ஊரு சுத்தி வருவாக
பத்தாம் கிழமன்னைக்கு
பதனம் அடைஞ்சிடுமே

வழிபாட்டுமரபில் சிறுதெய்வநெறிக்குக் குறிப்பிடத் தகுந்த இடமுண்டு. இவ்வழிபாட்டுச் செயல்கள் நம்பிக்கை அடிப்படையில் நிகழ்பவைகளாகும். ஆகவே நாட்டுப்புறச் சமயத்தை அறிந்துகொள்ள விரும்புகிறவர்கள் அத்தகு நம்பிக்கை நிலைகளைக் குறித்து விரிவாக ஆராயவேண்டி வருகிறது. வழிபாட்டு மரபில் இயற்கை அடிப்படையிலான சிறுதெய்வநிலை வளரவில்லை. சமுதாய அடிப்படையிலான சிறுதெய்வங்களே பயன்பாட்டில் உள்ளன, ஆவிபற்றிய நம்பிக்கை இவ்வகை வழிபாட்டு எண்ணங்களுக்கு அடிப் படையாக அமைகின்றது.

குலதெய்வ வணக்கம் தொடர்பான கதைகள் தனித்த நிலையில் ஆய்விற்குரியவை. சிறுதெய்வங்கள் புராணக் கதைகளுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன. சிறு தெய்வங் களின் மேல் நிலையாக்கத்திற்கு இவ்வகைக் கதைகள் உதவி செய்வதாக அமைகின்றன. முற்கால வழிபாட்டுக் கூறுகள் பிற்கால வழிபாட்டு நெறியுடன் சங்கமமான நிலையினை ஆய்வின்வழி உணரலாம். எ.டு: கொற்றவை, துர்க்கை, கண்ணகி வழிபாடுகள் காளிவழிபாட்டுடன் இணைந்தநிலை. திராவிடப் பண்பாட்டில் ஏழு சகோதரிகள் பற்றி ஆய்வு விரிவாக நிகழ்த்தினால் பல புதுச் செய்திகள் கிடைக்க ஏதுவாகலாம்.

வழிபாட்டுமுறையில் பலிமுறைக்குச் சிறப்பிடம் உண்டு. வழிபாட்டு நாட்களில் நிகழ்த்தப்பெறும் கலை நிகழ்ச்சிகள்

சிறுதெய்வவழிபாட்டுக் கதைகளைக் கூறுவதாக அமை கின்றன. அக்னிச்சட்டி, பூக்குழி இறங்குதல், முளைப்பாரி எடுத்தல் போன்றவை பெண் தெய்வ வழிபாட்டில் இடம் பெறுகின்றன.

பார்வை நூல்கள் :

1. அன்னகாமு, செ., ஏட்டில் எழுதாத கவிதைகள், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1966.
2. ஆறுமுகப்பெருமாள் நாடார், கு., சுடலைமாடசுவாமி கதை, 61, மீ.கா. தெரு, தூத்துக்குடி.
3. இராமசாமி, துளசி., நெல்லைமாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113, 1985.
4. காந்தி, க., தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980.
5. தமிழண்ணல், பிறைதொழும் பெண்கள், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1975.
6. பாலசுப்பிரமணியன், இரா., கணியான் கூத்து, சத்யா வெளியீடு, பாளையங்கோட்டை, 1986.
7. ......, அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் வரலாறு, கள்ளழகர் திருக்கோயில் தேவஸ்தானம், மதுரை.
8. .. ..., மாரியம்மன் தாலாட்டு, ஸ்ரீலட்சுமி விலாஸ்பிரஸ், வடக்குரதவீதி, திண்டுக்கல், 1933.

   ......, இடமலைமகாலிங்கம், தினமலர், 13-8-89 கோயில்-பலிச் செய்திகள்.

ஆங்கிலம் :

9. Elmore, W.T. Dravidian Gods in Modern Hinduism, Asian Educational Services, New Delhi, 1984.
10. Whitehead Henry, The Village Gods of South India, Sumit Publications, Delhi, 1976.

கட்டுரைகள் :

11. பாலசுப்பிரமணியன், இரா., சிறுதெய்வவழிபாடுகள் ஓர் அறிமுகம் (வெளியிடப்படாத ஆய்வுக்கட்டுரை), ஆய்வாளர் பேரவை, தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை, 1989.
12. Subramanian, S.V., Sacrifice to the Village Deities, All India Folklore Congress, Annamaii University, Annamalai Nagar, 1980.

கலைக்களஞ்சியம் :

......, கலைக்களஞ்சியம் தொகுதி-3, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1956.

சிங்காரவேலு முதலியார், சூ., அபிதான சிந்தாமணி, Asian Educational Services, New Delhi 1986.

4. சிறுதெய்வ வழிபாட்டுக் கதைகள் - ஓர் ஆய்வு

நாட்டுப்புற வழக்காறுகளில் நாட்டுப்புற இலக்கியத்திற்குத் தனித்தொரு இடமுண்டு. நாட்டுப்புற இலக்கியத்தில் எடுத்துரைக்கப்படும் கதைகளும் (Narrative forms) இடம் பெறுகின்றன. இக்கதைகள் செய்யுள் வடிவிலும் உரைநடை வடிவிலும் அமையலாம்.

கதை செய்யுள் வடிவம் பெற்ற நிலையில் கதைப்பாடல் (Ballads) என்றழைக்கப்படும். எ.டு,: சுடலைமாடன் கதை, மதுரை வீரசுவாமி கதை போன்றவைகளைக் குறிப்பிடலாம். செய்யுள் வடிவமும் உரைநடை வடிவமும் வழக்கில் பயன்பாட்டில் இருக்க வாய்ப்புண்டு. அவ்வகையில் எந்த வடிவம் முதலில் இருந்தது? ஒரு வடிவத்திலிருந்து மற்றொரு வடிவம் மாற்றம் பெறுவதற்குரிய காரணங்கள் என்ன? இது குறித்துத் தனியே சிந்திக்கப்படவேண்டும்.

எடுத்துரைக்கப்படும் உரைநடை வடிவக் கதைகளில் மூன்று வகைகளைக் காணலாம். அவையாவன :

1. புராணக் கதைகள் (Myths)
2. பழமரபுக் கதைகள் (Legends)
3. நாட்டுபுறக் கதைகள் (folk tales)

புறநிலையில், பொதுநோக்கில் இம்மூன்று வகைகளும் ஒன்றுபோலத் தோன்றினாலும் நுணுக்கமான வேறுபாடு

களை அவை தம்முள் கொண்டுள்ளன. அந்த வேறுபாடு களைக் கொண்டு இலக்கிய வகைகளை (Genre) இனம் பிரித்துப் பார்க்கலாம்.

நாட்டுப்புறப் பண்பாட்டில் இணைந்துவரும் சிறுதெய்வ வழிபாட்டுடன் தொடர்புடைய கதைகள் இங்கு ஆய்விற்குட் படுத்தப்படுகின்றன. இவ்வாய்விற்கான கருதுகோள் கீழ்க் கண்டவாறு அமைகிறது.

1. ஆய்விற்கான மூலத்தரவுகள் (Primary Sources) கள ஆய்வின் வழி சேகரிக்கப்பட்டதாகும். அவைகள் முதலில் தொகுத்தளிக்கப்படுகின்றன.

2. எடுத்துரைக்கப்படும் உரைநடை வடிவில் உள்ள கதைகளில் மூன்று வகைகள் (Genre) உள்ளன. 1-ல் தொகுத் தளிக்கப்பட்ட கதைகளை எவ்வகையில் அடக்கலாம் என்பது செயல்முறைப்படுத்திப் பார்க்கப்படுகிறது.

3. 1-ல் இடம் பெறும் கதைகள் தம்முள் ஒத்த சில அமைப்புகளைப் பெற்றுள்ளன. அமைப்பியல் அணுகு முறையில் ஒத்த அமைப்புக்களை இனங்காணுதல் என்பது அடுத்த முயற்சியாக அமைகிறது.

சிறுதெய்வ வழிபாட்டுக் கதைகள்:

மதுரை மாவட்டத்தில் கள ஆய்விற்குத் தேர்ந்தெடுக்கப் பட்ட கிராமங்களில் கலந்துரையாடல் என்ற கட்டமைப் பில்லாப் பேட்டியின் (Non-controlled Interview) மூலம் இக்கதைகள் சேகரிக்கப்பட்டன, தகவலாளியின் பெயர்கள் அவ்வக் கதைகளின் இறுதியில் அடைப்புக் குறியில் தரப் பட்டுள்ளன.

கதைப்பின்னலின் (plot) எளிய அமைப்பு நிலையைக் கருத்தில் கொண்டு வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. கதைகளில் தேவையில்லாத செய்திகள் நீக்கப்பட்டுச் சுருக்கித் தரும் முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(1) குருவம்மாள்:

குருவம்மாள் சிறுவயதுப் பெண். அம்மைநோய் வந்து இறந்து போகிறாள். அவள் சடலத்தை எரிக்கும்போது கட்டியிருந்த துணியில் சிறுபகுதியும் எலுமிச்சம்பழமும் தீயினால் வேகவில்லை. குடும்பத் தலைவரின் கனவில் வந்து வேகாத பகுதிகளை எடுத்துவந்து கோவில் கட்டினால் குடும்பம் செழிக்கும் என்று கூறுகிறது. (பி. கணபதியம்மாள்; வயது 50; சாதி-பிள்ளை; ஊர்-எழுமலை, நாள்: 15-7-87)

(2) ஊமச்சாமி :

வாய்பேசாத ஊமையன் ஆடுமாடுகளை மேய்த்து வந்தான். ஒரு நாள் பாம்பு கடித்ததால் இறந்துபடுகிறான். ஊர்ப் பஞ்சாயத்துக்காரர்களின் கனவில், ஊமையன் தான் தெய்வமாகியதைக் கூறுகிறான். ஊமையன் இறந்த இடத்தில் கல்லைநட்டு வழிபட ஆரம்பித்தனர். கால்நடை பெருகவும் பால்வளம், பெருகவும் இத்தெய்வம் துணை செய்யும் என்பது நம்பிக்கையாக உள்ளது: (பெயர் சோ. இராமசாமி; வயது-60; சாதி-நாயக்கர்; கல்வி-இல்லை: தொழில்-பூசாரி; ஊர்-ஆத்தங்கரைப்பட்டி, நாள் 16-7-87)

(3) ஏலக்காத்தாள் :

சவுடதாங்கி வீரணன் என்பவன் ஐந்துப்பட்டிக் கிரா மத்தை ஆண்டுவந்தான். பெரிய ஏலக்காத்தாள் சின்ன ஏலக்காத்தாள் இருவரும் மலையாளநாட்டில் பிறந்தவர்கள். பெரிய ஏலக்காத்தாளுக்குப் பிள்ளையில்லை. சின்ன ஏலக் காத்தாளுக்கு ஏழு குழந்தைகள். ஐந்து பட்டிக் கிராமத் திற்குப் பிழைப்பதற்காகக் வருகின்றனர். இங்குள்ள மக்கள் உங்கள் பூர்விகம் என்ன? என்று கேட்டனர். அதற்கு, பெரிய ஏலக்காத்தாள் இந்த ஐந்துபட்டிக் கிராமத்தைக் காக்கவந்த மலடி என்று கூறுகிறாள். பின்னர் திடீரென்று மாயமாய் மறைந்து விடுகிறாள். ஒரு திசையிலிருந்து குலவைச் சத்தம் கேட்கிறது. அந்தத் திசையை நோக்கிக் கல்லை நிறுத்தி

ஏலக்காத்தானை வணங்க ஆரம்பித்தனர். (2-இல் சுட்டிய தகவலாளி)

(4) பெத்த நாச்சியம்மாள் :

பெத்த நாச்சியம்மாள் மலைக்கு விறகு எடுக்கச் சென்றாள். அங்கு, முட்கள் அவள் சேலையைக் கிழித்து விட்டன. கிழிந்த சேலையுடன் வீட்டிற்குச் சென்றால் அண்ணன்மார்கள் தவறாக எண்ணிவிடுவார்களென அஞ்சி உயிரை மாய்த்துக் கொண்டாள். அண்ணன்மார்கள் இவளைச் சந்தனக் கட்டையில் வைத்து எரித்தனர். கரை யில்லாத வெள்ளைப் புடவையின் ஒரு பகுதி தீயில் எரிய வில்லை. அதனை எடுத்து வைத்துத் தெய்வமாக வணங்க முற்பட்டனர், (பெயர்-நாகன், வயது-56; சாதி-பறையர்; கல்வி-இல்லை; தொழில்-கூலி வேலை; ஊர்-தெத்தூர்; நாள் 17-7-87)

(5) வண்ணக் கருப்பசாமி :

பள்ளர் குலத்தைச் சார்ந்த வண்ணக் கருப்பன் வண்ணார் குலத்தைச் சார்ந்த பெண்ணுடன் காதல் கொள்கிறான். அப்பெண்ணுடன் பிறந்தவர்கள் எழுவர். இக்காதலுக்கு ஆதரவு தரவில்லை. காதலித்த பெண்ணுடன் வண்ணக்கருப்பன் ஓட முற்படுகிறான். காதலியுடன் பிறந்த வர்கள் எழுவரால் தடுக்கப்பட்டுக் கொலையுண்டான். சாகும் தறுவாயில் இருந்த அவனுக்குக் குடிக்க நீர் கொடுக் கிறான். அவ்வழியே வந்த வேளாளன் அது முதல் வண்ணத் கருப்பன் வேளாளர் குலதெய்வமாக மாறுகிறான். (பெயர்-கந்தையா பிள்ளை; வயது-45; படிப்பு-6 வரை; தொழில்-கிணறுவெட்டல்; ஊர்-ஆத்தங்கரைப்பட்டி; நாள் 16-6-87)

(6) வீரச்சின்னம்மாள் :

மலையில் வீரச்சின்னம்மாள் தன் பாட்டியுடன் வசித்து வந்தாள். வேட்டைக்கு வந்த கரடி, ஆண்டி என்ற கள்ளர் சாதியைச் சார்ந்தவர்கள் பசி தீர்க்கப் பாட்டி வீட்டை

அடைந்தனர். வீரச்சின்னம்மாளைத் தங்கையாகப் பாவித்து அங்கேயே தங்கிவிட்டனர்.

வளையபட்டி சமீன்தார் வீரச்சின்னமாளைப் பெண் கேட்டு வந்தார். வீரச்சின்னம்மாளுக்குச் சம்மதம் இல்லை. பாட்டி சமீன்தாரை எதிர்த்துப் பேச வழியின்றிச் சம்மதித்து விட்டாள். வேறுவழியின்றி, வீரச்சின்னம்மாள் தூக்குப் போட்டு இறந்துவிட்டாள். அண்ணன்மார்கள் அவளைத் தீயிலிட்டனர்.

அண்ணமார்களின் கனவில் தோன்றி தை மாதம் முதல் நாள் என்னை வணங்குங்கள். நான் உங்களைக் காப்பாற்று கிறேன் என்று கூறியபின் தெய்வமாக வணங்கப்படுகிறாள். (பெயர்-அழகர்; வயது-55; படிப்பு-இல்லை; தொழில்-விவ சாயம்; ஊர் - சிறுமலை; நாள் 17-7-87)

(7) வல்லடியார்

மேலூரில் வல்லடியாருக்குக் கோவில் கட்ட வெள்ளையர் அனுமதிக்கவில்லை. மக்களைப் பார்த்து, உங்கள் தெய்வம் உண்மையான தெய்வம் என்றால் என் குதிரை மூன்றுவாய்ப் புல் தின்பதற்குள் உங்கள் தெய்வம் அமர்ந்துள்ள மண்குதிரை ஒருவாய்ப்புல் தின்னவேண்டும் என்று வெள்ளையர் ஒருவர் கூறினார். உடனே, வெள்ளையர் குதிரை மூன்றுவாய்ப் புல் தின்றதைப்போல மண்குதிரையும் மூன்று வாய்ப்புல் தின்றது. மண்குதிரை கனைத்தது, பின், வெள்ளையர் இறந்துவிட்டார். வல்லடியாருக்கு கோவில கட்டி வழிபடுகின்றனர்.

மேலே கூறப்பட்டுள்ள கதைகளின் பெயர்கள் சிறு தெய்வங்களின் பெயர்களாகும். அப்பெயர்கள் அக்கதையில் இடம் பெறும் தலைமைமாந்தர்களாவார்கள். இனிவரும் ஆய்வில் கதையின் வரிசை எண் மட்டுமே சுட்டப்படும் இயல்பு இடம்பெறுகிறது.

சிறுதெய்வ வழிபாட்டுக் கதையின்—இலக்கியவகை:

உரைநடையில் எடுத்துரைக்கப்படும் கதைகளை வேறுபடுத்திப் பார்ப்பதற்கு வில்லியம் பாஸ்கம் என்ற அமெரிக்க மானிடவியலார் சில அட்டவணைச் செய்திகளைக் குறிப்பிடுகிறார். களஆய்வில் சேகரிக்கப்பட்ட கதைகளை அட்டவணைச் செய்திகளுடன் இணைத்துப் பார்க்கலாம்.

1	வடிவக்கூறுகள்	உரை நடையில் எடுத்துரைக்கப்படுபவை	1	2	3	4	5	6	7
2	மரபானத் தொடக்கம்	எதுவுமில்லை	x	x	x	x	x	x	x
		வழக்கமாக							
3	இரவில்	எந்தக் கட்டுப்பாடும் இல்லை	x	x	x	x	x	x	x
		வழக்கமாக							
4	நம்பிக்கை	உண்மை	x	x	x	x	x	x	x
		புனைவு							
5	பின்புலம்	சிலவேளைகளிலும் சில இடங்களிலும்	x	x	x	x	x	x	x
		காலமில்லை இடமில்லை							
6	காலம்	நினைவிற்கெட்டா நெடுங்காலம்							
		அண்மைப் பழங்காலம்	x	x	x	x	x	x	x
		எல்லாக்காலமும்							

		முந்தையது அல்லது மறுஉலகம்							
7	இடம்	இவ்வுலகம்	x	x	x	x	x	x	x
		எல்லா இடங்களிலும்							
		புனிதம்							
8	போக்கு	சாதாரணம் அல்லது புனிதம்	x	x	x	x	x	x	x
		சாதாரணம்							
		மானுடம் அல்லாதோர்							
9	முக்கியக் கதைமாந்தர்	மானுடர்	x	x	x	x	x	x	x
		மானுடர் அல்லது மற்றயவை							
		புராணம்							
10	உரைநடையில் எடுத்துரைக்கப்படும் வடிவம்	பழமரபுக்கதை	x	x	x	x	x	x	x
		நாட்டார் கதை							

அட்டவணைச் செய்திகளின்படி இவ்வகைக் கதைகவி பழமரபுக் கதைகள் என்ற வகைபாட்டில் இயைந்து வருவதை அறியலாம். பழமரபுக் கதைகளின் பண்புகளைத் தனிவகை விளங்கங்களின் மூலம் தெளிவுபடுத்தலாம்.

கதை நடந்ததாக நம்பப்படுகிறது. இதனைப் புனைவுச் செய்தி என்று மக்கள் ஒதுக்குவதில்லை.

பெரும்பாலும் இக்கதைகள் நடந்த காலம் அண்மைப் பழங்காலம் எனக் குறிப்பிடலாம். பெரும்பான்மையான கதைகள் முதல் தலைமுறையில் நடந்ததாக மூன்றாம் தலைமுறையினர்க்கு எடுத்துச் சொல்லப்படுகின்றன. எ.டு. கதை எண் 1, 2,3,4 போன்றவை. தங்கள் குலதெய்வத்தைப் பற்றி எடுத்துச் சொல்வதற்கும், தொழில்வளம் பெருகுவதற்கும், நோய் நீங்குவதற்கும் இச்சிறுதெய்வங்களை வணங்கவேண்டும் என்ற நோக்கத்தில் சொல்லப்படுகின்றன. இவ்வகையில் இயற்கைச் சூழல் (Natural context) அமைகிறது எனலாம்.

கதை மூன்று, ஆறு, ஏழு போன்றவற்றில் குறுநிலமன்னர்களின் காலம், சமீன்தார் ஆட்சிக்காலம், ஆங்கிலேயர் காலம் என்ற வரிசையில் காலப் பின்னணியை அறியமுடிகிறது.

கதை நிகழ்ச்சி இடம்பெற்ற களம் பெரும்பாலும் இவ்வுலக இடப் பின்னணியைக் கொண்டுள்ளன. இவ்வாய்வின் படி (மதுரை மாவட்டத்தில்) அச்சிறுதெய்வம் இடம் பெற்றுள்ள ஊரே கதை நிகழ்ந்த இடமாகவும் உள்ளது. பெரும்பாலும் கற்பனை உலகங்கள் இணைந்து பேசுவதைக் காணமுடியவில்லை.

இம்முறையிலுள்ள கதைகள் நாட்டுப்புறக் கதைகளைப் போல, சாதாரணமாக அல்லது பொழுது போக்குவதற்காகச் சொல்லப்படுவதில்லை. குலதெய்வம், பொதுத்தெய்வம் இவற்றைப் பற்றிய கதைகளை மக்கள் புனிதமாகக் கருதிச் சொல்லுகின்றனர், கேட்கவும் செய்கின்றனர்,

கதையில் இடம்பெறும் பாத்திரங்கள் உண்மையில் வாழ்ந்த பாத்திரங்களே. அந்தப் பாத்திரங்களின் வாழ்க்கையோடு ஒரு நிகழ்ச்சி, அதன் விளைவு, பின்பு புனிதமாகப் படுதல் என்ற படிநிலை காணப்படுகிறது. குறிப்பிடப்பட்ட ஏழு கதைகளிலும் மனிதநிலைப் பாத்திரங்களே குறிப்பிடப் பட்டுள்ளன.

கருதுகோள் இரண்டின்படி சிறுதெய்வவழிபாட்டுடன் தொடர்புடைய கதைகளில் ஒத்த சில அமைப்புக்கூறுகள் இருக்கின்றன என்பதை இனங்காணலாம்.

கதையில் இடம்பெறும் மனிதர்க்கு 'இறப்பு' என்பது உறுதியாக நிகழும். அவ்விறப்பு இயற்கையினால் அமையலாம். எ.டு. நோய் வந்து இறத்தல் (கதை-1); பாம்பு கடித்து இறத்தல் (கதை-2), தன்னுடைய இயற்கைக் குறையினால் மறைதல் (கதை-3).

சமுதாய முரண்பாடுகளின் காரணமாகவும் இறப்பு நிகழலாம். தானே வலிந்து இறப்பை மேற்கொள்ளும் தற்கொலை வகை, தீயிலிட்டு இறத்தல் போல்வன (கதை-4)

சாதி முரண்பாட்டில் காதல் நிறைவேறாத நிலையில் சமுதாயச் சூழலால் கதையிலிடம்பெறும் பாத்திரம் கொல்லப்படுவதுண்டு (கதை-6).

இறைவனைச் சோதித்தாலும் இறப்பு நிகழ்வதை ஒரு கதையில் காணமுடிகிறது (கதை-7).

இறந்த பாத்திரங்கள் தெய்வநிலைக்கு உயர்த்திச் சொல்லப்படும் 'அற்புதச் செய்தி' (miracle) கதைகளில் இணைந்து வருவதைக் காணமுடிகிறது. அதவனக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1. குடும்பத்தார் அல்லது ஊர்ப்பொதுமக்கள் கனவில் தெய்வமானவர்கள் தெய்வமான தன்மையைச் சொல்லுதல்.

எ.டு. குருவம்மாள் தன் குடும்பத்தார் கனவில் சொல்லுதல் (கதை-1) ஊமையன் ஊர்மக்கள் கனவில் வந்து சொல்லுதல் (கதை-2) வீரச்சின்னம்மாள் தன் சகோதரர்களின் கனவில் வந்து சொல்லுதல் (கதை-6)

2. தெய்வமானதை உறுதிப்படுத்த இறக்கும்போது உடுத்தியிருந்த ஆடையின் ஒரு பகுதி எரியாமலிருத்தல்; எலுமிச்சம் பழம் வேகாமலிருத்தல்.

எ.டு. பெத்தநாச்சியம்மாள் உடுத்தியிருந்த புடவையின் ஒரு பகுதி தீயில் எரியவில்லை (கதை-4)

3. முற்சுட்டிய இரண்டு அற்புதச் செய்திகளும் ஒரு கதையில் இணைந்து வரலாம்.

எ.டு. கதை-1.

4. கதையிலிடம்பெறும் பாத்திரம் மாயமாய் மறைதல். அசரீரியாய்ப் பேசுதல்.

எ.டு. பெரிய ஏலக்காத்தாள் மாயமாய் மறைதல். வானிலிருந்து குலவைத் சத்தம் எழுப்புதல் (கதை-3)

5. தெய்வம் தானிருப்பதை நிலைநாட்ட நடக்க முடியாததை நடத்திக்காட்டல்.

எ.டு. மண் குதிரை புல்தின்னுதல்
மண்குதிரை கனைத்தல் (கதை-7)

அற்புதச் செய்தி இணைக்கப்பட்ட இறுதிநிலையில் 'சிறுதெய்வ' உருவாக்கம் சமுதாயப் பண்பாட்டில் பயன்பாட்டில் இடம்பெறுகிறது. கதையிலிடம்பெற்ற ஏழு மாந்தர்களும் அற்புதச் செய்திகளைப் பெற்றுச் சிறுதெய்வ நிலையை அடைந்தவர்களாவர். பின், என்ன காரணத்திற்காக இறந்தார்களோ அக்காரணத்தினால் மற்றவர்களுக்குத் துன்பம் வராமல் பாதுகாக்கும் தெய்வமாக மாறிவிடுகின்றனர். காலப்போக்கில் பிறசெய்திகளும் இணைத்துக் கூறப்படுவதால் உண்மைக் காரணம் எடுபடாமல் போய்விடலாம்.

இந்நிலை யுருவாக்கத்தைக் கீழ்க்கண்ட அமைப்பினால் விளக்கலாம்.

(1) $M_{(F)} + D_{(N_1)} \underline{\quad M \quad}$ V.D. (n_1)

(2) $M_{(M)} + D_{(N_2)} \underline{\quad M \quad}$ V.D. (n_2)

(3) $M_{(F)} + D_{(N_3)} \underline{\quad M \quad}$ V.D. (n_3)

(4) $M_{(F)} + D_{(S_1)} \xrightarrow{\quad M \quad} V.D.\ (S_2)$

(5) $M_{(F)} + D_{(S.C_1)} \xrightarrow{\quad M \quad} V.D.\ (S.C_2)$

(6) $M_{(M)} + D_{(S_1)} \xrightarrow{\quad M \quad} V.D.\ (S_2)$

(7) $M + D \xrightarrow{\quad M \quad} V.D.$

M	—	Man	—	மனிதன்
		Male	—	ஆண்
		Female	—	பெண்
D	—	Death	—	இறப்பு
N	—	Nature	—	இயற்கை
N_1	—	இயற்கை	—	நோய்
N_2	—	இயற்கை	—	பாம்பு கடித்தல்
N_3	—	இயற்கை	—	குறை - மலடி
S_1	—	Suicide	—	தற்கொலை
$S\,c_1$	—	Social Conflict	—	சமுதாய முரண்பாடு
M	—	Miracle	—	அற்புதம்
V.D	—	Village Deity	—	சிறுதெய்வம்
n_1	—	இயற்கை	—	நோய் தீர்ப்பு
n_2	—	இயற்கை	—	பாம்பு கடி தவிர்த்தல் கால் நடைவளம்
n_3	—	இயற்கை	—	குழந்தைவரம்
$S.C_2$	—	குறைகளை நீத்துக் காத்தல்		
S_2	—	குடும்பம் காத்தல்		

$M\,(F/M) + D\,(N_1 / S_1 / S.C_1) - V.D\,(n_1 / S_2 / S.C_2)$

மேற்கண்ட வாய்பாடு பொதுநிலை அமைப்பாகப் பெறலாம்.

முடிவுரை :

எடுத்துரைக்கப்படும் உரைநடை வடிவக்கதைகளில் சிறுதெய்வவழிபாட்டுக் கதைகளும் ஒரு வகையாகும்.

இக்கதைகளை (Legends) என்ற வகையில் அடக்கலாம். மேற்குறித்த கதைகளில் ஒத்த சில அமைப்புக் கூறுகள் இடம் பெற்றுச் சிறுதெய்வநிலை உருவாக்கம் அமைகிறது. ஆய்விற்குட் படுத்திப் பார்க்கும்போது ஒத்த சில அமைப்புக் களை இனங்கண்டு கொள்ளலாம்.

இது ஒரு முன்மாதிரி ஆய்வாகும். இதுபோன்று, பல கதைகளையும் தொகுத்து வரன்முறைப்படுத்திப் பார்த்தால் அமைப்பியல் அணுகுமுறையை இன்னும் விரிவுபடுத்தவும் விளக்கப்படுத்தவும் ஏதுவாகலாம்.

பார்வை நூல்கள்

1. இராமசாமி, துளசி, நெல்லை மாவட்ட நாட்டுப் புறத் தெய்வங்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1985.
2. பாலசுப்பிரமணியன், இரா., கணியான்கூத்து, சத்யா வெளியீடு, திருநெல்வேலி, 1986.
3. லூர்து, தே., நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள், பாரிவேள் பதிப்பகம், திருநெல்வேலி, 1981.

5. பழமொழிகளில் நிறம்

சமுதாயத்தின் அல்லது நாட்டின் பண்பாட்டினை மதிப்பிடுவதற்குப் பயன்படும் பல கூறுகளுள் பழமொழியும் ஒன்றெனலாம். இப்பழமொழி நாட்டுப் புறத்தாரிடம் பல காலமாகப் பழக்கத்தில் இருந்து வருபவையாகும். சமுதாயத்தில் பல்வேறு நிலையில் வாழ்ந்துவரும் மக்களும் எளிதில் உணர்ந்துகொள்ளும் வண்ணம் இவை எளிமையாக அமைந்திருக்கும் இயல்பு குறிப்பிடத்தகுந்தது.

பழமொழியில் நிறம் எவ்வெவ் வகையில் அமைந்திருக்கிறது என்பதனையும் அதனை மூலமாகக் கொண்டு நிறத்தினைப் பற்றி மக்கள் கொண்ட கருத்துக்கள் என்ன என்பதனையும் உணரும் போக்கு இவ்வாய்வில் மேற்கொள்ளப் படுகிறது.[1]

நிறம் பற்றிய சொற்கள் :

ஏறக்குறைய 160 பழமொழிகளில்[2] நிறம் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. இவற்றும் நிறம், வண்ணம், வர்ணம், சாயம் போன்ற சொற்கள் நிறத்தினைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நிறம் :

எ.டு. நெருப்பைச் சார்ந்த யாவும் அதன் நிறமாகும்.

வண்ணம் :

எ.டு. வண்ணத்துக்குக் கிண்ணம் போடுகிறான்.

வர்ணம் :

எ.டு. கையாலாகாத சிறுக்கி வர்ணப்புடவைக்கு ஆசைப்பட்டாளாம்.

சாயம் :

எ.டு. அவன் சாயம் வெளுத்துப்போய்விட்டது.

இவற்றால் நிறம்[3] என்ற சொல்லாட்சி மிகுந்த பயிற்சி பெற்று வருகிறது. வண்ணம் என்ற சொல் நிறத்தைக் குறிக்கப் பயன்பட்டபோதும் வேறு பல பொருளைத் தருவதாகவும் அமைகின்றன.

எ.டு. வண்ண வண்ணப் பேச்சு - கவர்ச்சி
நாளொரு மேனியும்
பொழுதொரு வண்ணமுமாக - சிறப்பு
வண்ணக்குதிரை - அழகு

வர்ணம் என்ற சொல்லின் பயிற்சி மிகக்குறைந்த நிலையில் அதுவும் மகளிர் ஆடைகளுடன் தொடர்புபடுத்தி வருகிறது.

பயின்று வரும் நிறங்கள் :

கறுப்பு, வெள்ளை, பச்சை, சிவப்பு, மஞ்சள், நீலம், பழுப்பு, நரை, பொன்னிறம் போன்றவை பழமொழிகளில் பயின்றுவரக் காணலாம். இவற்றை இரண்டு வகைகளாகப் பகுக்கலாம்.

1. இயல்பான நிறங்கள்
2. திரிந்த நிறங்கள்

1. இயல்பான நிறங்கள் :

கறுப்பு, வெள்ளை, பச்சை, சிவப்பு, மஞ்சள், நீலம் போன்றவை இவ்வகையில் அடங்கும்.

கறுப்பு :

பழமொழிகளில் மிகுந்த பயிற்சியுடையதாய்விளங்குவது இந்நிறமேயாகும்.[4] இந்நிறப் பொருண்மை குறித்து வரும் சொற்களாவன:

கறுப்பு :

கண்ணிழந்தவனுக்குக் கண்டதெல்லாங் கறுப்பு.

கரு :

உலகம் முழுவதும் காகம் கருமைதான்.

கரி :

கரிவிற்ற பணம் கரியாய் இருக்குமோ?

இவற்றில் கரு... தொடர்பாய் அமையும் சொற்கள் மிகுந்து வருகின்றன.[5]

வெள்ளை :

கருப்பிற்கடுத்த நிலையில் மிகுந்த பயிற்சியுடைய தாய் அமைவது வெள்ளையெனலாம்.[6] வெள்ளை, வெண்மை வெளுத்திருத்தல் போன்றவை வெள்ளையைக் குறிப்பதற் காகப் பயன்படுத்தப்படுகின்றன. இருப்பினும், இவற்றில் வெள்ளையின் பயிற்சி பெருவழக்காயுள்ளது.[7]

வெள்ளை :

காகத்திலே வெள்ளையுண்டா?

வெண்மை :

வெளுத்தது எல்லாம் பால் இல்லை.

'வெளப்பு' என்பது வெள்ளையென்ற பொருளைத் தருவதுபோல வேறு பொருளையும் தருகிறது.

அவன் சாயம் வெளுத்துப் போய்விட்டது.

அஃதாவது உண்மை வெளிப்பட்டுவிட்டது என்ற பொருளில் வருகிறது. மேலும் நீங்குகின்ற தன்மையையும் குறிக்க நிறம் பயன்படலாம்.

பச்சை :

கருப்பிற்கும் வெள்ளைக்கும் அடுத்த நிலையில் இந்நிறம் பெருவழக்காய் அமைகிறது.[8] இந்நிறத்தின் பொருண்மை யைக் கீழ்க்கண்ட சொற்கள் குறிக்கின்றன.

பச்சை :

கொல்லைப் பச்சிலை மருந்திற்குதவுமா?

பசும் :

பசும்புல்தேய நடவாத பாக்யெவான்

இவற்றில் பச்சை என்ற சொல்லின் பயிற்சி மிக்கு அமைகின்றது.[9]

சிவப்பு :

இந்நிறத்தின் பொருண்மையைச் சுட்டப் பல சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. பழமொழியில் இந்நிறத்தின் பயிற்சி பெரும்பான்மையாக அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.[10]

சிவப்பு :

பட்டிக்காட்டானுக்குச் சிவப்புத் துப்பட்டி பீதாம்பரம்.

செவ் :

அஸ்த செவ்வானம் அடைமழைக்கு லட்சணம்

காவி :

காவியுடுத்தவரெல்லாம் விவேகானந்தரா?

செம் :

சிறியார் கைச் செம்பொன்போல

செவக்க :

செவக்க முற்றின வாழைக்காய்
புளியில்லாமல் கனிகிறது.

செவல :

செவல்பட்டிக்கு வழியெதுவென்றால்
செவலக்காளை ஐம்பது ரூபா என்கிறான்

மஞ்சள் :

மஞ்சள் என்றசொல்லே இந்நிறத்தினைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்.

நீலம் :

இந்நிறத்தினைக் குறிக்க நீலம் என்ற சொல்லே பெரு வழக்காயுள்ளது.

நீலத்திற்குக் கறுப்பு ஊட்டவேண்டுமா?

பொன்னிறம் :

இதனைத் தனியொரு நிறமாகக் கொள்வதைக் காட்டிலும் மஞ்சள் நிறத்துடன் இணைத்துப் பார்ப்பது பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. மஞ்சள் நிறத்தை மிகைப் படுத்திக் கூறும் போக்கு பொன்னிறம் என்பதாகும்.

கலப்பானாலும் பூசப்பூசப் பொன்னிறம்

பொதுவாக சிவப்பு நிறத்தினைக் குறிக்கப் பலசொற்கள் பயன்படுவதையும் மஞ்சள், நீலம் போன்றவை ஒரே சொல்லில் வழங்கப் பெறுவதையும் காணலாம்.

திரிந்த நிறங்கள் :

இயல்பான நிறமொன்று மறைந்து வேறு நிறம்தோன்றுவதையே திரிந்தநிறம் என்று கூறப்படுகிறது. நரை, பழுப்பு போன்றவைகளை இவ்வகையில் அடக்கலாம்.

நரை :

கருமைநிறம் திரிந்து வெண்மையாகும் இயல்பைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் சொல்லாகும்.

கிழவன் தான் நரை. கிழவன் கொடுத்த
பணமுமா நரை?

பழுப்பு :

பச்சை நிறம் தன் இயல்பிலிருந்து திரிவது பழுப்பு என்று கூறப்படுகிறது.

எல்லாத்துக்கும் உண்டு இலையும் பழுப்பும்

இப்பழுப்பு என்ற சொல் நிறத்தைக் குறிப்பதைப் போலக் குற்றம் என்ற பொருளினைத் தருவதாக உள்ளது.

இலைப்பழுப்பு ஆனாலும் குலப்பழுப்பு ஆகாது.

பழமொழியில் நிறம் அமையும் விதம்

பழமொழியில் நிறம் அமையும் பாங்கினை மூன்று வகையாகப் பிரிக்கலாம்

1. நிறம் மட்டும் கூறுதல்
2. நிறத்தினையும், அந்நிறமுடைய பொருளையும் கூறுதல்
3. நிறமுடைய பொருளைமட்டும் குறிப்பிடல்

மேற்கண்டவற்றில் முதல்வகை பழமொழியில் பெரிதும் பயன்படுகிறது.[11] அடுத்த நிலையில் இரண்டாவது வகை அமைகிறது.[12] நிறமுடையவற்றைக் குறிப்பாகக் காட்டிப் பொருள் உணரவைக்கும் மூன்றாவது முறை குறைந்த நிலையில் அமைகிறது.[13]

நிலம் மட்டும் கூறுதல்

நாட்டுப்புறத்தார் கல்வியறிவு பெறாத நிலையில் உள்ளவர். ஆதலால் எளிதில் புரியும் வண்ணம் அமைந்திருக்க வேண்டியது இயல்பாகிறது. குறிப்பாய்ச் சுட்டிக்காட்டிப் புரியவைத்தலைவிட நிறத்தினை வெளிப்படையாய்ச் சுட்டும் போக்கு காணப்படுகிறது. இப்பழமொழி வாய்மொழியாகப் பரவும் இயல்புடையதால் இத்தகு எளிமையும் தேவையான ஒன்றாக அமைகிறது.

எ.டு. கண்ணிழந்தவனுக்குக் கண்டதெல்லாம் கறுப்பு.

நிறத்தினையும் அந்நிறமுடையவற்றையுங் கூறல்

இவ்வகையினை மூன்றுவகைகளில் பகுத்துப் பார்க்கலாம்

1. விலங்கினம் தொடர்பானவை
2. தாவரவினம் தொடர்பானவை
3. பிற

விலங்கினம் தொடர்பானவை

நிறத்தின் பெயரையும் அந்நிறத்தையுடைய விலங்கினத்தின் பெயரையும் சேர்த்துச் சொல்லுதல்.

கறுப்பு :

கறுப்பு மாடு கால்மாடு.

வெள்ளை :

பார்ப்பான் சேவகமும் வெள்ளைக்குதிரை
சேவகமும் ஆகாது.

சிவப்பு :

பண்ணையை விட்டுப்போன பிறகு செவலைமாடு
பத்திரம் என்றதுபோல

நிறத்தினை விலங்குகளுடன் தொடர்புபடுத்திக் கூறும் முறை கறுப்பு நிறத்தில் மிகுந்து காணப்படுகிறது. வெள்ளை கறுப்பு நிறத்திற்கு இணையாகக் கருதப்பட்டபோதும் இத்தகு பயிற்சி அமையவில்லை. சிறப்புநிறம் குறைந்த பயிற்சியில் வர, பச்சை, மஞ்சள் போன்றவை அமையவில்லை யென்பது இயற்கையை வெளிப்படுத்துகிறது எனலாம்.[15]

தாவரவினம் தொடர்பானவை

நிறத்தின் பெயரையும் அந்நிறத்தை உடைய தாவரத்தினையும் இணைத்துக் கூறும் முறையாகும்.[16]

பச்சை :

பச்சோலைக்கு இல்லை ஒலி
பசும்புல்தேய நடவாத பாக்கியவான்

சிவப்பு :

செத்தவன் கண் செந்தாமரைக்கண்
இருந்தவன் கண் நொள்ளைக்கண்

தாவிரவினம் தொடர்பாக வருபவை பெரும்பாலும் பச்சை நிறத்தினையும் அடுத்து சிவப்பினையும் சார்ந்தமையைக் காணலாம்.[17] பெரும்பாலும் தாவரத்தின் இலைப் பகுதியினையும் சிவப்பு மலரினையும் சுட்டி வருகிறது. பச்சைத் தாவர இனத்தைப்பற்றிப் பேசுவது என்பது உறுதிப் படுவதுடன் பச்சை சார்ந்த வேறு பொருள்கள் ஏதாவது ஒரு

வகையில் தாவர இனத்துடன் பொருள் தொடர்பாய் அமையக்கூடும் என்பதும் புலனாகிறது.

பிற :

இப்பகுப்பின் கீழ் வருபவை ஆடை, உலோகம், இயற்கை, ஆபரணம் போன்றவைகளைச் சுட்டுவதாய் அமைகிறது.[18]

ஆடை :

வெள்ளை வேட்டியில் பட்டகறை
வெளிச்சம் போடாமல் தெரியும்

லோகம் :

சிறியார் கைச் செம்பொன்போல

இயற்கை :

அஸ்த செவ்வானம்
அடைமழைக்கு லட்சணம்

இப்பகுப்பில் வெள்ளை மிகுந்து வருகிறது. மேலும் வெள்ளை ஆடையுடன் தொடர்புகொண்டும் சிவப்பு உலோகத்துடன் தொடர்பு கொண்டும் அமைவதைக் காண முடிகிறது.

நிறமுடைய பொருளை மட்டும் குறிப்பிடல் :

இவ்வகை மஞ்சள் நிறத்திலும், இணைநிறத்திலும் மிகுந்து காணப்படுகிறது.[19] மஞ்சள் நிறத்தில் குறிப்பாகப் பூசும் மஞ்சள் கிழங்கினைச் சுட்டிவருவது பெரும்பான்மை யாக அமைகிறது.

பொதுவாக இணைநிறங்களில் கருப்பும். வெள்ளையும் இணைந்து பேசப் படுவதைக் காணலாம். இந்நிலையில் கருப்பு நிறத்திற்குக் காக்கையும் வெள்ளை நிறத்திற்குக் கருடன், அன்னம், கொக்கு போன்றவைகளும் சுட்டப் படுகின்றன.

காகம் - கருடன்

கழுத்து வெளுத்தாலும் காகம் கருடன் ஆகாது.

காகம் - அன்னம்

கங்கையில் முழுகினாலும் காக்கை
அன்னம் ஆகுமா?

காகம் - கொக்கு

முக்காலம் காகம் முழுகிக் குளித்தாலும் கொக்கு ஆகுமா?

கருமைநிறம் சுட்டப்படும் போதெல்லாம் காகம் சுட்டப் படுகிறது. பெரும்பாலும் காகத்தின் கருமைநிறம் சுட்டுவதா யினும் மற்றைய இழிகுணங்களையும் தொடர்புபடுத்திப் பேசக்கூடும். கருமைநிறம் சுட்டுவதற்கும் கறி, நீர், களாம் பழம் போன்றவைகளும் வெள்ளைநிறம் சுட்டுவதற்குப் பால், மோர் போன்றவைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

கரி :

காக்கை கரிச்சட்டியைப் பழித்ததாம்.

நீர் :

கருத்ததெல்லாம் தண்ணீர்
வெளுத்ததெல்லாம் பால்

களாம்பழம் :

காக்கையைவிடக் கரியது களாம்பழம்.

எனவே, நிறமுள்ளவற்றைக் குறிப்பிடும் போக்கில் இணைநிறங்கள் மிகுந்து காணப்படுகின்றன. குறிப்பாக விலங்கினங்கள் (பறவையினம்) தொடர்பு படுத்திப் பேசுவதை உணரமுடிகிறது. பெரும்பாலும் இம்முறையில் ஒப்பீட்டுத் தன்மை இடம்பெறுவதைக் காணலாம்.[20]

நிறம் பொருளுணர்த்தும் முறை

நிறங்கள் பெரும்பாலும் தன்பொருள் உணர்த்தி வருகின்றன.[21] இருப்பினும் சிற்சில இடங்களில் வேறுவகைப் பொருள் தருவதாகவும் அமைகின்றன.[22] அவை அட்ட வணைப்படுத்தப்பட்டுள்ளன.

நிறம் .	வருமிடம்	பொருள்
கறுப்பு		
3	அமாவாசைக்கருக்கல்	இருள்
150	ஆனை கறுத்தால்	இறப்பு
16	கரி தடவாதே	அவமானப்படுத்துதல்
22	கந்தைத்துணியும் கரிவேடமும்	அழுக்குக்கோலமும்
27	கருப்புக்கழுதபிள்ளை	பேய்
71	சோற்றுக்கும் கறுப்புண்டு	பழுதுள்ள அரிசி
72	கருப்புக்குப் பயப்பட்டான்	பேய்க்குப் பயந்தான்
116	கரியை வழித்து முகத்தில் தேய்த்தாளாம்	அவமானப்படுத்துதல்
118	பொன் கறுத்தால்	நிறம்மங்குதல்
130	யானை கறுத்தால்	யானை இறத்தல்
வெள்ளை		
8	வெள்ளெழுத்து	கண்தெரியாத நிலை
19	ஒருவன்மீது காதல் தோன்றி விட்டால் குளிக்காமல் இருக்கும்போதே வெண்மை யாகத் தோன்றுவாள்	விருப்பமாக
21	ஒரு வெள்ளையைக் கட்டி வெளியே வந்தால்	ஆடை
45	வெள்ளெழுத்து	கண்தெரியாத நிலை
47	கோடிக்கு ஒரு வெள்ளை	ஆடை
146	வெள்ளைக்கு இல்லை	கள்ளமில்லாச் சிந்தை
149	வெள்ளையாய்ச் சொல்லி விட்டான்	கள்ளமில்லாச் சிந்தை
147	வெள்ளையுஞ் சொள்ளையுமாய்	ஆடை

நிறம்	வருமிடம்	பொருள்
142	வெள்ளையுடுத்தி	ஆடை
4	வெளுத்துப் போய்விட்டது	அம்பலமாதல்
150	வெளுத்துவிட்டாலுஞ்சரி	அம்பலமாகுதல்
பச்சை		
97	அக்கரைக்கு இக்கரை பச்சை	குளிர்ச்சி
77	தூரத்துப் பச்சை	குளிர்ச்சி
92	பச்சை கண்டால்	பணம் கண்டால்
	பச்சைக் கூட்டோட	உடலும் உயிரும் சேர்ந்த நிலை
89	பச்சைச்சிரிப்பு	ஆகாத சிரிப்பு
94	பச்சைப்புண்	புண்
93	பச்சைப்பாண்டம்	புதிதான பாண்டம்
95	பச்சைமண்	ஈரமண்
96	பச்சைமரம்	இளமையான மரம்
114	பசுமரம்	இளமையாள மரம்
103	பச்சரிசி	அவிக்காத அரிசி
110	பச்சைகுத்தினான்	பச்சை குத்துதல்
சிவப்பு		
43	காவியுடுத்தியவரெல்லாம்	சிவப்புநிற ஆடை (துறவு)
69	செவக்கமுற்றின	பழுத்தல்
160	வேப்பம்பழம் சிவந்தாலும்	பழுத்தாலும்
மஞ்சள்		
121	மஞ்சள் குளித்தாய்	பூசும் மஞ்சள்
122	மஞ்சளும் மலரும்	,,
120	மஞ்சளுக்குந் தரித்திரமா	,,
17	மஞ்சள் குளிப்பு	,,
153	வேசிக்கு மஞ்சள்	,,

இணைநிறங்கள்

25	கருப்பும் வெள்ளையும்	தீமையும் நன்மையும்
88	பச்சைகொடுத்தால் பாவந்தீரும் வெள்ளை கொடுத்தால் வினை தீரும்	தானியம், ஆடை

நிறங்களில் பச்சை பெரும்பாலும் வேறு பொருள்களை உணர்த்தி வருகின்றது. கறுப்பு, வெள்ளை, சிவப்பு போன்றவை பெரும்பான்மை தன்பொருள் உணர்த்தியும் சிறுபான்மை வேறுபொருள் உணர்த்தியும் வருகின்றன. நீல நிறத்தின் பயிற்சியும் மிகக்குறைவு. வருகின்றவைகளும் தன்பொருள் உணர்த்தி வருகின்றன.[23]

கருமை நிறம் தரக்கூடிய பொருள்களை ஆராய்ந்தால் அவை முழு அளவிலோ அல்லது சார்நிலையிலோ தீமையினைச் சார்ந்தமைவதைக் காணலாம்.

தூய்மை, விருப்பம், கள்ளமில்லாச் சிந்தை போன்ற பொருள்களைக் குறிக்கும் இயல்பு வெள்ளையில் வெளிப்படுகிறது.

பச்சை நிறம் மட்டும் வேறு வேறு பொருள்களை வெவ்வேறு சூழ்நிலையில் தருகிறது. பொதுவாகத் தாவரங்களை (Vegetation) ஏதாவது ஒரு வகையில் தொடர்புபடுத்தி அமைகிறது.

பழமொழிகளைப் பொறுத்தமட்டிலும் இம்மூன்று நிறங்கள் மிகுதியாகப் பயின்று வருகின்றன. அதற்கான காரணங்கள் வருமாறு :

கறுப்பு - வெள்ளை - பச்சை - குறியீடு :

கறுப்பு இருளுடன் தொடர்புடையது. இருள் பேய் பிசாசுகளுடன் தொடர்புடையதாகக் கருதப்படுகிறது.

பயம் உணர்வாய்த் தோன்றிய நம்பிக்கை வயப்பட்ட நிலையில் கறுப்பு மக்கள் மனத்தில் ஆழப்பதிந்திருக்கிறது.


தீமை, அமங்கலம், இறப்பு என்று பல பொருள்களைக் குறிப்பிடுவதற்குக் கறுப்பு பயன்படுகிறது.

வெள்ளை ஒளியுடன் தொடர்புபடுத்திப் பேசப்படுகிறது. நன்மையின் சின்னமாய்க் கருதப்படுகிறது.

பயம் உணர்வாய்த் தோன்றிய நம்பிக்கை வயப்பட்ட நிலையில் கறுப்பு மக்கள் மனத்தில் ஊறியிருப்பதால் அதனை நீக்கும்வயமாக வெள்ளை கருதப்படுகிறது. அஃதாவது வெள்ளையும் வெள்ளை சார்ந்த பொருள்களும் நன்மை, தூய்மை என்ற நிலையில் அமைகிறது.

பச்சை நிறம் தாவரங்களைக் குறிப்பதாய் அமைகிறது. தாவரங்கள் செழிப்பாயிருப்பதனைப் பசுமை உணர்த்துகிறது. தாவரத்தின் செழிப்பிற்கு மண் செழிப்பும் தேவையாகிறது. தாவரத்தின் செழிப்புப் பணச் செழிப்பிற்கும் காரணமாக உள்ளது. இவ்வாறு முழு அளவிலோ சார்ந்த நிலையிலோ தாவரங்கள் அடிப்படையாக அமைய வாழ்வியலுடன் தொடர்புடையதாய் அமைந்துவிடுகிறது.

கறுப்பு - வெள்ளை - பச்சையின் குறியீட்டைக் கீழ்க்கண்ட வரைபடத்தினால் உணரலாம்.



தொகுப்புரை :

1. பழமொழிகளில் நிறம் என்ற சொல்லாட்சி பெரு வழக்காயுள்ளது.

2. கறுப்பு, வெள்ளை பச்சை போன்ற நிறங்கள் மிகுதியாகப் பயின்று வந்தாலும் கறுப்பு முதன்மை பெறுகிறது.

3. இணை நிறங்களில் கறுப்பும் வெள்ளையும் மிகுதியாகப் பேசப்படுகின்றன.

4. நிறமுடையவற்றைக் குறிப்பாய்ச் சுட்டிப் பொருள் உணர வைக்கும் முறை குறைவாக உள்ளது. மேலும் அவை இரண்டு நிறங்களை ஒப்பிட்டுக் கூறும் வகையில் அமைவதால் இணை நிறத்தில் மிகுந்து காணப்படுகிறது.

5. கறுப்பு விலங்குகளுடன் தொடர்பு படுத்தியும் வெள்ளை ஆடையுடன் தொடர்பு படுத்தியும் பேசப் படுகிறது.

6. பெரும்பாலும் நிறங்கள் தனிப்பொருள் உணர்த்தி வந்தாலும் சிறுபான்மை வேறுபொருள் உணர்த்தியும் வருகின்றன. இவற்றில் பச்சை மிகுந்த அளவில் வேறு பொருள் உணர்த்தி வருவதைக் காணமுடிகிறது.

7. குறியீட்டு முறையில் கறுப்பினைத் தீமையுடன் தொடர்புபடுத்தியும் வெள்ளையை நன்மையுடன் தொடர்பு படுத்தியும் பச்சையை வாழ்வியலுடன் தொடர்பு படுத்தியும் கூறலாம்.

அடிக்குறிப்புகள்

1. தொகுக்கப்பட்ட பழமொழி நூல்களை ஆதாரமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.
2. நிறம் பற்றிய பழமொழிகள் அகரநிரல் படுத்திப் பின்னிணைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.
3. நிறம்.........15

   வண்ணம்.........4

   வர்ணம்.........2

4. பயின்று வருமிடங்கள் : 39
1, 3, 14, 16, 22, 24, 25, 26, 27, 28, 31, 32, 33, 36, 37, 38, 39, 41, 42, 54, 57, 64, 67, 71, 72, 81, 85, 109, 112, 116, 117, 118, 123, 130, 131, 136, 139, 140, 152.
5. கறுப்பு : 25, 26, 31, 32, 33, 42, 54, 57, 71, 85, 109, 112, 118, 123, 130, 131, 139, 152.
கரி : 16, 22, 24, 38, 41
கரு : 1, 3, 14, 27, 28, 64, 67, 72, 81, 116, 117, 136, 140.
6. பயின்றுவருமிடங்கள் 35 :
2, 4, 8, 12, 19, 21, 25, 30, 33, 37, 41, 42, 45, 47, 58, 65, 82, 88, 111, 113, 127, 137, 141, 144, 145, 146, 147, 148, 149, 150, 151, 152, 154, 158, 159.
7. வெள்ளை : 2, 21, 25, 37, 41, 42, 45, 47, 82, 88, 111, 113, 127, 137, 141, 144, 145, 146, 147.
வெண் : 19, 58, 65, 158.
வெளுத்து : 4, 8, 12, 30, 33, 150, 151, 152.
8. பயின்றுவருமிடங்கள் : 23.
9, 53, 56, 75, 77, 88, 89, 90, 91, 92, 93, 94, 95, 96, 97, 98, 99, 103, 104, 105, 106, 110, 114.
9. பச்சை :
9, 53, 56, 77, 88, 89, 90, 91, 92, 93, 94, 95, 96, 103, 104, 105, 106, 110.
பசும் : 25, 97, 98, 99, 144.
10. பயின்றுவருமிடங்கள் : 17
7, 23, 43, 57, 59, 60, 61, 63, 65, 66, 67, 68, 69, 70, 112, 128, 160.
11. நிறம் மட்டும் கூறும்முறை 61 இடங்கள்.
12. நிறமும் அந்நிறமுடைய பொருளும் 55 இடங்கள்.
13. நிறமுடைய பொருள் மட்டும் 18 இடங்கள்.
14. விலங்கினம் தொடர்பானவை :

கறுப்பு : கறுப்பு நாய் (26), கருநாகம் (28), கருப்பு நிறப்பறவை (31), கறுப்பு மாடு (32), கறுப்புக்கோழி (42), கருநாய் (67) கரிச்குருவி (136).

15. கறுப்பு 7; வெள்ளை 2; சிவப்பு-3; பச்சை, மஞ்சள், நீலம்-)

16. தாவரவினம் தொடர்பானவை : கருப்பு - குன்றிமணி (54) வெள்ளை - வெள்ளைப்பூண்டு (143); பச்சை - பச்சிலை (56), பச்சைமட்டை (90), பசுமரம் (114), பச்சைமரம் (91) பச்சை பசும்புல் (97), (98), (99), பச்சோலை (104) சிவப்பு - செவ்வரக்கு (23), செந்தாமரை (59), (60).

17. கருப்பு - 1; வெள்ளை - 1; பச்சை - 10; சிவப்பு 3.

18. கறுப்பு : கருங்கல் (1), கரிவேடம் (22), கரிச்சட்டி (38) கருமேகம் (64).
    வெள்ளை : வெண்சோறு (45), வெண்கதிர் (65), வெள்ளையுடுத்தி (142), வெள்ளைப் பாவாடை (148), வெள்ளெலும்பு (159).
    பச்சை : பச்சைப்பாண்டம் (93)
    சிவப்பு : செங்குருதி (7), காவி (43), செம்பொன் (63), செங்கதிர் (65), சிவப்புத் துப்பட்டி (100)

19. மஞ்சள்........5
    இணைநிறம் 12

20. இணைநிறங்கள் : விலங்கினம் (பறவையினம்) 10
    தாவரவினம் 2
    பிற 2

21. நிறம் தன்பொருள் உணர்த்திவருதல் 86.

22. நிறம் வேறுபொருள் உணர்த்திவருதல் : 42.

23. நிறங்கள் வேறுபொருள் உணர்த்திவருதல்
    பச்சை 12
    மஞ்சள் 5

கருப்பு	10
வெள்ளை	10
சிவப்பு	3

பார்வை நூல்கள் :

1. திருவரங்க நீலாம்பிகை அம்மையார், ஆராய்ந்தெடுத்த அறுநூறு பழமொழிகளும் அவற்றிற்கேற்ற ஆங்கிலப் பழமொழிகளும், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை 1972.

2. துர்க்காதாஸ் சாமி, எஸ். கே., தமிழ்நாட்டுப் பழமொழிகள், வானதி பதிப்பகம், சென்னை 17, இ.ப. 1965.

3. ....கழகப் பழமொழி, அகரவரிசை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1, மறுபதிப்பு, 1970.

பின்னிணைப்பு

(நிறம் பற்றிய பழமொழிகள் அகரவரிசையில் நிரல் படுத்தப்பட்டுள்ளன)

1. அடைமழை பெய்தால்
கருங்கல் கரையுமா.
2. அத்திப்பூவையும் வெள்ளைக் காகத்தையும்
நீரிலுள்ள மீனின் காலையும் பார்த்தாலும்
பார்க்கலாம். ஒரு பெண்ணின் மனதில்
உள்ளதைப் பார்க்கவே முடியாது.
3. அமாவாசை கருக்கலில் பெருச்சாளி
போனதெல்லாம் வழி.
4. அவன் சாயம் வெளுத்துப்போய்விட்டது.
5. ஆ வேறு நிறமானாலும் பால் பேது நிறமோ.
6. ஆயிரம் காக்கைக்குள் ஒரு அன்னம் அகப்பட்டது.
7. ஆறெல்லாம் தண்ணீர்
அடியெல்லாம் செங்குருதி.

8. ஆனையைப் பார்க்கக்கூட வெள்ளெழுத்தா.
9. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
10. இலைப் பழுப்பு ஆனாலும் குலப்பழுப்பு ஆகாது.
11. உண்ட உடம்பு பருக்கும்
தின்ற பாக்குச் சிவக்கும்.
12. உதைப்பானுக்கும் வெளுப்பான் சாதிவண்ணான்.
13. உயிருள்ளவரை பெண்களுக்கு வர்ணங்களில் ஆசையிருக்கும்.
14. உலகம் முழுவதும் காகம் கருமைதான்.
15. எல்லாத்துக்கும் உண்டு இலையும் பழுப்பும்
16. என் முகத்தில் கரி தடவாதே.
17. ஏண்டிபாட்டி மஞ்சள் குளித்தாய்
பழைய நினைப்படா பேராண்டி.
18. ஒரு கண்ணில் வெண்ணெய்
ஒரு கண்ணில் சுண்ணாம்பு ஏன்?
19. ஒருவன்மீது காதல் தோன்றிவிட்டால்
அவன் குளிக்காமல் இருக்கும்போதே
வெண்மையாத் தோன்றுவான்.
20. கங்கையில் முழுகினாலும்
காக்கை அன்னம் ஆகுமா?
21. கந்தையைக் கட்டிவெளியே வந்தாள் கண்ணாட்டி
வெள்ளையைக் கட்டி வெளியே வந்தாள் வெள்ளாட்டி
22. கந்தைத்துணியும் கரிவேடமும் (கரிக்கோலமும்) ஆனான்.
23. கம்மாளன் பசுவைக் காதறுத்துக் கொண்டாலும்
உள்ளே செவ்வரக்குப் பாய்ச்சிருப்பான்.
24. கரிவிற்ற பணம் கருப்பாய் இருக்குமா?
25. கறுப்பும் வெள்ளையும் கண்ணுக்குத் தெரியாதா?
26. கறுப்புநாய் வெள்ளைநாய் ஆகுமா?
27. கருப்புக்கழுத புழுதி காய்ச்சின்
பாலுக்குச் சக்கரையா.

28. கரையான் புற்றெடுக்க
கருநாகம் குடிபோனதுபோல
29. கலப்பானாலும் பூசப்பூசப் பொன்னிறம்.
30. கழுத்து வெளுத்தாலும் காகம் கருடன் ஆகாது.
31. கறுப்பு நிறப் பறவையெல்லாம் குயிலா.
32. கறுப்பு மாடு கால்மாடு.
33. கறுப்பு வெளுப்பு ஆகாது.
34. கசப்பு இனிப்பு ஆகாது.
35. காக்காயினும் கனச்சிவப்பு.
36. காக்காயின் கண்ணுக்குப் பீர்க்கம்பூ பொன்னிறம் போன்றது.
37. காகத்திலே வெள்ளை உண்டா.
38. காக்கை கரிச்சட்டியைப் பழித்ததாம்.
39. காக்கையைவிடக் கரியது களாம்பழம்.
40. காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்.
41. காரியும் வெள்ளையும் கருதிப் பயிர்செய்.
42. காலம்கெட்டுக் கறுப்புக்கோழி வெள்ளை முட்டை யிடுகிறது.
43. காவியுடுத்தவரெல்லாம் விவேகாநந்தரா.
44. கிழவன்தான் நரை
கிழவன் கொடுத்த பணமுமா நரை.
45. குட்டிச்சுவரிலே முட்டிக்கொள்ள
வெள்ளெழுத்து வேண்டுமா
இறப்பவனுக்கு வெண்சோறும் பஞ்சமா.
46. குப்பையிற் புதைத்தாலும் குண்டுமணியின் நிறம் போகாது.
47. குமரிக்கு ஒரு பிள்ளை
கோடிக்கு ஒரு வெள்ளை.
48. குரங்குக்குத் தன் குட்டி பொன்குட்டி.
49. குருடன் பார்க்க முடியவில்லை
என்பதால் வானத்தின் நீலநிறம்
குறைந்துவிடுவதில்லை.

50. குருடன் நிறங்களைப் பேசத் தகுதியற்றவன்.
51. குருடனுக்குப் பால் கொக்குப் போன்றது.
52. குளவி புழுவைத் தன்நிறம் ஆக்குவதுபோல.
53. குளவிக்குப் பச்சைப் புழு பிள்ளை.
54. குன்றிமணிக்கும் குண்டிமணியில் கறுப்பு
கண்ணிழந்தவனுக்குக் கண்டதெல்லாம் கறுப்பு.
55. கையாலாகாத சிறுக்கி வர்ணப்புடவைக்கு ஆசைப் பட்டாளாம்.
56. கொல்லைப் பச்சிலை மருந்துக்கு உதவுமா?
57. கோழி கறுப்போ சிவப்போ
முட்டை வெள்ளைதான்.
58. சங்கு சுட்டாலும் வெண்மை தரும்.
59. சித்திரச் செந்தாமரையை
ஒத்திட முகமலர்ந்தது.
60. சித்திரத்திலே எழுதிய செந்தாமரைபோல.
61. சிறியார் கைச்செம்பொன் போல.
62. சின்னச் சின்னப் பேச்சு சிங்காரப்பேச்சு
வண்ண வண்ணப் பேச்சு மெத்த வழக்கமான பேச்சு.
63. சீர்அற்றார் கையிற் செம்பொன் விலைபெறா.
64. சூரியன் முன் சூழ்ந்த கருமேகம்.
65. செங்கதிர் முன்னே
வெண்கதிர் அடங்கினது போலே.
66. செத்தவன் கண் செந்தாமரைக் கண்
இருந்தவன் கண் நொள்ளைக்கண்,
67. செந்நாயைச் செருப்பால் அடி
கருநாயைக் கழியால் அடி.
68. செவல்பட்டிக்கு வழியெது என்றால்
செவலக்காளை ஐம்பது ரூபா என்கிறான்.
69. செறுக்க முற்றின வாழைக்காய்
புளியில்லாமல் இனிக்கிறது.
70. சேற்றிலே முளைத்த செந்தாமரைபோல

71. சோற்றுக்கும் கறுப்பு உண்டு
சொல்லுக்கும் பழுது உண்டு.
72. சோறு வேண்டாதவன்
கருப்புக்குப் பயப்படமாட்டான்.
73. தங்கம் புடத்தில் வைத்தாலும்
தன்னிறம் போகாது.
74. தன் ஊருக்கு அன்னம்
பிற ஊருக்குக் காகம்.
75. தாயகைப் பசும்பொன்னிலும்
தன்கைத் தவிடே மேல்
76. தூரத்திலிருக்கும் மலை நீலநிறமாகத் தோன்றும்.
77. தூரத்துப்பச்சைக் கண்ணுக்கும் குளிர்ச்சி.
78. நரிக்கு நிறம் மாறினாலும் குணம்மாறாது.
79. நரைத்தவனெல்லாம் கிழவனா
பாவாட்டாம் பூப்போல நரைத்தும் புத்தியில்லை.
80. நரைத்த மயிர் கருத்து நங்கை நாச்சியார்
கொண்டை முடிப்பாளாம்.
81. நாகத்தின் கழுத்து கருத்தென்ன பெருத்தென்ன.
82. காகத்திலே வெள்ளையுண்டா.
83. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக.
84. நிதம் கண்டகோழி நிறங்கெடும்.
85. நிலத்துக்கும் கறுப்பு ஊட்ட வேண்டுமா?
86. நிலம் கட்டுப்படப் பேசுகிறான்.
87. நெருப்பைச் சார்ந்த யாவும் அதன் நிறமாகும்.
88. பச்சை கொடுத்தால் பாசம் தீரும்
வெள்ளை கொடுத்தால் வினைதீரும்.
89. பச்சைச் சிரிப்புப் பல்லுக்குக் கேடு
துவுபருக்கை வயிற்றுக்குக் கேடு.
90. பச்சை மட்டைக்குப் போனவன்
பதினட்டாந் துக்கத்து வந்தாற்போல.
91. பச்சைமரம் படப்பார்ப்பாள்,

92. பச்சையைக் கண்டால் ஒட்டடீ மகளே.
93. பச்சைப் பாண்டத்தில் பாலை வைத்தால்
பாலும் உதவாது பாண்டமும் உதவாது.
94. பச்சைப்புண்ணின் ஊசியெடுத்துக் குத்தியதுபோல.
95. பச்சைமண்ணும் சுட்டமண்ணும் ஒட்டுமா.
96. பச்சை மரத்துக்கு இத்தனையென்றால்
படாத மரத்துக்கு எத்தனை.
97. பசும்புல் தேய நடவாத பாக்கியவான்.
98. பசும்புல் நுனிப் பரிச்சயம் போல.
99. பசுமரத்தாணி போல.
100. பட்டிக்காட்டானுக்குச் சிவப்புத் துப்பட்டிபீதாம்மரம்
101. பண்ணையை விட்டுப் போனபிறகு
செவலைமாடு பத்திரம் என்றதுபோல.
102. பத்துமனிதர் பத்துநிறம்.
103, பல்லிலே பச்சரிசி வைக்க.
104. பச்சோலைக்கு இல்லை ஒலி.
105. பச்சிலையும் கிள்ளப்படுமோ பராபரமே.
106. பழுத்த இலை விழுந்தால்
பச்சை இலை பார்த்துச் சிரிக்கும்.
107. பழுத்த பழம் கொம்பிலே நிற்குமா.
108. பழுப்பு ஓலையைக் கண்டு குருத்து ஓலை சிரித்ததாம்.
109. பழைய கறுப்பனே கறுப்பன்
பழைய மண்கிண்ணி மண்கிண்ணியே.
110. பார்த்திருந்தவன் பச்சைகுத்தினான்
கேட்டிருந்தவன் வற்புறுத்தினான்.
111. பார்ப்பார் சேவகமும் வெள்ளைக்குதிரைச்
சேவகமும் ஆகாது.
112. பார்ப்பான் கறுப்பும்
பறையன் சிவப்பும் ஆகாது.
113. பாலும் வெள்ளை மோரும் வெள்ளை.

114. பாரைக்கு ஊடாடாத பாறை
பசுமரத்தின் வேருக்கு ஊடாடிவிடும்.
115. பூசப்பூசப் பொன்னிறம்
116. பெரிய இடமென்று பிச்சைக்குப் போனாளாம்
கரியைவழித்து முகத்திலே தேய்த்தாளாம்.
117. பேர் பொன்னாத்தாள் கட்டக்கரிய மணிஇல்லை.
118. பொன் கறுத்தால் மாற்றுக் குறையுமா?
119. மகமேருவைச் சேர்ந்த காகமும் பொன்னிறமாம்.
120. மகராசனுக்கு வாழ்க்கைப்பட்டு
மஞ்சளுக்குத் தரித்திரமா.
121. மஞ்சள் குளித்து மனைமேலே இருக்கும்போது
மாட்டேன் என்றீரே பிள்ளை
பெற்று நொந்திருக்கச்சே வேண்ட வந்தீரே.
122: மஞ்சளும் மலரும் கொண்டு துதிக்காவிட்டாலும்
நெஞ்சில் நினைப்பதே போதும்.
123. மச்சானைப் பார்க்க உறவுமில்லை.
மயிரைப் பார்க்கக் கறுப்புமில்லை..
124. மருண்டவன் கண்ணிற்கு
இருண்டதெல்லாம் பேய்.
125. மா பழுத்தால் கிளிகாக்கும்.
126. முக்காலம் காகம் முழுகிக்
குளித்தாலும் கொக்கு ஆகுமா.
127. முதல் எழுத்திலே வெள்ளெழுத்தா.
128. முருகம்பூ செவந்ததினார் முடிப்பார்களா?
129. யார் தலைமயிர்தான் நிறம்மாறாமலிருக்கும்.
130. யானை கறுத்தால் ஆயிரம்பொன்பெறும்
பூனை கறுத்தால் என்னபெறும்.
131. வடக்கே கறுத்தால் தெற்கே மழை.
132. வண்ணத்துக்கிண்ணம் போடுகிறாள்.

133. வண்ணக்குதிரை மங்வணைத் திண்கையில்
தட்டுவாணிகக் குதிரை கொள்ளுக் கழுகிறதாம்.

134. வயதுக்கோ நரைத்தது
மயிருக்கா நரைத்தது.

135. வரவிற்குத் தகுந்த செலவு
மாப்பிள்ளைக்குத் தகுந்த மஞ்சள்.

136. வால்நீண்ட கரிக்குருவி
வலமிருந்து இடம்போனால்
கால்நடையாய்ப் போனவர்கள்
கனகதண்டிகை ஏறுவார்கள்.

137. வாலிபத்திலும் வெள்ளைத்தாளிலும்
எதை எழுதினாலும் பதிந்துவிடும்.

138. வாழாத பெண்ணுக்கு மை ஏண்டி
பொட்டு ஏண்டி
மஞ்சள் குளிப்பு ஏண்டீ.

139. வீடுதோறும் புகைக்கூண்டு
கறுப்பாய்த்தான் இருக்கும்.

140. வெள்ளெருக்குக்கும் வெள்ளாட்டுப் பாலுக்கும்
கள்ளக் கருமேகம் காணாமற்போம்.

141. வெள்ளைக்காரனுக்கு ஆட்டுத்தோல்
இடம் கொடுத்தார்கள். அதை அறுத்து
ஊர்முழுவதும் அடித்து இது எனது என்றான்.

142. வெள்ளையுடுத்தி வீடு நடந்தாலும்
வெள்ளாட்டி வெள்ளாட்டியே.

143. வெள்ளைப் பூண்டுக்கு எத்தனை வாசனை
கூட்டினாலும் துர்க்கந்தத்தையே வீசும்.

144. வெள்ளை வேட்டியில் பட்டகறை
வெளிச்சம் போடாமல் தெரியும்.

145. வெள்ளை கொடுத்தால் வினைதீரும்.

146. வெள்ளைக்கு இல்லை கள்ளச்சிந்தை.

147. வெள்ளையும் சள்ளையுமாய் வந்தாள்
வீட்டுக்குச் சோற்றுக்கு இல்லை.
148. வெள்ளைப்பாவாடை விரித்தாற்போல.
149. வெள்ளையாய்ச் சொல்லிவிட்டான்.
150. வெளுத்துவிட்டாலும் சரி
சும்மாவிட்டாலும் சரி.
151. வெளுத்தது எல்லாம் பால் இல்லை.
மின்னுவது எல்லாம் பொன் இல்லை.
152. வெளுத்ததெல்லாம் பால்
கறுத்ததெல்லாம் தண்ணீர்.
153. வெற்றிலைக்குத் தண்ணீரும்
வேசிக்கு மஞ்சளும் போல.
154. வெறும்வாயை மென்றவனுக்கு
வெள்ளை அவல் கிடைத்ததுபோல.
155. வேசி அவல் ருசியை அறியாள்
வெள்ளாட்டி ஏன் ருசியை அறிவாள்.
156. வேசி ஆடினால் காசு,
வெள்ளாட்டி ஆடினால் சவுக்கு.
157. வேசி உறவும் வெள்ளாட்டி அடிமையும்
காசுபணத்தளவே காணலாம்.
158. வேசி கூச்சப்பட்டால் வெண்காசு கிடைக்குமா.
159. வேசிமேல் ஆசைப்படுகிறது
வெள்ளெலும்பை நாய் கௌவினதற்கொப்பாம்.
160. வேப்பம்பழம் சிவந்தாலும் விரும்புமா கிளி.

6. விளையாட்டுப் பாடல்கள்

நாட்டுப்புறப் பாடல் வகைகள் நாட்டுப்புற மக்களிடம் இடம்பெறுகின்றன. இந்நாட்டுப்புற மக்கள் சூழ்நிலையிலும், பூகோள ரீதியில் வாழும் இடவகையிலும், மத இயல்பிலும், பொருளாதார நிலையிலும் கல்விப் பயன் அறியாத நிலையிலும் பகட்டான வாழ்க்கை வாழ்பவர்களிடமிருந்து வேறுபட்டு அமைகின்றனர். எழுதப்படிக்கத் தெரியாத அவர்களுக்கு இலக்கியத்தை நுகரும் பக்குவம் இல்லை. எனினும் அவர்களிடம் இன்பந்தரும் பாடல்கள் இல்லாமல் இல்லை. அவைகள்தான் நாட்டுப்புறப் பாடல்கள்.

நாட்டுப்புறப் பாடல்களில் நாம் செய்யுள் இலக்கணம் பார்த்தலாகாது. ஓசைநயமும், பொருளின் போக்கும் புலவர்களின் பாக்களில் தொனிப்பதுபோலத் தொனிக்கும். மேலும் பேசும் வழக்குமொழி இவ்வகைப் பாடல்களில் அமைவது இயல்பாக அமைகிறது.

நாட்டுப்புறப் பாடலை வாய்மொழி இலக்கியம் (Oral Literature) என்று குறிப்பிடுவர். வாய்மொழியாகவே பரவும் தன்மை இவ்வகைப் பாடலில் அமைவதால் அவ்வாறு அழைக்கப்படுகிறது. இவ்விடத்தில் ஜான்வான்சினா என்பவரின் கருத்துக்களைக் குறிப்பிடலாம். வாய்மொழி இலக்கியத்தை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கிறார். நிலைத்த

தொடர் அமைப்புடையது (fixed phrase genere) எவ்விதக் கட்டுப்பாடின்றியும் வரும் தன்மை உடையது (free phrase genere) என்று பிரிக்கின்றார். இவற்றில் நாட்டுப்புறப் பாடல்வகை இரண்டாவது வகையில் அடங்கும். நிலைத்த தொடர் அமைப்புடையவற்றில் சொற்கள் மரபாகப் பயின்று வரும். ஆனால், நாட்டுப்புறப் பாடல்களைப் பாடும் ஒவ்வொருவரும் (informants) ஒன்றுபோலச் சொல்வார் என்பதை எதிர்பார்க்கமுடியாது. இதனால்தான் திரிபு வடிவங்கள் (Versions) கிடைக்கின்றன. இத்திரிபு வடிவங்கள் அமைவதற்கு மூன்று காரணங்களைக் கூறுவர். நிலவியல் சூழல் (Geographical environment) சமுதாயச் சூழல் (Social environment) வட்டார வழக்கு வேறுபாடுகள் (Dialect variations) போன்றவை காரணங்களாக அமைகின்றன.

நாட்டுப்புறப் பாடல்களை ஆராயப்புகுவோர் மேற்கண்ட கருத்துக்களைக் கவனத்தில் கொண்டு ஆய்வினை மேற்கொள்வர். நாட்டுப்புறப் பாடல்களைப் பற்றிய ஆய்வில் பலர் ஈடுபட்டுள்ளனர். கி.வா. ஜகந்நாதன் (1958), கே.பி.எஸ். ஹமீது (1961), நா. வானமாமலை (1969), ஆறு. அழகப்பன் (1973), ஆறு. இராமநாதன் (1977), க. கிருட்டினசாமி (1977), மா. கோதண்டராமன் (1977), ஜே. விமலா பென்சிலி செல்வம் (1977), மா. வரதராசன் (1978), மி. நாசிர் அலி (1977), சா. வளவன் (1977), சு. சண்முகசுந்தரம் (1977-78), இ. பாலசுந்தரம் (1979). அவர்கள் நாட்டுப்புறப் பாடல்களின் வகைப்பாட்டில் விளையாட்டுப் பாடல்களைப் பற்றிச் சிந்தித்திருப்பர். எனினும் இவ்வாய்வு முன்னையோர் போக்கிலிருந்து மாறுபட்டமைகிறது. விளையாட்டுப் பாடல்களைப் பற்றி விளக்கமாகவும், அவை விளையாட்டிற்கு எந்த வகையில் உதவுகின்றன அல்லது பயன்படுகின்றன என்பதைக் கருத்தில் கொண்டும் ஆய்வு அமைகிறது.

நாட்டுப்புற விளையாட்டுகளை நான்கு வகைகளில் பிரிக்கலாம் :

1) உடல்திறன் விளையாட்டுகள்
2) அறிவுத்திறன் விளையாட்டுகள்
3) வாய்ப்புநிலை விளையாட்டுகள்
4) மனமகிழ்ச்சி நிலை விளையாட்டுகள்

மனமகிழ்ச்சிநிலை விளையாட்டுகளில் பாடல்கள் மிகுதியாக இடம்பெறுகின்றன. அடுத்த நிலையில் உடல்திறன் விளையாட்டுகளிலும் வாய்ப்பு நிலை விளையாட்டுகளிலும் பாடல்கள் பயன்படுகின்றன. அறிவுத்திறன் விளையாட்டுக்களில் பாடல் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அறிவுத்திறன் விளையாட்டுக்களில் ஆடவர் கலந்து கொள்வது பெரும்பான்மை எனலாம். சிறுவர் சிறுமியரை ஒப்பிட்டு நோக்கினால் சிறுமியர் விளையாட்டுக்களில் மிகுதியான பாடல்கள் இடம்பெறுகின்றன.

விளையாட்டுப் பாடல்களை இரண்டு விதமாகப் பகுக்கலாம்.

1. விளையாட்டினை ஒழுங்குபடுத்துவதற்குப் பயன்படுபவை.
2. விளையாட்டு முறையுடன் இணைந்து வருபவை.

1. விளையாட்டினை ஒழுங்குபடுத்துவதற்காகப் பயன்படுபவை :

பலர் கலந்துகொள்ளும் விளையாட்டில் விதிமுறையாகப் பாடல்கள் அமைகின்றன. இவ்வகைப் பாடல்கள் பயன்படுத்தப்பட்டு 'பட்டவரைத்' தேர்ந்தெடுப்பது இயல்பாகிறது.

கலந்துகொள்வோர் வரிசையில் நிற்க வேண்டும். விளையாட்டினை நடத்துபவர் அல்லது தலைவராகச் செயல்படுபவர் ஒவ்வொருவரையும் தொட்டு இவ்வகைப் பாடல்களைப் பாடுவர். பாடலின் இறுதிச் சொல் யார்மேல் முடிகிறதோ அவர் 'பட்டவராக' ஆகலாம் அல்லது பழமானவராகக் கருதப்படலாம்.

இவ்வகைப்பாடல்கள் கீழ்க்கண்ட வகைகளில் அமைகின்றன :

1) இறுதியில் அழகான சொல்லுடன் முடிதல்
2) வேறுபடுத்தும் இயல்பான முறையில் முடிதல்
3) எண்ணில் முடிதல்
4) பொருளற்ற முறையில் முடிதல்
5) வேடிக்கையான சொல்லில் முடிதல்

இவ்வகைப்பாட்டில் முதல் இரண்டு வகைகளில் ஓர் ஒற்றுமை அமைகிறது. அஃதாவது பாடலின் இறுதிச் சொல் யார்மேல் முடிகிறதோ அவர் 'பழம்'. பாடலைத் திரும்பித் திரும்பிச் சொல்லும்போது இறுதியில் இருப்பவர் பட்டவராகச் செயல்படவேண்டும். மற்றவகைப் பாடல்களில் இறுதிச்சொல் யார்மேல் முடிகிறதோ அவர் 'பட்டவராகச்' செயல்படவேண்டும். மற்றவரெல்லாம் பழமாகியவராகக் கருதப்படுவர்.

1. இறுதியில் அழகான சொல்லுடன் முடிதல் :

எ.டு.

ஒன்னர டுவர
டக்கர டன்
யாவல் காவல்
மஸ்பி டன்
குள்ளன் கள்ளன்
டொண்டி ஒன்
யா யூ மே ப்ளஸ்
செட்டியார் வீட்டு
நண்டைத் தூக்கி
மேலே போட்டா
நாகரத்தினப் பாம்பு
பாம்பைத் தூக்கி
மேலே போட்டா
பஞ்சவர்ணக்கிளி

'பஞ்சவர்ணக்கிளி' என்ற அழகான சொல் யார்மேல் முடிகிறதோ அவர் பழம். இப்பாடலில் முதல் ஏழு அடிகளில் ஏதேனும் பொருள் இருப்பதாகத் தெரியவில்லை. அடுத்த ஐந்து அடிகள் முழுமையான பொருளைத் தராவிட்டாலும் ஏதோ ஒருவகைத் தொடர்பு இருப்பதை உணரமுடிகிறது. இறுதி ஐந்து அடிகள் முதன்மைப்பகுதி (Main structure) எனவும் பொருளற்ற முறையில் அமைந்திருக்கும் முதல் ஏழு அடிகளை (coda) துணைப் பகுதியென்றும் கூறலாம். துணைப்பகுதி முதன்மைப் பகுதியில் இடம்பெறும் சந்த நயத்துடன் அமைந்திருக்கிறது. இவ்வமைப்பு இறுதிச் சொல் அழகாக முடியும் பாடல்களில் காணக்கூடியதாகும்.

வேறுபடுத்தும் இயல்பான முறையில் முடிதல் :

எ.டு.

பச்சைத்தவக்கா
பளபளங்க
மின்மினியா
வாழைத்தண்டா
ரெண்டாங்கட்டி
ஓடமுருகா
சேலங்கட்டி
சின்னதம்பிக்குத்
தாலிகட்டி
அத்திச்சோறு
மெல்லவந்து
அரோகரா
ஓடிப்போ

'ஓடிப்போ' என்ற இறுதிச்சொல் யார்மேல் முடிகிறதோ அவர் பழமாகியவராகக் கருதப்படுவார்.

மேற்கண்ட பாடலில் முதன்மைப் பகுதி எது என்பது தெளிவின்றி அமைந்திருக்கக் காணலாம். இது குறிப்பிட்ட துணைப்பகுதியிலிருந்து (Strict Coda) மாறுபட்டு இணைப்

பகுதியாக (integrated coda) அமைவதாகக் கொள்ளலாம். இறுதிச் சொல் மட்டும் இங்குத் துணைப்பகுதியாக அமைந்துள்ளது எனலாம்.

3. எண்ணில் முடிதல் :

எ.டு.

ஒன்று இரண்டு பன்னிரெண்டு
யார் சொன்னா பன்னிரெண்டு
நான் சொன்னேன் பன்னிரெண்டு
எண்ணிப்பார் பன்னிரெண்டு.

இறுதிச்சொல் யார்மேல் முடிகிறதோ அவர் 'பட்டவர்' ஆவார். இதில் முதன்மைப்பகுதி துணைப்பகுதி என்று பிரித்துப்பார்க்க இயலாத வகையில் அமைந்திருப்பதைக் காணலாம்.

4. பொருளற்ற முறையில் முடிதல் :

எ.டு.

பச்சைத் தவக்கா
பளபளங்க
மினுமினுங்க
செங்கலணி
சிவத்த புள்ளை
ஆட்டாட்டி
மாட்டாட்டி
கிண்ணிவந்தா
கிணுக்காட்டி

'கிணுக்காட்டி' என்ற சொல்லிற்குப் பொருள் இருப்பதாகத் தெரியவில்லை. இச்சொல் யார்மேல் முடிகிறதோ அவர் பட்டவர் எனக் கருதப்படுகிறார். இதில் முதல் ஐந்து வரிகளைத் துணைப்பகுதி எனக் கூறலாம். துணைப்பகுதி பொருளற்ற முறையில் முதன்மைப் பகுதியிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கும் வகையில் அமைந்திருக்கிறது.

5. வேடிக்கையான சொல்லில் முடிதல் :

எ.டு.
பிஸ்கட் பிஸ்கட்
என்ன பிஸ்கட்
ஜம் பிஸ்கட்
என்ன ஜம்
ராஜம்
என்ன ரா
கோரா
என்ன கோ
டீக்கோ
என்ன டீ
பொண்டாட்டி

இறுதிச் சொல் யார்மேல் முடிகிறதோ அவர் பட்டவ ராகக் கருதப்படுவார். இங்கு முதல் ஐந்து அடிகளை முதன்மைப் பகுதியாகும். இறுதி ஆறு வரிகளாக அமையும் துணைப்பகுதியில் பொருள் தெளிவு இல்லை. இப்பாடல் வினாவும் விடையுமாக மாறியமைவதையும் காணலாம். எனவே, வினாவிடைச் சங்கிலியில் இடம்பெறும் பாட்டினை விளையாட்டினை ஒழுங்குபடுத்தும் தேர்ந்தெடுப்பு முறைக்குப் பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.

2. விளையாட்டு முறையுடன் இணைந்துவருபவை :

விளையாட்டுப் பாடல்கள் விளையாட்டின் ஆடு முறைக்குப் பலநிலைகளில் உதவியாய் அமைகின்றன. உடல் திறன் விளையாட்டுக்களில் மனமகிழ்ச்சி வரையுள்ள முறையில் பாடல்களின் பயன்பாடு வரிசைப்படுத்தப்பட்டு உள்ளன. ஒரே பயன்பாடு நான்கு வகைகளில் இடம் பெற்றால் ஒரே தலைப்பில் இணைத்து ஒப்பிட்டுக் கூறப் படுகிறது. காட்டாக முரண்பாட்டினை வளர்க்க உதவும் பாடல் உடல்திறனிலும், வாய்ப்புநிலையிலும், மனமகிழ்ச்சி

நிலையிலும் இடம்பெறலாம். எனவே அவைகள் மூன்றும் ஒரு தலைப்பில் விளக்கப்படுகின்றன.

1. மூச்சினையடக்குதல் :

மூச்சினையடக்குவதற்கும், தான் மூச்சினை அடக்கி யிருப்பதைப் பிறர் புரிந்துகொள்வதற்கும் பாடல்பாடுவது இயல்பாகிறது. மூச்சினை நெடுநேரம் அடக்கும் பயிற்சியில் தான் இத்தகு விளையாட்டுகளில் போட்டிகள் அமைகின்றன எனலாம்.

எ.டு.

சடுகுடு, ஓடு சிக்கு.

மேற்கண்ட விளையாட்டில் ஆடும்முறையுடன் மூச்சினை யடக்கும் நிலை இடம்பெறுகிறது. கிட்டி வகை விளை யாட்டுகளில் சற்று மாறுபட்டுத் தோற்ற கட்சியினர் தண்டனைக்காக மூச்சினையடக்கும் இயல்பும் இடம் பெறு கிறது.

இவ்வகைப் பாடல் மூச்சினைப் பிடித்துப் பாடுவதற் கேற்றவாறு எளிமையாக அஃதாவது சிறியதாக இருக்கும். பெரும்பான்மையான பாடல்களில் வல்லினச் சொற்கள் விரவி வருவதைக் காணலாம். பாடலின் இறுதி வார்த்தை யைத் திரும்பத் திரும்பச் சொல்லுமியல்பு இடம்பெறுகிறது. பாடல்கள் பொருளற்றனவாகவும் வேடிக்கையாகவும் சிறு நிகழ்ச்சிகளை விளக்குவனவாகவும் அமையலாம்.

பொருளற்ற பாடல் :

வாய்க்கா வரப்பு
மஞ்சணத்தித் தோப்பு...மஞ்சணத்தித் தோப்பு

வேடிக்கையாக அமையும் பாடல் :

சடுகுடு மலையிலே ரெண்டாளு
அதிலே ஒராளு குண்டாளு
அக்கா புருஷன் ஏமாளி
தங்கச்சி புருஷன் தக்காளி...தக்காளி...

வீரத்துடன் அமையும் பாடல் :

யானை மேலே ஏறுவேன்
வீரமணி கட்டுவேன்
ஆம்புட்ட பசுக்களை
மண்டையை உடைப்பேன்...உடைப்பேன்

விளையாட்டின் தன்மையை விளக்கும் பாடல் :

பல்லுக்கிச்சிப் பாடவே
பல்லு இரண்டும் உடையவே
ஓங்காத்தாளுக்கும் அப்பனுக்கும்
தண்டல்......தண்டல்...

2. விரட்டிவருவபர் மாறிவருவதற்கு உதவும் பாடல் :

'விரட்டி வருபவர்' (Chasen) ஆட்டம் முழுவதும் தொடர்ந்து விரட்டிவருதல் இயல்பாகாது. விளையாட்டும் விறுவிறுப்பாக இயங்காது. எனவே, விரட்டுபவர் மாறி அமைவதற்குப் பாடல் உதவுகின்றது.

எ.டு. நெல்லிக்காய் விளையாட்டு

திருமணத்தின் போதும் திருவிழாக்களின் போதும் பந்தலுக்குள் சிறுவர்கள் வந்து நின்றுகொண்டு ஆளுக்கொரு வந்தல் காலைப் பிடித்துக் கொள்வர். யாருக்குப் பந்தல் கால் கிடைக்கவில்லையோ அவர் 'நெல்லிக்காய்' விற்று வரவேண்டும்.

காயோ கடப்பங்காய்
காஞ்சிபுரத்து நெல்லிக்காய்
உப்போ புளியங்காய்
ஊறுகாய் போட்டா நெல்லிக்காய்

பாடும்போது பந்தல்காலினைப் பிடித்து நிற்பவர் மாறி மாறிப் பந்தல்கால்களைப் பிடித்துவிடுவர். பாடலின்முடிவில் 'பட்டவரும்' ஒரு பந்தல்காலைப் பிடித்துக் கொள்ளுவார். இப்பொழுது யாருக்குப் பந்தல் கால் கிடைக்கவில்லையோ அவர் பட்டவராகச் செயல்பட்டுப் பாடிவர வேண்டும்.

3. விரட்டுபவர் துணைதேடிக்கொள்ளும் நிலையில் பாடல் :

எ.டு. கோட்டான் கோட்டான்.

'பழமேறியவர்' வட்டமான கோட்டிற்குள் நின்று கொள்ள வேண்டும். 'பட்டவர்' அரங்கத்தின் வெளியில் நிற்பார். இருவருக்குமிடையில் கீழ்க்கண்டவாறு உரையாடல் அமையும்.

பட்டவர் : கோட்டான் கோட்டான்
மற்றவர் : கோட்டுக்குள்ளே
பட்டவர் : எத்தனைபேர்
மற்றவர் : பத்துப்பேர் (எத்தனைபேர் இருந்தாலும் பத்து என்று கூறுவது இயல்பு)
பட்டவர் : அவனை அடி இவனை அடி இராமனையும் சேர்த்து அடி

அரங்கத்தில் நிற்பவருள் யார் பெயரையாவது சொல்லலாம். அந்தப் பெயருக்குரியவர் பழமேறியவரால் அடிக்கப்பட்டு அரங்கத்தின் வெளியே தள்ளப்படுவார். பட்டவரும் வெளியே தள்ளப்பட்டவரும் சேர்ந்து அரங்கத்தில் இருப்பவரைப் பிடித்து இழுத்து வெளியே கொண்டுவரவேண்டும்.

ஓடுபவர்க்கு நேரம் கொடுக்கும் நிலையில் அமையும் பாடல் :

எ.டு. எறிபந்து

ஆட்டத்தில் கலந்துகொள்வோரில் ஒருவர் கையில் பந்து இருக்கும். இவர் மற்றவரைப் பந்தினால் எறிய வேண்டும். அப்பொழுது கீழ்க்கண்ட பாடலைப் பாடுவர். பாடல் முடிவதற்குள் மற்றவர் பந்து உடல்மேல் விழாத தூரத்தில் ஓடிப்போய் நின்றுகொள்வர்.

பந்தினை வைத்திருப்பவர் : பந்தோ பந்து
மற்றவர் : என்ன பந்து?
பந்து வைத்திருப்பவர் : எறிபந்து
மற்றவர் : யார் மேலே?
பந்து வைத்திருப்பவர் : இந்தாபுடி உன்மேலே

இறுதி வரியினைச் சொல்லிக்கொண்டு எறிவர். இவ்விளையாட்டில் வேறொரு பாடலும் இடம்பெறுகிறது. அப்பாடல் வினாவிடையில் அமைகிறது. (வினா விடைச் சங்கிலிப் பாடல்)

பந்து வைத்திருப்பவர்	:	பே! பே!
மற்றவர்	:	என்ன பே?
பந்து வைத்திருப்பவர்	:	பந்து பே.
மற்றவர்	:	என்ன பந்து
பந்து வைத்திருப்பவர்	:	ரப்பர் பந்து
மற்றவர்	:	என்ன ரப்பர்
பந்து வைத்திருப்பவர்	:	இந்தியா ரப்பர்
மற்றவர்	:	என்ன இந்தியா
பந்து வைத்திருப்பவர்	:	வட இந்தியா?
மற்றவர்	:	என்ன வடை?
பந்து வைத்திருப்பவர்	:	ஆமைவடை
மற்றவர்	:	என்ன ஆமை?
பந்து வைத்திருப்பவர்	:	குளத்தாமை
மற்றவர்	:	என்ன குளம்?
பந்து வைத்திருப்பவர்	:	திரிக்குளம்
மற்றவர்	:	என்ன திரி
பந்து வைத்திருப்பவர்	:	விளக்குத்திரி
மற்றவர்	:	என்ன விளக்கு
பந்து வைத்திருப்பவர்	:	குத்து விளக்கு
மற்றவர்	:	என்ன குத்து
பந்து வைத்திருப்பவர்	:	கும்மாங்குத்து

முரண்பாட்டினை வளர்க்க உதவும் பாடல் :

முரண்பாடு அல்லது போட்டியுடன் செயல்படுவது விளையாட்டின் இயல்பெனலாம். இம்முரண்பாடு உடல் திறன் விளையாட்டுக்களிலும் மனமகிழ்ச்சி நிலை விளையாட்டுக்களிலும் இடம்பெறுகிறது.

எ.டு. பூப்பறிக்க வருகிறோம்

விளையாட்டில் கலந்து கொள்பவர் இரண்டு கட்சியினராகப் பிரிந்து கொள்வார். ஒரு கட்சியார் பாட எதிர்க் கட்சியாரும் பாடுவதால் பாடல் இயங்கும்.

கட்சி — 1 : பூப்பறிக்க வருகிறோம்
பூப்பறிக்க வருகிறோம்
கட்சி — 2 : எந்த மாசம் பறிக்கிறீர்கள்?
எந்த மாசம் பறிக்கிறீர்கள்?
கட்சி — 1 : ஐப்பசி மாசம் பறிக்கிறோம்
ஐப்பசி மாசம் பறிக்கிறோம்
கட்சி — 2 : எந்தப் பூவைப் பறிக்கிறீர்கள்?
எந்தப் பூவைப் பறிக்கிறீர்கள்?
கட்சி — 1 : மாரியம்மா பூவைப் பறிக்கிறோம்
மாரியம்மா பூவைப் பறிக்கிறோம்.

எதிர்க்கட்சியில் உள்ளவரில் யாருடைய பெயரையாவது சொல்லலாம். இவ்வாறு மாறி மாறிப் பாடலமைந்து முரண்பாடு உச்சநிலையினை அடையும். பின் ஒவ்வொரு கட்சியிலிருந்தும் ஒருவர் வந்து கையினைப் பிடித்து உடல்திறன் அடிப்படையில் தங்கள் கட்சியின் பக்கம் இழுக்க முயல்வர். ஒரு கட்சியில் உள்ளவர் முழுவதும் இன்னொரு கட்சிக்கு வரும்வரை இப்பாடல் திரும்பப் பாடப்படும்.

இப்பாடல் ஒரே அடியை இரண்டு தடவைகள் சொல்லப் படுவதைக் காணலாம். எல்லோரும் ஒன்றுசேர்ந்து கூட்டுக் குரலில் பாடிவருவதென்றால் ஆட்டம் விறுவிறுப்பாக இருக்கும்.

மனமகிழ்ச்சி நிலையில் சுற்றிவருபவர்க்கும் வட்டமாக உட்கார்ந்திருப்பவர்க்கும் இடையில் உரையாடல் நிகழும். சுற்றிவருபவர் சொல்கின்ற வரிக்குப் போட்டியாக மற்றவர் சொல்லுவார். இந்நிலையில் முரண்பாடு வளர்கிறது.

எ.டு. குலை குலையாய் முந்திரிக்காய்

சு.வ. : குலைகுலையாய் முந்திரிக்காய்
உ.இ. : நரி நரியாய் சுற்றிவா
சு.வ. : ஊசி விழுந்துடுச்சு
உ.இ. : ஊதி ஊதி எடுத்துக்க
சு.வ. : பாசி விழுந்துடுச்சு
உ.இ. : பார்த்துப் பாத்து எடுத்துக்கோ

இவ்வாறு மாறி மாறி முரண்பாட்டுடன் பாடல் அமைந்து விறுவிறுப்புடன் இயங்கும்.

கவனப் பயிற்சியாலமையும் பாடல் :

இவ்வகையில் அமையும் பாடல்களில் பங்குகொள்வோர் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். இவ்வகைப்பாடல் உடற்பயிற்சி விளையாட்டிலும் வாய்ப்புநிலை விளையாட்டிலும், மனமகிழ்ச்சி நிலை விளையாட்டிலும் இடம்பெறுகிறது.

ஒருவர் விரித்துவைத்துள்ள கையில் இன்னொருவர் குத்துவார். அப்போது கீழ்க்கண்ட பாடலைப் பாடுவர்.

குத்து குத்து
கும்மாங் குத்து
புளியங் குத்து
புள்ளையார் குத்து
புடிச்சுக்க குத்து

இறுதிச் சொல் முடிவதைக் கவனமாக அறிந்து குத்துவாரின் கையைப் பிடித்துவிட வேண்டும். இல்லாவிட்டால் குத்து வாங்கிக்கொண்டுதான் இருக்க வேண்டும்.

'கொம்பரை' விளையாட்டில்—பாடலைச் சொல்லுபவர் சொல்லச் சொல்ல பின்னால் சொல்லிவர வேண்டும். காட்டாக, கொம்புள்ள விலங்குகளைக் கூறிவருவார். திடீரென்று இடையே கொம்பில்லாத விலங்கினையும் கூறி விடுவார். அதனைத் திருப்பிச் சொல்லாமல் கவனமாகச் செயல்படவேண்டும். இவ்விளையாட்டில் கீழ்க்கண்ட முறையில் பாடல் இடம் பெறுகிறது.

கொம்பரை கொம்பரை
மாட்டுக் கொம்பரை
ஆட்டுக் கொம்பரை
யானைக் கொம்பரை
கழுதைக் கொம்பரை

கழுதைக்குக் கொம்பில்லை. அதனை மறந்து கழுதைக் கொம்பரை என்று சொல்லிவிட்டால் அடுத்த ஆட்ட முறையில் அவர் பாடலைப் பாடவேண்டியிருக்கும்.

ஒரே செயலைத் திரும்பச் செய்யும் நிலையில் அமையும் பாடல்

இருவர் சேர்ந்து ஒரு நபரைச் சுமக்கவேண்டும். ஒருவர் அந்த நபரின் காலினைப் பிடித்திருப்பார். இந்நிலையில் கொஞ்சதூரம் நடந்து செல்வார். அப்போது,

கால் தூக்குகிற
கணக்குப் பிள்ளைக்கு
மாசம் பத்து ரூபா

என்ற அடிகளைத் திருப்பித் திருப்பிச் சொல்வார். சுமக்கும் முறை ஒவ்வொருவருக்கும் மாறி மாறி அமையும்.

எ.டு.
கால்தூக்குகிற கணக்குப்பிள்ளை.

வேடிக்கையாக அமையும் பாடல் :

தீப்பந்தம் சுற்றும் விளையாட்டில் இவ்வகைப் பாடல் அமைகிறது. பெரும்பான்மை சிறுவரும் சிறுபான்மை ஆடவரும் இத்தகு வேடிக்கைப் பாடலைப் பாடுகின்றனர்.

மாவளியோ மாவளி
மாவளிக்காரன் பெண்டாட்டி
மரக்கால்பிள்ளை பெற்றாளாம்
பார்க்கப்போன சீமாட்டி
பல்லொடிந்து செத்தாளாம்
எடுக்கப்போன சீமாட்டி
இடுப்பு ஒடிந்து செத்தாளாம்

எந்தவித விளையாட்டிலும் சாராமல் சில விளை யாட்டுப் பாடல்கள் அமைகின்றன. பொழுது போக்கிற் காகவும் வேடிக்கைக்காகவும் அவ்வகைப் பாடல்கள் பாடப் படுகின்றன.

கண்ணகிக்கும் கோவலனுக்கும் சல்யாணமாம்
கருத்தப்பட்டி பஞ்சனமாம்
அழகுபோல மாப்பிள்ளையாம்
கொட்டுக்காரன் சப்பட்டையாம்
குதிரைக்காரன் ராவுத்தனாம்
எங்கமச்சான் பேயாளியான்
எல்லாரும் வந்து பாருங்க
தெப்பக்குளத்திலே நீராடி
தெருமுட்டியிலே பூசை போட்டு
இனிக்குதா புளிக்குதா மாங்கொட்டை
இந்நேரம் போயிருக்கும் புதுக்கோட்டை
முத்தம்மா புருஷன் மோளக்காரன்
மோளத்தை வச்சுட்டுப் போனானாம்
நாயோ நரியோ தூக்கிப் போயிடுச்சு
நான் என்ன பண்ணுவேன் சித்தப்பா
கட்டாந்தரையிலே முட்டப்பா
காவடி எடுத்துச் செலுத்தப்பா
சுண்ணாம்புக் கலயத்தை உடையப்பா
சுளிச்ச முகத்திலே ஊத்தப்பா.

எண் பயிற்சிக்குதவும் பாடல் :

•தட்டாங்கல் விளையாட்டில் இவ்வகைப் பாடல்கள் இடம் பெறுகின்றன. இவற்றில் அடிதோறும் ஒன்று... இரண்டு...என்ற வரிசையில் பாடல் அமைவதுண்டு.

தப்பு ஒண்ணு
தாளம் மூணு
குழலு நாலு

தீர்த்தம் அஞ்சு
திருவள்ளுவர் ஆறு
மாதம் ஏழு
மருமகள் எட்டு
சித்தி ஒன்பது
புல்லி பத்து

மேற்கண்ட பாடலின் ஒரு அடியின் இரண்டாவது சொல்லில் தொடர்ச்சியாக எண் அமைவதைக் காணலாம். எண்ணிற்கும் முதலில் அமையும் சொல்லிற்கும் பொருள் தொடர்பு இல்லையெனலாம்.

ஒரு கல்லினைத் தூக்கிப்போட்டுத் தரையில் ஒரு தட்டுத்தட்டி மேலிருந்து வரும் கல்லினைப் பிடிக்கவேண்டும். அதற்குத்தகப் பத்து எண்கள் வரைக்கும் பாடல் அமைந்திருக்கக் காணலாம். எ.டு. ஒண்ணாங்கல்,

ஒண்ணான் ஒண்ணு
குடமல்லித் தீர்த்தம்
தீர்த்தக் குருவி
சலங்கை கொண்டுவாடா
மாதுள மஞ்சள்
மருமக்கள் ஆறு
தூதிளை ஏழு
தும்பிக்கை எட்டு
நாரத்தம் ஒன்பது
நல்லோர் பத்து
பின்னி பதினொன்று
குடாரம் பன்னிரெண்டு

தொடர்ச்சியாக எண் அமையாமல் தொடக்க அடியில் எண்ணமைந்து அடுத்து ஐந்து அடிகள் தள்ளி எண் அமையும் முறையினை இப்பாடலில் காணலாம்.

பத்தாங்கல் என்ற ஆட்டவகையில் இடம்பெறும் பாடலும் சற்று மாறுபட்டதாய்க் காணப்படுகிறது. ஒரு பத்தியில் குறைந்தது இரண்டு வரிகளும், கூடியது ஐந்து அடிகளும் அமைகின்றன. முதலடியின் தொடக்கத்தில் எண் சுட்டப்படும். அதற்கடுத்த அடிகள் சந்த நயத்துடன் இணைந்து வருமேயல்லாமல் யாதொரு பொருள் தொடர்பும் இராது.

எ.டு. 1. ஓரி உலகெலா சூரியன்
சூரியன் தங்கைக்கு
சுந்தரவல்லிக்கு
மாயக்கழச்சிக்கு
நாளைக் கல்யாணம்

2. இக்குறி குத்தி
இறைபறிச்சு
இந்திரமான காட்டிலே
சுந்தரிபோலத் தேவடியா

3. முக்கறப்பட்டி அரசபட்டி
முத்தே நெரிநெரி
கொக்கே கொரிகொரி

4. நாங்கண்ணே தூங்கிவர
நாகம் படர்ந்துவர
மேகம் சுருண்டுவர

5. அஞ்சலை குஞ்சலை பாப்பாத்தி
மஞ்சள் அரைப்பா பாப்பாத்தி

6. ஆறும் குறுத்துமட்டும்
அன்னத்தின் பேரை முட்டும்
பேரைச்சொல்லிப் பிச்சையிட்டோம்

7. ஏழண்ணே தூங்கிவர
நாகம் படர்ந்துவர
மேகம் சுருண்டுவர

8. எட்டே எடக்கட்டு
ராசன், தலைக்கட்டு
ராசாத்தி முக்கட்டு

9. ஒன்பதும் சம்பா
சந்தணக் கும்பா
சமைச்சுவைச்சாத் திம்பா

10. பத்தே பதிபதி
பயத்தைக் கொதிகொதி
நெத்தே கொரிகொரி

மேலே குறிப்பிட்ட பாடல் மதுரை மாவட்டத்தில் இடம் பெறுவதாகும். இதே விளையாட்டிற்குத் திருநெல்வேலி மாவட்டத்தில் அமையும் பாடல் பின்வருமாறு :

1. ஓரி உலகெலாம் சூரியன்
சூரியன் தங்கைக்கும்
சுந்தர வள்ளிக்கும்
மாயக் கழச்சிக்கும்
நாளைக் கல்யாணம்.

2. ஈரி இரண்டு
தண்டுக்கத் தண்டு
தாமரைப் பூச்செண்டு

3. மூவாடி ஆத்திலே
இராமேஸ்வரத்திலே
சீதை வனத்திலே
சின்னத்தங்கை ஆடுகிறாள்

4. நங்கைக்கு, இருசட்டம்
நல்லபரிவட்டம்

5. அஞ்சல குஞ்சம்
தம்பி சிதம்பரம்

6. ஆறும் குருகுரு
அள்ளிப்போட்ட வேர்க்குரு

7. ஏழை எழுதிக்கோ
என் பெயரைச் சொல்லிக்கோ
தாழை அடியிலே தண்ணீர்
பந்தல் போட்டுக்கோ
8. எட்டே இடக்கட்டு
ராஜன் தலைக்கட்டு
9. ஒன்பதும் சம்பா
சந்தனக் கும்பா
சமைச்சுப் போட்டாத் திம்பா
10. பத்தே பதிபதி
பணத்தைப் பறிபறி
சொக்கலிங்கநாதனுக்குச்
சோத்தை வடிவடி

இங்கு 'ஓரி' என்பது ஒன்று என்ற எண்ணினைக் குறிக்கும். அதனைத் தொடர்ந்துவரும் அடிகளுக்கும் அவ் வெண்ணிற்கும் பொருள் தொடர்பு இல்லாதிருப்பதைக் காணலாம்.

பொதுவாக விளையாட்டுப் பாடல்கள் அளவில் குறும் பாடல்களானாலும் கழற்சிக்காய் (தட்டாங்கல்) விளை யாட்டுப்பாடல்கள் பெரிய பாடல்கள் எனலாம். அவைகள் பெரியபாடல்களாக இருப்பதற்குக் காரணம் விளையாட்டின் அமைப்பாகும். ஏழு கல்களை வைத்தாடும் படியான ஆட்ட வகையும் உண்டு. ஆனால் களஆய்வில் அவ்வாட்டத்தில் பாடல் இடம்பெறும் முறை கிடைக்கவில்லை. ஏழாங்கல் விளையாட்டில் பாடல் இடம்பெறுவதாக கி. வா. ஜகந் நாதன் குறிப்பிடுகிறார். ஏழுவகைக்கும் எண் தோற்றும் படியாகத் திருவெழுகூற்றிருக்கை என்ற ஒரு வகைப் பிரபந்தம் இருப்பதையும் கூறியுள்ளார்.

கோலி விளையாடும்போது பாடப்படும் பாடல் ஒன்று ஏறத்தாழ ஏழாங்காய் பாடலமைப்பில் உள்ளது என்ற

செய்தியிலிருந்து ஏழாங்கல்லிற்கும் பாடல் இடம்பெறுகிறது என்பது தெளிவாகிறது.

இவைகளைத் தவிர தட்டாங்கல் ஆட்டமுறையில் இடையிடையே வேறு சில பாடல்களும் அமைவதுண்டு. அவைகளில் எண்பயிற்சி இருக்காது. ஆனால் ஆட்டமுறை யோடு இணைந்துவரும். காட்டாக ஐந்தாங்கல் ஆட்டத்தில் இடம் பெறும் பாடலொன்று கீழே தரப்படுகிறது.

அத்தட்டு
இத்தட்டு
ஆலமரத்தட்டு
முலை முறுக்கிட்டு
முன்னி சுருக்கிட்டு
கண்ணாடி காம்சிட்டு
கஸ்தூரிப் பொட்டிட்டு
வாறி வழிச்சிட்டு

ஆட்டத்தின் இறுதியில் நான்கு திசைக்கும் ஒவ்வொரு கல்லினை வைத்து ஒவ்வொரு கல்லினையும் 'வாரும்போது' மேற்கண்ட பாடலைப் பாடுவர். இறுதியில் கையைக் கண்ணாடி மாதிரி வைத்து, நெற்றியில் பொட்டு வைப்பது மாதிரி வைத்துக் கல்லினைத் தூக்கிப்போட்டுப் பிடிக்க வேண்டும்.

மறைமுகமாகப் பெயர்வைக்க உதவும் பாடல் :

கலந்துகொள்வோர் இருகட்சியராகப் பிரிந்து எதிரெதிரே உட்கார்ந்து கொள்வர். ஒரு கட்சியின் தலைவர் எதிர்க்கட்சிக்குச் சென்று ஒருவரின் கண்ணைப் பொத்திக் கொண்டு கீழ்க்கண்ட பாடலைப் பாடுவார். முன்பே தன் கட்சியிலிருப்பவர்களுக்கெல்லாம் பூவின் பெயர்களில் ஒன்றினைக் கூறியிருப்பர்.

மல்லிகைப் பூவே
மெல்லவந்து
கிள்ளிப்போ

மேற்கண்ட அடிகளைத் திருப்பித் திருப்பிச் சொல்லு வார். 'மல்லிகைப்பூ' என்ற பெயருக்குரியவர் எழுந்து வந்து கண்பொத்தப்பட்டவரைக் கிள்ளிவிட்டு மறுபடியும் தன் இடத்தில் உட்கார வேண்டும். கண் விடுவிக்கப் பட்ட வுடன் யார் அவரைக் கிள்ளிவார் என்று சொல்லவேண்டும். வாய்ப்பு நிலை விளையாட்டில் மறைமுகமாகப் பெயர் வைப்பதற்குப் பாடல் பயன்படுவதைக் காணலாம். எ.டு. மெல்லவந்து மெல்லப்போ என்ற விளையாட்டில் இம்முறை யைக் காணலாம்,

பொருளினை ஒளித்துவைக்க வாய்ப்புக் கொடுக்கும் பாடல் :

இவ்வகையில் அமையும் விளையாட்டுகள் தன் நிலையி லும் அமையலாம் அல்லது கட்சியினராகப் பிரிந்தும் செயல் படலாம். எ.டு. மாது மாது

மாது மாது
மன்னந் தம்பி
கோது கோது
கொழுந்து வெத்திலை
சொல்லிக் கொடுத்தான்
ஆத்தாளோ
அம்மாளோ
டயக்கோ
டம்மக்கோ

தரையில் மணலைப் பரப்பி அதில் பதினான்கு குழி களைப் பறித்திருப்பர். ஒருவர் பாடலைப் பாடிக்கொண்டே தன் கையிலுள்ள சிறு கல்லினைப் பதினான்கு குழிகளில் ஒன்றினில் வைப்பார். அப்போது ஒவ்வொரு குழியினையும் தொட்டுப் பாடல் பாடுவர். பாடல் முடிவதற்குள் ஏதாவது ஒரு குழியில் அக்கல்லினைப் புதைத்துவிடுவர். இங்கு கல்லினை ஒளித்துவைக்க வாய்ப்புக் கொடுக்கும் நிலையில் பாடல் பயன்படுவதைக் காணலாம்.

விடுகதையமைப்பில் புதிருடன் அமையும் பாடல் :

விளையாடுபவர் இரண்டு கட்சியினராகப் பிரிந்து கொள்வர். ஒரு கட்சியிலுள்ளவர் தங்களுக்குள் ஒரு முடிவு செய்துகொள்வர். அப்படி முடிவு செய்து ஒரு பறவையினைப் பற்றி வர்ணிப்பர். அவ்வருணனை புதிர்போல் இருக்கும். எதிர்க்கட்சியினர் அதை விடுவிக்க வேண்டும். எ.டு. இம்மாம் பறவை,

கன்னங்கரேலென்று இருக்கும்
இரண்டு காலிருக்கும்
இரவில் பார்க்கமுடியாது
பகலில் பார்க்கலாம்
இம்மாம் இம்மாம் பறவை
அதன் பெயரென்ன?

இறுதி வரியினைச் சொல்லும்போது கையினால் பறவையின் அளவைக் குறிப்பால் காட்டுவார். பாடலில் இடம் பெறும் வருணனையும் கையினால் காட்டும் அளவுபற்றிய குறிப்பினையும் கொண்டு பறவையினை இனங்கண்டு கொள்ளவேண்டும்.

உயிரினங்களுடன் அமையும் பாடல் :

மழைக்காலம் தொடர்ந்த நிலையில் தாவரங்கள் செழிப்புற்றுப் பசுமையாக இருக்கும். தட்டான், வண்ணத்துப் பூச்சி போன்றவைகள் மிகுதியாகப் பெருகி நிற்கும் காலமாகும். அப்பொழுது சிறுவர், சிறுமியர்க்கு அதனைப் பிடித்து விளையாடுவது சிறந்த பொழுதுபோக்கு விளையாட்டாக அமைகிறது.

சிறுவராயிருந்தால் குரங்குத் தட்டானையும் (உருவத்தில் பெரியது) சிறுமியராயிருந்தால் 'ஊசித் தட்டானையும் (சிறியது) (வண்ணமாகப் பசுமை நிறத்தில் இருக்கும்) பிடித்து விளையாடுவர்.

தட்டானின் சிறகுகளைக் கையில் பிடித்துக் கொண்டு சிறுகல்லினைத் தூக்கச் சொல்வர். அப்பொழுது,

கல்லைத் தூக்கு
கருப்பட்டி தாரேன்

என்ற வரிகளைத் திரும்பத்திரும்பச் சொல்வர்.

ஈசல் புற்றினைக் கண்டுபிடித்துப் பிடிப்பதில் சிறுவர் விருப்புடன் ஈடுபடுவர். ஈசல் புற்றில் வாயினை வைத்து துளுவு...துளுவு...என்ற ஒலிக்குறிப்புச் சொல்லினைப் பயன் படுத்துவர். பின் புற்றிலிருந்து ஈசல் வருவதற்காகக் கீழ்க் கண்ட பாடலைப் பாடுவர்.

ஈச ஈசலே
ஈசக் கரையானே
ஆத்தாளும் அப்பனும்
ஆத்தங்கரையிலே
செத்துக் கிடக்காக
சில்லாம்பாயைத் தூக்கிக்கிட்டு
சிலுக்குச் சிலுக்குன்னு ஓடிவா...

ஈசல் உணவுப் பொருளாகப் பயன்படுத்தப்படும். ஈசல் புற்றிலிருந்து ஒவ்வொன்றாக வெளிவரும். எனவே, பெரி யோர்கள் பொறுமையாக இச்செயலில் ஈடுபடுவதில்லை. விளையாட்டுப்போக்கில் சிறியோர்கள் இச் செயலில் ஈடுபடு வார்கள்.

தெய்வ நம்பிக்கை தொடர்பானவை :

கிராமத்துப் பணக்காரச் சிறுவர் முதல் ஏழை உழவனின் மகன்வரை அனைவரும் விரும்பிப் பங்கேற்கும் இவ்விளை யாட்டு கார்த்திகைக்கு முன்வரும் பரணி நாளன்று மேற் கொள்ளப்படுகிறது.

விளையாட்டில் பங்குகொள்வோர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேடம் போட்டிருக்கவேண்டும். புலி போலவும் கரடி போலவும் மான் போலவும் குதிரை போலவும் பிச்சைக் காரர் போலவும் நரிக்குறவர் போலவும் குடுகுடுப்பைக்காரர் போலவும் வேடமிட்டுக் கொள்வர். அனைவரும் ஒன்று

சேர்ந்து கொண்டு ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் ஒவ்வொரு வீடாகப் போய் வருவர். அப்போது கீழ்க்கண்ட பாடலினைப் பாடி வருவர்.

பரணி பரணி
பப்பரணி
பரணியென்று பாடவேண்டும்
பதக்கு நெல்லு போடவேண்டும்
பிள்ளையார் கோயிலிலே
பிள்ளைச்சத்தம் கேட்குதம்மா
சங்கரநயினார் கோயிலிலே
சங்குச் சத்தம் கேட்குதம்மா
நாளிநெல்லு போட்டவங்க
நல்லபிள்ளை பெறுவாங்க
குறுணிநெல்லு போட்டவங்க
குந்தாணிப்பிள்ளை பெறுவாங்க
முக்காதே முணங்காதே
மூலைவீட் டிலே இருக்காதே
சட்டுப்புட்டுன்னு எந்திரிச்சு
சட்டிபானையிலே கைவை
பரணியென்றும் பாடவேண்டும்
பதக்குநெல்லுப் போடவேண்டும்

இப்பாடலைப்பாடி ஒவ்வொரு வீட்டிலும் ஏதாவது ஒரு பொருளினைப் பெறுவர். இறுதியில் கோவிலில் அப்பொருட் களை எல்லாம் வைத்து வழிபட்டுத் திரும்புவர்.

நடித்தல் தொடர்பான விளையாட்டில் பாடல் :

இவ்வகை விளையாட்டுகளில் பாத்திரங்களின் தன்மைக் கேற்ற வகையில் பாடல்கள் அமைகின்றன. இப்பாடல் களைக் கீழ்க்கண்ட பிரிவுகளில் பிரிக்கலாம்.

1. தனிநிலையில் அமைபவை
2. கட்சி அல்லது குழுநிலையில் அமைபவை.

1. தனிநிலையில் அமைபவை :

எ.டு. கணவன் மனைவி விளையாட்டு.

வழக்கில் 'புருஷன் பெஞ்சாதி' விளையாட்டென்று கூறப்பெறும். பெரும்பாலும் சிறுமியரே இவ்விளையாட்டில் கலந்துகொள்வர். ஒருவர் கணவராகவும், மற்றொருவர் மனைவியாகவும் விளையாடுவர். இருவருக்குமிடையே கீழ்க்கண்ட நிலையில் உரையாடல் நிகழும்.

மனைவி : கீரை விதைப்போம்
கீரை விதைப்போம்
வாடா கோமாளி.

கணவன் : கீரை விதைச்சா
கோழி கிண்டும்
போடி நான் மாட்டேன்.

மனைவி : கோழி கிண்டினா
வேலியடைப்போம்
வாடா கோமாளி.

கணவன் : வேலியடைச்சா
வெள்ளாடு தாவும்
போடி நான் மாட்டேன்.

மனைவி : வெள்ளாடு தவ்வுனா
தண்டம் போடுவோம்
(காலை ஒடிப்போம்)
வாடா கோமாளி.

கணவன் : காலை வெட்டினால்
ஜெயிலுக்குப் போகனும்
போடி நான் மாட்டேன்.

மனைவி : ஜெயிலுக்குப் போனால்
கோர்ட்டுக்குப் போகலாம்
வாடா கோமாளி.

கணவன் : கோர்ட்டுக்குப் போனால்
காசு வேணும்
போடி நான் மாட்டேன்.

மனைவி : காசு வேணும்னா
சம்பாதிக்கப் போகலாம்
வாடா கோமாளி.

கணவன் : காசு சம்பாதிச்சா
மேல் வலிக்கும்
போடி நான் மாட்டேன்.

மனைவி : மேல் வலிச்சா
சோறு தாரேன்
வாடா கோமாளி.

கணவன் : சோறு தின்னா
விக்கிக்கிடும்
போடி நான் மாட்டேன்

மனைவி : விக்கிக்கிட்டா
தண்ணி தாரேன்
வாடா கோமாளி

கணவன் : தண்ணிபட்டா
செத்துப் போவேன்
போடி நான் மாட்டேன்.

மேற்கண்ட பாடல் இராமநாதபுரம் மாவட்டத்தில் காணப்படுவதாகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் இதே பாடல் சிறிது வேறுபாடுகளுடன் வழக்கில் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

மனைவி : கீர தோட்டத்திலே கீர வெதக்கலாம் வாங்க
மச்சான் வாங்க.

கணவன் : கீர வெதச்சா கோழிகிண்டும்
போடி நா வரல.

மனைவி : கோழி கிண்டினா வேலிபிடிப்போம்
வாங்க மச்சான் வாங்க

கணவன் : வேலி பிடிச்சா வெள்ளாடு மேயும்
போடி நா வரல.
மனைவி : வெள்ளாடு மேஞ்சா பிடிச்சடைப்பம்
வாங்க மச்சான் வாங்க
கணவன் : பிடிச்சடச்சா தெண்டங்குடுக்கணும்
போடி நா வரல
மனைவி : தெண்டம் போட்டா உழச்சுக் குடுப்பம்
வாங்க மச்சான் வாங்க
கணவன் : உடம்புழச்சா மேல்வலிக்கும்
போடி நா வரல
மனைவி : மேல் வலிச்சா வெந்நீர் தாரேன்
வாங்க மச்சான் வாங்க
கணவன் : வெந்நீர் விட்டா உடல்வியர்க்கும்
போடி நா வரல.
மனைவி : உடல்வியர்த்தா விசிறித்தாறேன்
வாங்க மச்சான் வாங்க
கணவன் : விசிறித் தந்தா உடல்குளிரும்
போடி நா வரல.
மனைவி : உடல் குளிர்ந்தா புடிச்சி விடறேன்
வாங்க மச்சான் வாங்க
கணவன் : புடிக்க வேண்டாம் சும்மா கெடக்கேன்
போடி நா வரல
மனைவி : சும்மா கெடந்தா சோம்பல் வரும்
வாங்க மச்சான் வாங்க
கணவன் : சோம்பல் வந்தால் வேலை செய்வேன்
போடி நா வரல
மனைவி : வேலை செய்தா தூக்கிச் சுமப்பேன்
வாங்க மச்சான் வாங்க
கணவன் : தூக்கிச் சுமந்தா ஊர் சிரிக்கும்
போடி நா வரல

மனைவி :	கிர தோட்டத்தில கிரவெதக்கலாம்		
	வாங்க மச்சான் வாங்க		
கணவன் :	கிர வெதக்கலாம் கிர வெதக்கலாம்		
	வாடிபுள்ள வாடி		

2. கட்சி அல்லது குழுநிலையில் அமைபவை :
எ.டு. பணம் சம்பாதித்தல்.

இவ்விளையாட்டில் கணவனாக நடிப்பவர் கப்பலேறி வெளிநாடு சென்று சம்பாதிக்கப் புறப்படுவர். புறப்படுமுன் அப்பா, அம்மா, அக்கா, தங்கை, தம்பி, மனைவி, வைப்பாட்டி இவர்களிடம் சென்று விடைகேட்பார். அதுவும் பாடலாக அமையும். மற்றவரும் பாடலிலேயே பதில் சொல்லுவார். பாடலும் பதிலும் கிழே தரப்படுகிறது.

மகன் ;	அம்மாவே	அம்மா :	போடா மகனே
	சிறு அரளிப்பூவே		வாடா மகனே
	நான் போய் வாரேன்		போன உடனே
	சிறுகப்பலுக்கு		கப்பல் ஓடிவரும்
மகன் :	அப்பாவே—சிறு	அப்பா :	போடா மகனே
	அரளிப்பூவே		வாடா மகனே
	நான் போய்வாரேன்		போன உடனே
	சிறுகப்பலுக்கு		கப்பல் ஓடிவரும்
சகோதரன் :	அக்காவே	அக்கா :	போடா தம்பி
	அரளிப்பூவே		வாடா தம்பி
	நான் போய்வாரேன்		போன உடனே
	சிறுகப்பலுக்கு		கப்பல் ஓடிவரும்
சகோதரன் :	தங்கையே—சிறு	தங்கை :	போடா அண்ணா
	அரளிப்பூவே		வாடா அண்ணா
	நான் போய்வாரேன்		போன உடனே
	சிறு கப்பலுக்கு		கப்பல் ஓடிவரும்

சகோதரன் : தம்பியே—சிறு அரளிப்பூவே நான் போய்வாரேன் சிறுகப்பலுக்கு	தம்பி : போடா அண்ணா வாடா அண்ணா போன உடனே கம்பல் ஓடிவரும்
கணவன் : பொண்டாட்டியே—சிறு அரளிப்பூவே நான் போய்வாரேன் சிறுகப்பலுக்கு	மனைவி : போங்களேன் வாங்களேன் போனவுடன் கப்பல் ஓடிவரும்
கணவன் : வைப்பாட்டியே சிறுவைப்பாட்டியே மாங்குயிலே நான் போய்வாரேன் சிறுகப்பலுக்கு	வைப்பாட்டி : போனாலன்ன வந்தாலென்ன போனவுடனே கப்பல்கவிழ்ந்து போகும்.

எல்லோரும் நன்முறையில் பதில் சொல்ல வைப்பாட்டியாக 'நடிப்பவர்' நகைச்சுவை படும்படி மாற்றிச்சொல்வார். இத்துடன் விளையாட்டும் முடிவடையும். நடித்து விளையாடப் பெறும் விளையாட்டு முறை இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டுமே அமைகிறது.

செயல்களுடன் தொடர்புடைய பாடல் :

உரையாடலுடன் தொடர்புடைய இவ்வரி விளையாடல்களில் உரையாடலுடன் சிலசெயல்களும் இடம்பெறுகின்றன. எ. டு. அக்கக்கா கிளி செத்துப்போச்சு.

கலந்து கொள்ளும் சிறுமியர் வட்டாக உட்கார்ந்து கொள்வர். அவர்களுக்குள் கீழ்க்கண்ட உரையாடல் அமையும்.

சிறுமி : 1 : அக்கக்கா கிளி செத்துப்போச்சு
சிறுமி : 2 : எப்ப?
சிறுமி : 1 : இப்ப
சிறுமி : 2 : எப்படி?
சிறுமி : 1 : இப்படி

இறுதிவரியினைச் சொல்லிக்கொண்டு தங்கள் கால்களில் ஒன்றினை மையத்தில் நீட்டிக்கொள்வர். இருவர் உரையாடி வரும் முறை ஒரு சுற்று முடிந்துவிட்டால் அடுத்த சுற்றில் அடுத்த காலினையும் உள்ளே வைத்துக் கொள்வர். பின் மூன்றாவது முறை உரையாடல் தொடரும்போது ஒருவர் மடியில் ஒருவர் சாய்ந்து கொள்வர். நான்காவது சுற்றில் இவ்வுரையாடல் அமையும்போது தங்கள் இருகால்களையும் தட்டிக்கொண்டு 'அக்கக்கா கிளி செத்துப்போச்சு' என்ற வரிகளைத் திருப்பித்திருப்பிச் சொல்வதுடன் ஆட்டம்முடிவுறும். இத்தகு விளையாட்டுக்களில் சிறுமியர் பங்கேற்கின்றனர்.

இயக்கவகை விளையாட்டுகளில் பாடல்களின் பயன்பாடு :

மனமகிழ்ச்சி நிலை விளையாட்டுகளுள் இவ்வகையும் ஒன்றெனலாம். இங்கு ஒரே செயல், அதாவது சுற்றுதல் என்ற செய்கை திரும்பத் திரும்பச் செய்யப்படுகிறது. அதற்கேற்ப பாடலும் திரும்பித் திரும்பிப் பாடப்படுகிறது.

ஒருவர், மூவர், பலர் பங்குகொள்ளும் தன்மைகளில் பாடல்வரிகள் மிகக் குறுகிய நிலையில் அமைகின்றன.

எ. டு.
கரகர வண்டி காமாட்சி வண்டி
ஆட்டுப் பூட்டு அண்ணன் கொடுத்த சீட்டு
சீட்டு பூட்டு சிந்தாமணி நோட்டு

இருவர் பங்குகொள்ளும் பிஸ்ஸாலே பறத்தல், மத்தாடுதல் போன்ற விளையாட்டுகளில் பாடல் நீண்ட அளவில் இடம் பெறுகின்றன.

பிஸ்ஸி பிஸ்ஸாலே
பீர்க்கம் பிஸ்ஸாலே
நண்டைப் புடிச்சாளே
நாளியில் போட்டாளே
சுட்டுத் தின்றாளே
சுருங்கிப் போனாளே

வேகமாகச் சுற்றுவதைப் 'பறத்தல்' என்று குறிப்பிடு கின்றனர். விளையாட்டில் இடம்பெறும் பாடல் வரியினைக் கொண்டு 'பிஸ்ஸாலே பறத்தல்' என்ற பெயருடன் அழைக்கப் படுகிறது.

மேற்சுட்டிய விளையாட்டுமுறை மதுரை மாவட்டத்தில் காணப்படுவதாகும். திருநெல்வேலியில் கீழ்க்கண்ட பாடல் வழக்கில் இடம்பெறுகிறது.

(1) அல்லல்லி மூக்குத்தி
அரைப்பணத்த மூக்குத்தி
கல்யாண வாசலிலே
கண்டெடுத்த மூக்குத்தி
காட்டிலே டின்னு
கருங்கோழி முட்டை
இளசிலே பட்டு
வீரமணி தட்டு

(2) கத்திரிக்கா காட்டிலே
களைவெட்ட நேரமில்லை
வெட்டியிலே சோறாக்கி
விளையாட நேரமில்லை
தும்பி துளசி
தூக்கிப் போட்டா மம்புட்டி

(3) இரட்டைக்கைச் சித்தப்பா
ஓடிவாடா பெரியப்பா

மேற்கண்ட பாடல்வரிகளைக் கொண்டு இவ்விளை யாட்டு 'அல்லி அல்லி மூக்குத்தி' என்றும் 'தும்பி துளசி' என்றும் 'இரட்டைக் கைச் சித்தப்பா' என்றும் அழைக்கப் படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பிஸ்ஸாலே பறத்தல் என்ற பெயர் இடம்பெறாமல் சுற்றி விளையாடுதல் என்றே கூறப்படுகிறது.

நல்லண்ணெ நல்லண்ணெ
நாற்பத்தாறு தீப்பெட்டி
வாராரய்யா சுப்பையா
வழிவிடம்மா மீனாட்சி
தெப்பக் குளத்திலே தண்ணி
தேவடியா வீட்டிலே குத்தவச்சி
மானத்திலே ரோடுபோட்டு
மகாலிங்கம் பொட்டுவச்சு
டயக்கோ டம்மக்கோ

'மத்துன்னா மத்து' என்ற விளையாட்டு திருச்சி மாவட்டத்தில் பச்சை மலைப்பகுதியில் காணப்படுவதாகும். இரு சிறுமியர் கலந்துகொண்டு விளையாடக் கூடிய விளை யாட்டாகும். ஒரு சிறுமி உட்கார்ந்து கொள்ள இன்னொரு சிறுமி நின்றுகொள்ளும். கைகளை மாறிமாறித் தட்டிக் கொண்டே கீழ்க்கண்ட பாடலினைப் பாடுவர்.

மத்துன்னா மத்து
மாதுளங்கா மத்து
தண்ணிக்குள்ளே பொண்ணு
தளம்புதடி மத்து
உள்ளூர்தேசம்
உருமி உருமி வாராண்டி
பட்டயத்துத் தேசம்
பறையன் கொண்டு வாராண்டி
அக்கரும்பு
ஆவரம்பூ
அக்கா கொண்டைக்குத் தாழம்பூ
இக்கரும்பு
ஈவரம்பு
என் கொண்டைக்கு
மல்லிகைப்பூ

சாரோட
சருக்கோட
சந்தனக் கட்டை
ஏத்தோட
குங்குமம் இரண்டு
அள்ளிப்போட்டு
உட்காரு பெண்ணே
உட்காரு

பின் நிற்கும் சிறுமி உட்கார உட்கார்ந்திருந்த சிறுமி நின்று கொள்ள விளையாட்டு முன்போலத் தொடரும்.

பலர் கலந்துகொள்ளும் கும்மி விளையாட்டில் கைத் தாளத்திற்கு அல்லது கைத்தட்டிற்கேற்ப பாடல் வரிகள் அமைந்திருப்பதைக் காணலாம். கைதட்டும் முறை குனிந்து கீழ்ப்புறம் நோக்கி ஒரு தட்டும் பின், கைகளை தோளுக் கருகில் உயர்த்தி ஒரு தட்டும் தட்டவேண்டும். இடையில் தட்டும் இயல்பிற்கேற்பப் பாடவேண்டும்.

ஒண்ணாம் கிழமைக்கு
ஒருலெட்சம் பூவெடுத்தேன்
தானானே தானானே தானானே தானானே
இரண்டாம் கிழமைக்கி
இரண்டு லட்சம் பூவெடுத்தேன்
தானானே தானானே தானானே தானானே

இவ்வாறு தொடர்ந்து பத்தாம் கிழமை வரைப்பாடுவர். 'தானானே' என்பது முதல்வரிக்குப் பயன்படுத்திய சந்தம் விட்டுப்போய் விடாமல் இருப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய சொல்லாகும்.

சிறுதெய்வ வழிபாட்டு முறையில், 'முளைப்பாறி' (சூரிய வெளிச்சம் படாமல் பானையில் வைத்து வளர்க்கப்படும் நவதானியச் செடி) வைத்துப் பெண்கள் கும்மியடிப்பர்.

மேலும் இக்கும்மி வழிபாட்டுடன் தொடர்புடையதாகவும் இருக்கிறது. சிறுமியர் பங்குகொள்ளும் 'கும்மிவிளையாட்டு' பெரியவரின் செய்கையினைப் பார்த்துப் போலச்செய்யும் அடிப்படையில் அமைந்ததெனக் கொள்ளலாம்.

இது மதுரை மாவட்டத்தில் நிலாக்காலத்தில் சிறுமியரால் விளையாடப்பெறும் விளையாட்டாகும்.

பச்சைமலையில் வாழும் மலையாளத்தாரிடமும் இக்கும்மி முறை இடம்பெறுகிறது. கும்மியடிப்பதில் மூன்று வகைகள் காணப்படுகின்றன, வட்டமாக நின்று கும்மியடிக்கும் முறைக்கு 'உருண்டகும்மி' என்றும், வரிசையாக நின்று எதிரும் புதிருமாகக் கும்மியடிக்கும் முறைக்கு 'வாலுகும்மி' என்றும், வரிசையாக நின்று ஓடிக்கொண்டே கும்மியடித்தலை 'ஓடுகும்மி' என்றும் அழைப்பர். கும்மியடிக்கும்போது அமையும் பாடல் பின்வருமாறு :

ஒண்ணா ஒண்ணா ஏலேலோ
மரத்தைவெட்டி மாமரமா ஏலேலோ
ஊஞ்சல்கட்டி ஊஞ்சலிலோ ஏலேலோ
ஆடாங்கிளி ஆண்கிளியும்
இல்லைமச்சான் பெண்கிளியும்
தாநா நல்லா ஏலேலோ
ராமருடோ ஏலேலோ
வாழ்ந்த கிளி பச்சைக்கிளி

இவ்வாறு பத்து எண் வரைக்கும் தொடர்ந்து பாடுவர்.

சிறுமியர் கலந்துகொள்ளும் விளையாட்டில் ஊஞ்சலும் ஒன்றாகும். மரத்தின் கிளைகளில் கயிறுகளைக் கட்டி கீழே உலக்கையின் இருமுனைகளிலும் அக்கயிற்றினைப் பிணைத்திருப்பர். ஊஞ்சலில் தொடர்ந்து ஆடுவதால் மரக்கிளையில் கயிறு உராய்ந்து அறுந்து போகாமல் இருப்பதற்குச் 'சாக்கினையோ' அல்லது 'வைக்கோலினையோ' வைத்து அதன் மேல் கயிறு வரும்படி அமைத்துக் கொள்வர்.

ஒரு ஊஞ்சலில் நாலைந்துபேர் கூட உட்கார்ந்து கொள்ளலாம். உட்காரும்போது ஒருவருக்கொருவர் எதிரெதிரே மாறி மாறி உட்கார்ந்து கொள்வர். ஊஞ்சல் அசைந்து ஆடத்துவங்கினால் பாடல்பாடுவர். காட்டாக ஒரு ஊஞ்சல் பாடல் கீழே தரப்படுகிறது.

ஒண்ணாங் குடுக்கச்சி நெட்டப்பனை
ஓரிலை விட்டதும் தாளிப்பனை
தா தங்கச்சி மாலை தா
தலை குலுங்கி மாலை தா

இரண்டாங் குடுக்கச்சி நெட்டப்பனை
ஈரிலைவிட்டதும் தாளிப்பனை
தா தங்கச்சி மாலை தா
தலை குலுக்கி மாலை தா

இவ்வாறு தொடர்ந்து 'பத்து' எண் வரும்வரை பாடல் அமையும். ஊஞ்சாலைப் பாடல் இல்லாமல் பண்டிகையுடன் தொடர்பு படுத்தாமல் ஆடப்படுவது கன்னியாகுமரி தவிர்த்த மற்ற மாவட்டங்களில் காணக் கூடியதாகும்.

குழந்தைப் பாடல்கள் :

குழந்தை விளையாட்டுகளுக்குரிய பாடல்கள் பரம்பரை பரம்பரையாகத் தமிழ்நாட்டில் வழங்கிவருகின்றன. அவற்றில் தொடர்ச்சியாகப் பொருள் அமையாவிட்டாலும் தாளக்கட்டும், குழந்தைகளின் உள்ளத்தைக் கவரத்தக்க வார்த்தைகளும் ஒலியும் அமைந்திருக்கும். சுருங்கக் கூறினால் சொற்சேர்க்கைதான் சிறப்பாக அமைந்திருக்கும். பொருட் சிறப்பு அமையாது. அவர்களுக்குச் சொற்களும் விளையாட்டுப் பொம்மைகள்தான் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுவார்கள்.

ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஏற்ற பாட்டு எட்டு வரி, பத்து வரிகளுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். கூடுமானவரை ஒவ்வொரு வரியோடு ஒரு வாக்கியம் முடிந்து

விட வேண்டும். நாலுவரி, எட்டு வரிகளுக்கு மேல் ஒரு வாக்கியம் இருந்தால் மூச்சுப்பிடித்துப் பாடவும் நினைவில் வைத்துக் கொள்ளவும் குழந்தைகளால் இயலவில்லை. பாட்டு வேடிக்கையாய் இருந்தால் நன்கு சுவைத்துப் பாடுகிறார்கள். தெரிந்த ஒரு பொருளைப் பற்றி எளிய சொல்லிலே, இனிய சந்தத்திலே பாடினால் மனதில் எளிதில் பதித்துக் கொண்டு விடுகிறார்கள். முதலில் வந்த சொற்றொடர்களே மீண்டும் மீண்டும் பல்லவி போல வந்தால் இவர்களது குதூகலம் அதிகமாகிறது.

மேலே குறிப்பிட்டவையனைத்தும் பொதுவாகக் குழந்தைப் பாடல்கள் எவ்வகையில் அமைகின்றன என்ற நிலையில் தெளிவு ஏற்படுத்துவதாகக் கொள்ள முடியும். குழந்தைகள் தானாக விளையாடும் பருவம் வரும் வரைக்கும் பிறரைச் சார்ந்திருக்கின்றன. வளர்ந்த குழந்தைகள் பிறரைச் சார்ந்திராமல் தானாக விளையாடத் துவங்கும். இவ்வியல்பை அடிப்படையாகக் கொண்டு நோக்கின் அவர்கள் பாடலில் கீழ்க்கண்ட இரு பிரிவுகள் அமையும்.

1. குழந்தைக்காகப் பிறர் பாடுபவை
2. குழந்தையே பாடுபவை

1. குழந்தைக்காகப் பிறர் பாடுபவை :

இவ்வகையில் அமையும் பாடல்கள் மேலும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்க வழியுண்டு.

1. கைவிரலை அல்லது கையினைத் தொடாமல் அமையும் பாடல் வகை.

2. கைவிரலை அல்லது கையினைத் தொட்டு அமையும் பாடல் வகை.

1. கைவிரலை அல்லது கையினைத் தொடாமல் அமையும் பாடல் வகை :

இவ்வகைப் பாடல்களின் நோக்கம் குழந்தைகளை மகிழ்ச்சியுண்டு பண்ணுவதற்கெனலாம். அம்மகிழ்ச்சி நிலையினை இரண்டு வகையில் பார்க்கலாம்.

1. அசைதல் தொடர்பான மகிழ்ச்சி
2. கூச்ச உணர்வு ஏற்படுத்திச் சிரிக்கவைக்கும் நிலை

1. அசைதல் தொடர்பான மகிழ்ச்சி :

எ.டு. தென்னைமரத்தில் ஏறாதே.

காலில் உட்காரவைத்துக் குழந்தையை மேலும் கீழும் அசைத்தவாறு கீழ்க்கண்ட பாடலைப் பாடுவர்.

தென்னைமரத்திலே ஏறாதே
தேங்காயைப் பறிக்காதே
மாமரத்திலே ஏறாதே
மாங்காயைப் பறிக்காதே
ஆத்துலே விழறியா
சேத்துலே விழறியா
அம்மாள் வீட்டில்
குளத்திலே விழறியா

என்று பாடிக் குழந்தையை உயரத்தூக்கித் தரையில் நிறுத்துவர். மேலும் கீழும் அசைந்தவாறு இப்பாடலை அனுபவிக்கும் இயல்பு குழந்தைகளிடம் இடம்பெறுவதைக் காணமுடிகிறது.

2. கூச்ச உணர்வு ஏற்படுத்திச் சிரிக்க வைக்க நிலை :

விளையாட்டினை நடத்துபவர் கீழ்க்கண்ட பாடலைப் பாடுவர்.

வெத்தலை
பாக்கு
புகையிலை
சுண்ணாம்பு
எங்க ஆத்தாளுக்குக்
கஞ்சி கொண்டுபோறேன்
இந்தவழி இந்தவழி

விளையாட்டினை நடத்தும் தாய்ச்சி மேற்கண்ட பாடலைப் பாடி குழந்தைக்குக் 'கிச்சுக்கிச்சு'க் காட்டி மகிழ்விப்பர். இவ்விளையாட்டுமுறை திருநெல்வேலி மாவட்டத்தில் காணக்கூடியதாகும்.

கைவிரலை அல்லது கையினைத் தொட்டு அமையும் பாடல் வகை :

விளையாட்டில் கலந்துகொள்ளும் குழந்தைகளெல்லாம் வட்டமாக உட்கார்ந்துகொள்ளும். தாய்ச்சியாக இருப்பவர் ஒவ்வொரு குழந்தையின் கைவிரலையோ அல்லது கையினையோ தொட்டுப் பாடி வருவார். பாடலின் இறுதிச் சொல் யார் கைவிரல் அல்லது கையில் முடிகிறதோ அவர் கைவிரலினை மடக்கிக் கொள்ளலாம் அல்லது கையினைத் திருப்பி வைத்துக் கொள்ளலாம். அல்லது கையினை எடுத்து வைத்துக்கொள்ளலாம்.

குழந்தை விளையாட்டுகளில் இவ்வகைப் பாட்டு மிகுந்த நிலையில் அமைகின்றன. எ.டு. சில்லாப்பறண்டி, அத்தளி புத்தளி, கைக்குத்துதல், காசிக்கவடி, ஒரு பத்தி இருபத்தி. எடுத்துக் காட்டிற்காகக் கீழே ஒரு விளையாட்டு விளக்கப்படுகிறது.

விளையாடும் குழந்தைகள் வட்டமாக உட்கார்ந்து கொண்டு தங்கள் கையினைத் தரையில் வைத்திருப்பர். 'தாய்ச்சி' கீழ்க்கண்ட பாடலைப்பாடி ஒவ்வொருவர் கையினையும் தொட்டுவருவார்.

ஒருப்பத்தி
இருப்பத்தி
ஓரிய
மங்கலம்
செப்பு
சிலந்தி
முன்னிமுத்து
கூத்தாடி

வணக்கம்
திரிச்சுக்கோ

'திரிச்சுக்கோ' என்ற இறுதிச்சொல் எக்குழந்தையின் கையில் முடிகிறதோ அக்குழந்தையின் கை எடுக்கப்பட வேண்டும். யாருடைய கை இறுதியில் எடுக்கப்படுகிறதோ அவர் தோற்றவர். மறுபடியும் அவர் கையினைத் தொட்டும், வானத்தைக் காட்டியும் மேற்கண்ட பாடலைப் பாடுவதுடன் ஆட்டம் முடியும்.

2. குழந்தையே பாடுபவை :

இவ்வகைப் பாடல்கள் குழந்தையின் மொழிப்பயிற்சியினை வளர்ப்பனவாகவும் மனனம் செய்துகொள்ளத்தக்க வகையிலும் அமைந்திருக்கும். இவ்வகையைச் சார்ந்த பாடல்கள் விளையாட்டுப் பாடல்களாக இருந்தாலும் அப்பாடல்கள் குழந்தைகளின் மனம், பருவம், விருப்பம் இவற்றிற்கேற்ப அமைந்திருப்பதாக மட்டுமின்றிக் குழந்தைகளின் மன வளர்ச்சியையும் கவனத்தில் கொண்டுள்ளன எனத் தெரிய வருகிறது. இவ்வகை, வளர்ந்த குழந்தை அல்லது சிறுவர் சிறுமியரிடம் இடம்பெறும்.

'வினாவிடைச் சங்கிலி' வளர்ந்த குழந்தையிடம் இடம் பெறும். உரையாடல் விளையாட்டெனலாம். ஒரு குழந்தை ஒரு கேள்வியைக் கேட்கும் அதற்கு மற்றொரு குழந்தை விடை அளிக்கும். அந்த விடையைக் கொண்டே கேள்வி கேட்ட குழந்தை மற்றொரு கேள்வியைக் கேட்கும். மறுபடியும் விடையும் வினாவுமாகச் சங்கிலிபோலத் தொடர்ந்து கொண்டே வரும். கடைசியில் ஏதாவது அழகான வார்த்தையில் கொண்டு வந்து முடிப்பதைக் காணலாம். வார்த்தைகளில் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு இருக்குமே ஒழிய பொருளிலோ அல்லது சொல்லும் பொருள்களின் இயல்பிலோ ஒன்றுக்கு ஒன்று சம்பந்தம் அநேகமாக இராது.

எ.டு.

மா மா...	என்ன மா?
அரிசி மா	என்ன அரிசி?
வெள்ளை அரிசி	என்ன வெள்ளை?
பால் வெள்ளை	என்ன பால்?
ஆட்டுப்பால்	என்ன ஆடு
வேலி ஆடு?	என்ன வேலி?
திருநெல்வேலி	என்ன திரு?
தேங்காய்த்திரு	என்ன தேங்காய்?
மலைத் தேங்காய்	என்ன மலை?
சபரி மலை.	

இவ்வகை விளையாட்டுகளில் இடம்பெறும் பாடல் குழந்தைகளின் ஐயப்பாட்டினைத் தெரிவிக்கும் எனலாம். தன் சுற்றுப்புறத்தில் உள்ள தாவரங்கள், விலங்குகள், ஊர் களின் பெயர்களைப் புரிந்துகொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

உடல்திறனைப் பயன்படுத்தி விளையாடப் பெறும் தொடுதல் செய்கையான விளையாட்டுகளிலும், பிடித்து விளையாடும் விளையாட்டுகளிலும் போட்டி விளையாட்டு களிலும் பெரும்பான்மையாகப் பாடலிடம் பெறவில்லை எனலாம். உடல்திறனைக் குறைவாகப் பயன்படுத்தக் கூடிய கண்டுபிடித்தல் தொடர்பான விளையாட்டுகளிலும் நடித்தல் தொடர்பான விளையாட்டுகளிலும் பாடலிடம் பெறுவது மிகுதியாக உள்ளது. நடித்தல் தொடர்பான விளையாட்டுகளில் சிறுமியர் விரும்பிப் பங்கேற்கின்றனர். எனவே, சிறுமியர் விளையாட்டில் பாடலிடம் பெறுவது மிகுதியெனலாம். நடித்தல் தொடர்பான விளையாட்டுகள் குழுவாக இயங்கும் தன்மை உடையன. எனவே, தனி நபர் பங்குகொள்ளும் விளையாட்டுக்களைவிட குழுவாகஇயங்கும் விளையாட்டுகளில் பாடல் இடம்பெறுவது மிகுதி எனலாம்.

குழந்தைப் பாடல்கள் எளிய சொற்களுடனும் இனிய சந்தத்துடனும் திரும்பத் திரும்ப வரும் வகையிலும் எளிதில் மனதைக் கவர்ந்து மனனம் செய்துகொள்ளத்தக்க வகையிலும் அமைந்திருப்பதைக் காணலாம்.

பார்வை நூல்கள்

1. அரவிந்தன், மு.வை., தமிழக நாட்டுப்புறப் பாடல்கள், பிரகாஷ் பதிப்பகம், தஞ்சை.

2. அழகப்பன், ஆறு., நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை-1, 1973.

3. இராமநாதன், ஆ., நாட்டுப்புறவியல் ஆய்வுகள், அணியகம், சென்னை-30, 1979.

4. சண்முகசுந்தரம், சு., நாட்டுப்புற இயல் அறிமுகம், இலக்கிய மாணவர் வெளியீடு, சென்னை, 1975.

5. பாலசுப்பிரமணியன், இரா., தமிழர் நாட்டு விளையாட்டுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113, 1980.

6. லூர்து, தே., நாட்டார் வழக்காற்றியல் ஓர் அறிமுகம், பாரிவேள் பதிப்பகம், பாளையங்கோட்டை, 1976.

7. ஜகந்நாதன், கி.வா., மலையருவி (ஆய்வுரை) சரஸ்வதி மகால் வெளியீடு, தஞ்சை, 1958.

8. ஜகந்நாதன், கி வா., குழந்தை உலகம், அமுத நிலையம், சென்னை-18, 1955.

ஆங்கிலம்

9. Jan Harold Brunavand, The Study of American Folksong. W.W. Norton & Company, Inc. New York, 1978.

ERRATA

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	1	வணக்கங்கன்	வணக்கங்கள்
5	2	தொன்ம நிலையிணை	தொன்ம நிலையினை
7	14	திரகிரி	திகிரி
15	26	வாரெனென்று	வாராவென்று
16	12	மறைக்காமல்	மறக்காமல்
17	8	நிம்ருட்	நிம்றாட்
23	23	கொடுநட்டு	கோடுநட்டு
26	30	வருணள்	வருணன்
29	27	முதலியார்	முதலியோர்
31	17	கோட்பாடு	கோட்பாட்டு
34	3	அந்த	அத்த
56	9	படலம்	படலச்
86	1	—(Legends)	பழமரபுக் கதைகள் (Legends)
88	6	இவற்றால்	இவற்றில்
89	19	வெளப்பு	வெளுப்பு
92	13	நிலம்	நிறம்
93	12	சிறப்பு	சிவப்பு
94	9	லோகம்	உலோகம்
120	12	Chasen	Chaser
123	23	ஒன்றுகோர்ந்து	ஒன்றுசேர்ந்து
140	20	இவ்வரி	இவ்வகை
144	27	முளைப்பாறி	முளைப்பாரி
148	19	வைக்கநிலை	வைக்கும்நிலை
151	12	தெரிவிக்கும்	தெளிவிக்கும்

ஆசிரியரின் பிற நூல்கள்

1. தமிழர் நாட்டு விளையாட்டுகள் (1980)

2. சி. சு. செல்லப்பாவின் வாழ்க்கையும் கலையும் (1983)

3. கணியான் கூத்து (1986)

4. இதோ தமிழ் இதழ்கள் (1986)

Printed at
SRI YESES PRINT HOUSE
132, JANI JOHN KHAN ROAD
ROYAPETTAH, MADRAS – 600 014
PHONES: 83 32 31, 41 71 41